# தமிழ்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 13

**(2018ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது.)**

தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை.
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# தமிழ்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 13

**(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது.)**

தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை.
இணையத்தளம் **: www.nie.lk**
மின்னஞ்சல் **: info@nie.lk**

அச்சிடலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆசிரியர் வழிகாட்டி

தரம் - 13

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2018

தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித் துறை,
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

அச்சுப் பதிப்பு:
தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களுக்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய

ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர

பணிப்பாளர் நாயகம்

தேசிய கல்வி நிறுவகம்

மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைவதற்கும், நல்லவற்றைப் பயன்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டிகள் போன்றவையுடன் வசதி செய்து கொடுப்போரும் (Facilitator) கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும், பண்டைய அருஞ் செல்வங்களையும் கலக்கச் செய்து, தனது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்டப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை மாணவர்கள் அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி.வண. மாபுல்கொட சுமணரத்ன தேரர்,**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,**
**தேசிய கல்வி நிறுவகம்.**

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அனுமதியும்**

கல்விசார் அலுவல்கள் சபை,
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட விடய ஆலோசனை**

பேராசிரியர், சி. தில்லைநாதன்
தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்
திரு, எஸ். யோகராசா
ஓய்வு நிலைப் பேராசிரியர்
பேராசிரியர், கலாநிதி வ.மகேஸ்வரன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.
பேராசிரியர், ரமீஸ் அப்துல்லா,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
திரு.க. இரகுபரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
திருமதி. ரூபி வலன்ரினா பிரான்சிஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.
கலாநிதி. ஸ்ரீ. பிரசாந்தன்
சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்.
திரு. ஈ. குமரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**இணைப்பாக்கம்**

திருமதி. நா. சீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
திரு.மு.தயாநிதி
சிரேஷ்டவிரிவுரையாளர்,தமிழ்மொழித் துறை,தேசிய கல்வி நிறுவகம்.

**வளப் பங்களிப்பு**

திரு. எஸ். கேசவன்
ஆசிரியர், கொ / இந்துக் கல்லூரி, இரத்மலானை.
திரு. பா. மகாலிங்கசிவம்,
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்.
திரு. சி. ரமேஸ்
ஆசிரியர், யா/தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
திருமதி. ரதி தேவசுந்தரம்
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், கண்டி.
திருமதி. த. மாணிக்கராஜா
ஓய்வு பெற்ற ஆசிரியை
செல்வி. க. சந்திரகுமாரி
ஆசிரியர், கொ / விவேகானந்தா கல்லூரி, கொழும்பு.
திரு. எஸ். கணபதிப்பிள்ளை
ஆசிரிய ஆலோசகர், ஹட்டன்.

**மொழிப் பதிப்பு** திருமதி. நா. சீதரன்.

**கணினிப் பதிப்பு** செல்வி. நாகநந்தினி

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

க. பொ. த சாதாரண தரம் வரையும் தமிழ் மொழியைக் கட்டாய பாடமாகப் பயின்று வரும் மாணவர்கள் க. பொ. த உயர்தர வகுப்பில் தமிழை ஒரு பாடமாகத் தெரிவு செய்து கற்பதற்கு விரும்பாத நிலை காணப்படுகிறது. இந்நிலைக்குக் காரணம் தமிழ்ப் பாடத்திற்கான பாடப்பரப்புக்கள் அதிகமானவை, அதனால் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வது கடினம் எனப் பலராலும் பலவதமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகினறன.

எனவே, இவற்றைக் கருத்திற் கொண்டு இம்முறை புதிய பாடத்திட்டத்தில் பாடச் சுமைகள் பெருமளவில் குறைக்கப்பட்டு உள்ளது. இதனால் மாணவர்கள் தமிழ்ப்பாடத்தைத் தெரிவு செய்து ஆர்வமாகக் கற்றலில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 21ம் நூற்றாண்டில் மாணவர்களின் மொழி தொடர்பான கற்றல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அறிந்து, வினைத்திறனான முறையில் நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்களைத் துணையாகக் கொண்டு அப்பணியை நிறைவேற்றுவது ஆசிரியர்களின் கடமையாகும்.

வினாக்களுக்குப் பொருத்தமான விடைக்குறிப்புக்களை வழங்குவதும், ஒரேவிதமான கற்பித்தல் முறைகளைப் பின்பற்றுவதும் தவிர்க்கப்படல் வேண்டும். பரீட்சைக்கு முகங் கொடுக்கும் நோக்கில் மட்டுமே தமிழ்மொழிப் பாடத்தை போதிப்பதைத் தவிர்த்து மாணவர்களின் நடைமுறைத் தேவை, தொழிலுலகின் எதிர்ப்பார்ப்பு என்பவற்றுக்கு ஏற்பப் பாடத்திட்டத்தைப் பின்பற்றி, வகுப்பறையில் கற்றல் கற்பிப்பித்தலை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

க. பொ. த உயர்தரப் பிரிவில் தமிழ் மொழியை ஒரு பாடமாகத் தெரிவு செய்து கற்ற மாணவன் அதனால் பெறக்கூடிய திறன்களைக் கவனத்தில் கொள்வது கட்டாயமானதாகும். பாட உள்ளடக்கம் தொடர்பான தேடுதலைத் தவிர்த்து அப்பாடத்தினூடாக மாணவர்களடையும் திறன், மனப்பாங்கு போன்றவற்றை மிகச் சரியாக இனங்காண வேண்டும். கற்பித்தலின் போது பொருத்தமானதும் கவர்ச்சிகரமானதுமான தரவுள்ளீடுகளைப் பயன்படுத்தி, கற்பித்தல் முறைமைகளை மாற்றியமைப்பதன் மூலம் மாணவர்கள் முழுமையான தேர்ச்சியை அடைய முடியும்.

தற்கால மாணவர்களிடத்தில் வாசித்தலனுபவமும் தேடுதலும் அருகிவரும் நிலையில் மொழி வளமும் ஆக்கத்திறனும் வாய்ந்தவர்களாக அவர்களை உருவாக்குவது ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. தாய்மொழிக் கல்வியை அறிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லும் மனிதநேயப் பணியாகக் கருதி ஒவ்வொரு தமிழ் ஆசிரியரும் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது என்பதைக் கருத்தில் கொள்வோம்.

திருமதி. நா. சீதரன்
சிரேஸ்ட விரிவுரையாளர்
தமிழமொழித் துறை

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii - iv |
| 02. | பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | v |
| 03. | கலைத்திட்டக் குழு | vi |
| 05. | ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய ஆலோசனைகள் | vii |
| 09. | கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | 1 - 129 |

# கற்றல் - கற்பித்தல்

# செயன்முறைக்குரிய வழிகாட்டல்

# தரம் - 13

## முதலாந் தவணை


| இல | விடய உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 01 | கட்டுரையாக்கம் | 2 - 3 |
| 02 | இணையத்தள இலக்கியச் செயற்பாடு | 4 - 5 |
| 03 | சுருக்கம் எழுதுதல் | 6 - 7 |
| 04 | அகநானுறு | 8 - 10 |
| 05 | திருக்குறள் - 4 அதிகாரங்கள் | 11 - 12 |
| 06 | கம்பராமாயணம் (44 - 72) | 13 - 14 |
| 07 | பாரதிதாசன் கவிதைகள்• உதயசூரியன்• மானிட சக்தி | 15 - 17 |
| 08 | இலக்கிய விமர்சனக் கட்டுரை | 18 - 19 |
| 09 | சிறுகதை - எனக்கு வயது பதின்மூன்று | 20 - 21 |
| 10 | தமிழ் இலக்கிய வரலாறு - ஐரோப்பியர் கால செய்யுள் இலக்கிய வளர்ச்சி | 22 - 24 |
| 11 | ஐரோப்பியர் கால உரைநடை இலக்கிய வளர்ச்சி | 25 - 27 |
| 13 | ஐரோப்பியர் கால இலக்கியப்பண்புகள் | 28 - 29 |
| 14 | ஐரோப்பியர் கால இலக்கியக் கர்த்தாக்கள் | 30 - 31 |
| 15 | ஈழத்து இலக்கிய வரலாறு - ஆங்கிலேயர் காலம் | 32 - 34 |
| 16 | ஆங்கிலேயர் கால இலக்கியப் பண்புகள் | 35 - 36 |
| 17 | ஆங்கிலேயர் கால இலக்கியக் கர்த்தாக்கள் | 37 - 39 |
| 18 | புணரியல் | 40 - 41 |
| 19 | இடைச்சொல் | 42 - 44 |
| 20 | உரிச்சொல் | 45 - 46 |

**தேர்ச்சி 4.0** : இலக்கியங்களைக் கற்பதனூடாகத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : ஆக்கங்களை வாசித்துப் பெற்ற அனுபவத்தின் ஊடாகச் சுய ஆக்கங்களைப் படைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : ஆக்கங்களை எழுதுதல் - கட்டுரை

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்**

- தமது அனுபவங்களைத் தொடர்புபடுத்திச் சுய ஆக்கங்களைப் படைப்பார்.
- தலைப்புக்கேற்ற தகவல்களைத் திரட்டி, செம்மையான மொழிநடையில் கட்டுரைகளை எழுதுவார்.
- கட்டுரை நுட்பங்களுக்கு அமையக் கட்டுரையை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- சிறந்த கட்டுரைகளை வாசிக்க வழிப்படுத்தல்.
- கட்டுரையாசிரியர்களின் தனித்துவமான மொழிநடைபற்றிக் கலந்துரையாடிக் கூறச்செய்தல்.
- கட்டுரைகளின் விடய உள்ளடக்கம் பற்றிக் கலந்துரையாட வழிகாட்டுதல்.
- கட்டுரை எழுதும் நுட்பங்கள் தொடர்பாகக் கருத்துக்களை முன்வைக்க வழிப்படுத்தல்.
- தலைப்புக்கேற்ப, தகவல்களைத் திரட்டிக் கட்டுரைகளை எழுத வழிப்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) **எண்ணக்கருக்கள்**

- பெரியார்களின் தமிழ்ப்பணி
  - உ - ம்: சுவாமி விபுலானந்தர்

அமைப்பு : முகவுரை, உள்ளடக்கம், முடிவுரை

♦ அவதானிக்க வேண்டியவை:
  - தலைப்புப் பொருத்தப்பாடு
  - பந்தியமைப்பு, நிறுத்தக்குறியீடுகள்.
  - மொழிச் செம்மை
  - கட்டுரை நுட்பங்கள்
  - சொல்லளவு

## தரவிருத்தி உள்ளீடுகள்

- கட்டுரைகள்
  - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
  - மு. வரதராசன்
  - க. கைலாசபதி

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- கட்டுரைத் தலைப்பிற்கேற்ற தகவல்களைக் குறிப்பெடுப்பார்.
- திரட்டிய தகவல்களைக் கொண்டு கட்டுரைக்கான சட்டகத்தை அமைப்பார்.
- கட்டுரை அமைப்பு நுட்பங்களைக் கவனத்திற்கொண்டு கட்டுரைகளை எழுதுவார்.

**தேர்ச்சி 1.0** : தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும் வகையில் கட்டுருவாக்கத்திறன் உள்ளவராகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 1.5** : பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்பச் செயற்படுவார்.

**விடய உள்ளடக்கம்** : இணையத்தளத்தைப் பயன்படுத்தித் தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்:**

- பல்வேறு தகவல்களைப் பெற இணையத்தளங்களைப் பயன்படுத்தும் முறைகளை அறிந்து கூறுவார்.
- இணையத்தளம் மூலம் தரவிறக்கம் செய்து பெறக்கூடிய தகவல்களைப் பட்டியற்படுத்துவார்.
- தரவிறக்கம் செய்து பெற்றுக் கொண்ட விடயங்களில் சிலவற்றைக் காட்சிப்படுத்தி விளக்குவார்.
- தமிழ்ப்பாடத்துடன் தொடர்புடைய விடயங்களைப் பெற இணையத்தளம் உதவும் முறை பற்றிக் கூறுவார்.
- கல்விச் செயற்பாட்டில் இணையத்தளப் பயன்பாடு பற்றிக் கருத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- உயர்தர மாணவர்களது கல்விச் செயற்பாட்டிற்கு இணையத்தளப் பாவனை உதவுவதைத் தொகுத்துக் கூறச் செய்தல்.
- இணையத்தளத்தைப் பொருத்தமாகப் பயன்படுத்தும் முறை பற்றி எடுத்துக்காட்டுகள் கூற வழிப்படுத்தல்.
- இணையத்தளம் மூலம் பெற்றுக் கொண்ட விடயங்களைக் காட்சிப்படுத்துமாறு கூறல்.
  உதாரணம் : நூல்கள் - நூலாசிரியர் பற்றிய விளக்கம்.
  கவிதைகள், சிறுகதைகள் பற்றிய விமர்சனங்கள்.
- இணையத்தளப் பாவனை மூலமான நன்மைகளை விளக்குவதற்கு வழிப்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) எண்ணக்கருக்கள்**

- உலகளாவிய ரீதியில் சமய, சமூக, கலாசார, பொருளாதார விடயங்களை வலைப்பின்னல் மூலம் உள்ளடக்கிய ஓர் ஊடகமே இணையத்தளம்.
- இணையத்தளத்தில் தேவையான விடயங்களைப் பெறமுடியும்.
- உலகமயமாக்கலில் இணையத்தளம் முக்கிய இடத்தை வகிக்கிறது.
- இன்றைய சமூகத்தினரிடையே கவர்ச்சிமிக்க ஊடகமாக இணையத்தளம் விளங்குகிறது.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- இணையத் தொடர்புள்ள கணனி ஆய்வு கூடம்.
- இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யப்பட்ட சில ஆக்கங்கள்.

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- இணையத்தளத்தைப் பயன்படுத்தும் முறை பற்றி அறிந்து கூறுவார்.
- இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்த சில ஆக்கங்களைக் காட்சிப்படுத்துவார்.
- தரவிறக்கம் செய்யப்பட்ட சில ஆக்கங்களைத் தொகுத்து எழுதுவார்.
- இணையத்தளம் தமக்கு உதவிய முறை பற்றிக் கலந்துரையாடி விளக்கமளிப்பார்.

**தேர்ச்சி 3.0 :** உரைநடை இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** பாடப்பகுதியை அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம் :** சுருக்கம் எழுதுதல்

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள்**

- கொடுக்கப்பட்ட பகுதியைக் கருத்தூன்றி மௌனமாகக் கிரகித்து வாசிப்பார்.
- வாசித்த பகுதியில் கூறப்பட்ட பிரதான கருத்து, துணைக் கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.
- சுருக்கத்தின் போது தவிர்க்க வேண்டிய விடயங்களைக் கூறுவார்.
- முக்கியமான கருத்துக்களைத் தொகுத்துச் சுருக்கி எழுதுவார்.
- கொடுக்கப்பட்ட பகுதியின் சாராம்சத்தைக் குறிக்கப்பட்ட சொல் எண்ணிக்கைக்கேற்ப சொந்த மொழிநடையில் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவர்கள் கருத்துக்களைச் சுருக்கி எழுதுவதன் சந்தர்ப்பம், பயன் பற்றி அட்டவணைப்படுத்தச் செய்தல்.
- பந்தி ஒன்றைக் கொடுத்து, பிரதான துணைக்கருத்துக்களை இனங்கண்டு குறிப்பெடுக்க வழிப்படுத்துதல்.
- தவிர்க்க வேண்டியவை பற்றி கேட்டு, விளக்கமளித்தல்.
- சுருக்கம் எழுதும் நுட்பங்கள் பற்றி எடுத்துக் கூறச் செய்தல்.
- கருத்துக்களை ஒழுங்குபடுத்திச் சுருக்கி எழுத வழிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள் (Key words) எண்ணக்கருக்கள்**

- கொடுத்த பகுதியை வாசித்துக் கிரகித்து முக்கிய விடயங்களைக் குறிப்பெடுத்தல்.
- குறிப்புகளை ஒழுங்குபடுத்தித் தொகுத்தல்.
- அணிகள், மேலதிக வர்ணனை, உதாரணம் போன்றவற்றைத் தவிர்த்தல்.
- சொந்த மொழிநடையில் எழுதுதல்.
- ஒரு பந்தியில் எழுதுதல்.

**சுருக்கி எழுதும் சந்தர்ப்பங்கள்:**

- கேட்டல் (பேச்சு, அறிவிப்பு, நற்சிந்தனை, சொற்பொழிவு, செய்திகள்)
- வாசிப்பு (கட்டுரைகள், இலக்கியங்கள்)
- எழுத்து (அறிக்கை, செய்தி, தொழின்முறைக் கடிதம், அறிவிப்பு, சுவர்ப்பத்திரிகை)

**சுருக்கி எழுதுவதால் ஏற்படும் பயன்கள்:**

- முக்கிய விடயங்களை அறிந்து நினைவில் இருத்தல்.
- கிரகித்தற் திறன் வளர்க்கப்படுதல்.
- மொழித்திறன் விருத்தி ஏற்படல். (வாசிப்பு, எழுத்து, பேச்சு)
- இலகுவான, எளிமையான, துரிதமான கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவுதல்.

**சுருக்கம் எழுதுவதற்கான படிமுறைகள்:**

- கொடுக்கப்பட்ட பகுதியைக் கருத்தூன்றி வாசித்தல்.
- பிரதான கருத்து, துணைக்கருத்துக்களை இனங்கண்டு குறிப்பெடுத்தல்.
- அணிகள், மேலதிக வர்ணனைகள், உதாரணங்கள், மேற்கோள்கள், புள்ளிவிபரங்கள் போன்றவற்றைத் தவிர்த்தல்.
- முக்கிய கருத்துக்களை ஒழுங்குபடுத்தித் தொகுத்தல்.
- பிரதான கருத்தை ஒட்டிய கருத்தமைவு, கருத்தமைவின் தொடர்ச்சி பேணப்பட்டிருக்கு மாற்றினை வாசித்துச் சரி பார்த்தல்.
- சொல் எண்ணிக்கையை அனுசரித்துச் சொந்த மொழி நடையில் சுருக்கி எழுதுதல்.
- ஒரு பந்தியில் எழுதுதல்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- தெரிவுசெய்யப்பட்ட கட்டுரைகளில் இடம்பெறும் சில பந்திகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- கொடுக்கப்பட்ட பகுதியை அவதானமாக வாசித்துக் குறிப்பெடுப்பார்.
- முக்கியமான கருத்து, துணைக்கருத்துக்களைச் சுருக்கமாக எழுதுவார்.
- சொந்த மொழிநடையில் எழுதுவார்.
- கேட்கப்பட்ட சொல் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு சுருக்கி எழுதுவார்.
  (கட்டுரையில் இருபந்திகளை ஆசிரியரே தேடி வழங்குதல் வேண்டும்.)

**தேர்ச்சி 2.0** : செய்யுள் இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : செய்யுளை அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : அகநானூறு 154ஆவது செய்யுள்
"படுமழை பொழிந்த......."

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்:**

- செய்யுளின் பொருளை அறிந்து கருத்தைக் கூறுவார்.
- செய்யுளில் உள்ள அரும்பதங்களுக்குப் பொருள் எழுதுவார்.
- பாடலில் நயந்த விடயங்களைக் கூறுவார்.
- அணிகளை இனங்கண்டு விளக்குவார்.
- பாடலின் பொருள், நயந்த பகுதிகளைச் சொந்த மொழி நடையில் எழுதுவார்.
- செய்யுளின் இலக்கணக் கூறுகளை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சங்க இலக்கியங்கள், அகத்திணை இலக்கியங்கள், முல்லை நில அகத்திணை ஒழுக்கம் பற்றி வினாக்கள் கேட்டு, விடை கூறச் செய்தல்.
- பாடலைச் சந்தி பிரித்து வாசிக்க வழிப்படுத்தல்
- அரும்பதங்களின் பொருளை அறிந்து எழுதவைத்தல்.
- பாடலின் பொருளைத் தமது மொழிநடையில் எழுத வழிகாட்டுதல்.
- அணிகள் தொடர்பாக உதாரணங் கூறச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்**

- சங்ககாலம் பற்றியதும் அக்கால அகத்திணை இலக்கிய மரபு பற்றியதுமான அறிமுகம்
  - ♦ 154 ஆவது பாடல் முல்லை நிலத்துக்குரியது
    - பாடியவர் : பொதும்பிற் புல்லாளங்கண்ணியார்

**இச்செய்யுளில் புலப்படுத்தப்படும் முக்கியமான விடயம்:**

- தலைவியைக் காணத் துடிக்கும் தலைவனின் ஆர்வ உள்ளம்.
- தனது போர்த் தொழில் முடிந்து திரும்பும் தலைவன், கார்காலம் வந்துவிட்ட நிலையில் தலைவியிடம் விரைந்து செல்ல வேகமாகத் தேரினைச் செலுத்தும்படி பாகனிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**இப்பாடலிலுள்ள சிறப்புக்கள்:**

1) கார்காலம் ஆரம்பமாகும் போது இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான வர்ணனைகள்.
(சங்ககால இலக்கியப் பண்புகளில் ஒன்று இயற்கை வர்ணனைகளைக் கொண்டிருத்தல்)
- தேரைகள் சத்தமிடுதல்.
- பிடவு மரத்தின் மலர்கள் உதிர்தல்.
- கார்த்திகைப் பூக்கள் மொட்டு விரிதல்.
- ஆண் மான்கள் நீரைக் குடித்துவிட்டு, பெண் மானோடு மகிழ்ச்சியுடன் தங்குதல்.

இவற்றால் முல்லை நிலமே அழகு பெறல்.

2) குதிரை பற்றிய நுட்பமான வர்ணனைகள்.
- ஓடுபரி மெலியாக் கொய்சுவல் புரவி (ஓடும் வேகம் குறையாத கொய்யப்பட்ட பிடரி மயிரினை உடைய குதிரை)

3) உவமை அணிகள்.
- " தேரை சிறுபல்லியத்தின் நெடு நெறிக் கறங்க". தேரையின் ஒலிக்கு வாத்தியங்களின் ஒலி உவமையாகக் கூறப்பட்டுள்ளது.
- " வெம்சின அரவின் பை அணந்து அன்ன தண்கமழ் கோடல் தாது பிணி அவிழ" மொட்டவிழ்ந்து மலர்ந்த காந்தள் மலருக்குப் பாம்பின் படம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

**அரும்பதங்கள்:**

| | | |
|---|---|---|
| படுமழை | | பெருமழை |
| பயம் | - | பயன் |
| புறவு | - | முல்லை நிலம் |
| அவல | - | பள்ளத்தை உடைய (அவல் - பள்ளம்) |
| பகுவாய் | - | பிளந்தவாய் |
| பல்லியம் | - | பல்வகையான இசைக்கருவிகள் |
| நெடுநெறி | - | நீண்டவழி |
| கறங்க | - | ஒலிக்க |
| புதல் | - | புதர் |
| பிடவு | - | ஒரு வகைமரம் |
| கால் | - | பூவின் காம்பு |
| மருங்கு | - | பக்கம் |

| | | |
|---|---|---|
| அயிர் | - | நுண்மணல் |
| அரவு | - | பாம்பு |
| பை | - | படம் |
| அணந்து | - | மேல் நிமிர்ந்து |
| தண்கமழ் | - | தண்ணென்ற வாசனை வீசும் |
| தாது | - | இதழ் |
| பிணி அவிழ | - | கட்டு அவிழ |
| திரி மருப்பு | - | முறுக்கிய கொம்பு |
| இரலை | - | ஆண்மான் |
| தெள்அறல் | - | தெளிந்த நீர் |
| காமர் | - | விரும்பிய |
| கவின் | - | அழகு |
| தண்பதம் | - | குளிர்ந்த பருவம் |
| புரவி | - | குதிரை |
| தாள் | - | கால் |
| தார் | - | மாலை |
| தயங்குபு | - | சிறப்பு மிகுந்த |
| இயம்ப | - | ஒலிக்க |
| ஊர்மதி | - | (விரைவாக) செலுத்துவாயாக |
| சீர்மிகுபு | - | சிறப்பு மிகுந்த |
| நம்வயின் | - | எம்மிடம் |
| அம்மா அரிவை | - | அழகிய மாமை நிறத்தையுடைய பெண் (தலைவி) |
| துன்னுகம் | - | அடைவோம் |

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடல் எழுதிய டிமைன்தாள்
- அகநானூறு மூலநூல்
- செயற்பாட்டுப் பத்திரம்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- செய்யுளைச் சந்திபிரித்துப் பொருளுணர்ந்து வாசிப்பார்.
- செய்யுளின் பொருளைச் சொந்த மொழிநடையில் எழுதுவார்.
- செய்யுள் உணர்த்த முற்படும் விடயத்தை இனங்கண்டு கூறுவார்.
- கார்காலத்தின் வருகை சித்திரிக்கப்படுமாற்றை விளக்குவார்.
- அணிகளை இனங்கண்டு விளக்குவார்.
- தலைவியின் அழகு வர்ணிக்கப்படுமாற்றைக் கூறுவார்.
- இப்பாடலினூடாகப் புலப்படும் சங்க இலக்கியப் பண்புகளை முன்வைப்பார்.

**தேர்ச்சி 2.0 :** செய்யுள் இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழி நடையில் முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 2.2 :** குறித்த இலக்கியங்கள் தோன்றிய பின்னணியை அறிந்து கூறுவார்.

**விடய உள்ளடக்கம் :** திருக்குறள் (4 அதிகாரங்கள்)

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள்**

- காலம் அறிதல், இடன் அறிதல், தெரிந்துதெளிதல், தெரிந்து வினையாடல் ஆகிய அதிகாரங்களின் வைப்பு முறை தொடர்பான விளக்கத்தையும் அந்தந்த அதிகாரம் பற்றிய விளக்கத்தையும் கூறுவார்.
- இவ்வதிகாரங்களிலுள்ள குறட்பாக்களைப் பொருள் விளங்கும்படியாகப் பதம்பிரித்துக் கொண்டு கூட்டி வாசிப்பார்.
- அரும்பதங்களுக்குப் பொருள் எழுதுவார்.
- குறட்பாக்களுக்குப் பொருள் எழுதுவார்.
- அதிகாரங்களில் கருத்துக்கள் வகுத்தும் தொகுத்தும் கூறப்பட்டிருக்குமாற்றைத் தெளிவுபடுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- குறள்களைக் காட்சிப்படுத்தி வாசிக்க வழிப்படுத்தல்.
- செய்யுள் வாசிக்கும் பொறிமுறைகளை அனுசரித்து வாசிக்க மாணவர்களை வழிகாட்டுதல். (பதப்பிரிப்பு, கொண்டு கூட்டல்)
- கடின பதங்களின் பொருளை அறியச்செய்தல்.
- குறட்பாக்களுக்கான பொருளை எழுதச் செய்தல்.
- குறளில் பயின்று வந்த அணிகள், மொழிநடை என்பன பற்றி மாணவர்கள் விளக்க வழிகாட்டல்.
- கருத்துக்களைத் தொகுத்தும் பகுத்தும் கூற வழிப்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) **எண்ணக்கருக்கள்**

- திருக்குறளில் "அதிகார வைப்பு" என்பது ஒரு பிரதானமான விடயம்.
    - ♦ வலியறிந்த பின் பகைவரை அடக்குவதற்குக் காலமறிதல் அவசியம். வலியும் காலமும் அறிந்த பின் பகைவரை வெல்லுவதற்குரிய இடனறிதல் (இடமறிதல்) அவசியமாகிறது. இவ்வாறு வலி, காலம், இடம் அறிந்த பின் அரசன் தன்

செயற்பாடுகளை நேரிதாய் ஆற்றுவதற்குத் தெரிந்து தெளிதல் அவசியம். தெரிந்து தெளிந்த பின்பே தெரிந்து வினையாட முடியும் என்ற அடிப்படையில் இவ்வதிகாரங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

- **காலம் அறிதல்** :- நிறைந்த வலியுடையவனாக இருந்தாலும் உரிய காலம் அறிந்து செயற்பட வேண்டும். பகைவனை அடக்குவதற்கு உரிய காலத்தை அறிவதே ‘‘காலமறிதல்’’
- **இடன் அறிதல்** :- பகைவரது அரணின் புறத்தே தங்குதற்குரிய இடத்தை அறிதல், பகைவரைத் தாக்குவதற்குரிய இடத்தை அறிதல், பகைவரைச் சென்றடையக் கூடாத இடம், அவ்வாறு சென்றடைவதால் ஏற்படும் பாதிப்பு என்பன பற்றி அறிதல்.
- **தெரிந்து தெளிதல்** :- தக்கவர்களைத் தெரிந்து தெளிதல், ஒருவரிடத்து உள்ள குணங்குற்றங்களை ஆராய்ந்து குணம் மிக்கவராயின் தெளிதல், ஒருவரது குணங்குற்றங்களை ஆராய்வதற்குரிய வழி, தெளியப்படாதவர்கள் யாவர், அவர்களைத் தெளிவதால் ஏற்படக்கூடிய தீங்கு, தெளிவதற்கான எல்லை என்பன பற்றி அறிதல்.
- **தெரிந்து வினையாடல்** :- செய்வித்தற்கு உரியவனது இலக்கணம், வினையிலிருந்து தவிர்க்கப்பட வேண்டியவர் யார்?, வினையினது இயல்பு, செய்தற்குரியவனை வினையாளும் திறம் என்பன பற்றி அறிதல்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- திருக்குறள் - நூல் - பரிமேலழகர் உரை
- குறட்பாக்கள் எழுதப்பட்ட டிமைன்தாள்
- திருக்குறள் ஒலிநாடா
- செயற்பாட்டுப்பத்திரம்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- குறிக்கப்பட்ட அதிகாரங்களின் அதிகார வைப்பின் பொருத்தப்பாடு பற்றி அறிந்து கூறுவார்.
- குறட்பாக்களைச் சந்திபிரித்துக், கொண்டுகூட்டி வாசிப்பார்.
- அரும்பதங்களின் பொருளறிந்து கூறுவார்.
- குறட்பாக்களுக்கான பொருளைத் தமது மொழிநடையில் எழுதுவார்.
- ஒவ்வொரு அதிகாரங்களுக்குமுரிய கருத்துக்களைப் பகுத்தும், தொகுத்தும் கூறுவார்.
- ஆசிரியர் கையாண்ட உத்திகள் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.
- திருக்குறள் எழுந்த காலப்பின்னணி பற்றி எடுத்துக் கூறுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **2.0** | : | செய்யுள் இலக்கியங்களைக் கற்று அவைகூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | **2.3** | : | பாடப்பகுதியை (Text) அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | | : | கம்பராமாயணம் - குகப்படலம் (பாடல்கள்: 44-72 வரை) |
| **பாடவேளைகள்** | | : | 04 |

**கற்றற் பேறுகள்**

- செய்யுள்களைச் சந்தி பிரித்துப் பொருளுணர்ந்து வாசிப்பார்.
- செய்யுள்களில் இடம்பெறும் அரும்பதங்களின் பொருளை அறிந்து கூறுவார்.
- செய்யுள்களின் பொருளைத் தமது சொந்த மொழிநடையில் தெளிவாக எழுதுவார்.
- செய்யுள்களில் பயின்றுள்ள அணிகளை இனங்கண்டு கூறுவார்.
- செய்யுளில் இடம்பெறும் கவிச்சிறப்பு, உத்தி என்பவற்றை நயந்து எழுதுவார்.
- பாத்திரங்களது குணப்பண்புகளை விமர்சித்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கம்பராமாயணக் கதையைக் கூறச் செய்தல்.
- மாணவர்கள் செய்யுளைச் சந்திபிரித்து, கொண்டு கூட்டி வாசிக்க வழிப்படுத்தல்.
- செய்யுளின் பொருளைச் சுருக்கமாகக் கூறச் செய்தல்.
- அணிகளை இனங்கண்டு விளக்கமளிக்க வழிகாட்டல்.
- செய்யுள்களுக்கிடையிலான கதைத் தொடர்புபற்றி எடுத்துக் கூறச் செய்தல்.
- செய்யுளில் கூறப்பட்ட பாத்திரங்களினது குணப்பண்புகளை எடுத்துக் கூறச் செய்தல்.
- கவிஞரது கவித்துவம் பற்றி எடுத்துக்காட்டுக்களுடன் விளக்க வழிகாட்டல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்**

**கதைத் தொடர்பு :**

| | |
|---|---|
| செய்யுள்கள் 44 - 47 | பரதன் கங்கையைக் கடக்கவென குகனிடம் நாவாய் கேட்டல், நாவாய்களது வரவும் அவற்றின் தோற்றமும். |
| செய்யுள்கள் 48 - 56 | பரதன் தன் சேனையோடு கங்கையைக் கடத்தல். |
| செய்யுள்கள் 57 - 60 | மரக்கலங்கள் ஆற்றில் வரும் காட்சி. |
| செய்யுள்கள் 61 - 70 | பரதன் நாவாயில் ஏறுதலும், குகனையும் தன்னுடன் வந்தவர்களையும் ஒருவருக்கொருவர் அறிமுகஞ் செய்தலும். |
| செய்யுள்கள் 71 - 72 | கரைசேர்ந்தவர்களைப் பரத்துவாச முனிவர் வரவேற்றல். |

**கங்கையில் சென்றதை வர்ணிக்கும் விதம்:**

**'களி உடை மஞ்ஞை அன்ன**
**கனம் குழைக் கயல் கண் மாதர்**
**ஒளிர் அடிக் கமலம் தீண்ட**
**உயிர் படைத்தனவே ஒத்த...'**

மகளிர் கங்கையைக் கடக்க நாவாயில் ஏறினர். அந்த நாவாய்கள் பல துடுப்புகள் கொண்டவை மகளிர் தமது கால்களை வைத்து ஏறியதும் துடுப்புகளால் தள்ளப்பட்ட நாவாய்கள் உயிர் படைத்துக் காலால் செல்வதை ஒத்திருந்தன எனக் கவிஞர் கூறுகிறார்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- கம்பராமாயணம் மூலநூல்.
- குறிக்கப்பட்ட சில கம்பராமாயணப் பாடல் வரிகள் எழுதப்பட்ட டிமைன்தாள்.
- கம்பராமாயணக் காட்சிகள் - இறுவட்டு.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- கம்பராமாயாணம் எழுந்த காலப்பின்னணி பற்றிக் கூறுவார்.
- செய்யுளின் பொருளைத் தமது சொந்த மொழிநடையில் எழுதுவார்.
- கதைச்சம்பவங்களைப் பகுத்துக் கூறுவார்.
- அணிகள், கவிச்சிறப்பு என்பவற்றை இனங்கண்டு கூறுவார்.
- கவிதையில் வெளிப்படும் படைப்பாக்கத்திறனை விபரிப்பார்.
- பாத்திரப் பண்புகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி எழுதுவார்.

**தேர்ச்சி** 4.0 : இலக்கியங்களைக் கற்பதன் ஊடாகத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 4.1 : பல்வேறு ஆக்கங்களை வாசித்து, கிரகித்து அவற்றில் இடம் பெறும் மொழிக் கூறுகளைப் பகுத்துக் கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : பாரதிதாசன் கவிதைகள்
1) உதய சூரியன்
2) மானிட சக்தி

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்:**

- கவிதையைச் சந்தி பிரித்துப் பொருள் விளங்கி வாசிப்பார்.
- உதய சூரியனின் வருகை ஏற்படுத்தும் மாற்றத்தை விளக்குவார்.
- பாடல்களைப் பற்றிய தமது கருத்துக்களை விமர்சன ரீதியாக முன்வைப்பார்.
- கவிஞரது கவித்துவம் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.
- மானிட சக்தியின் மகத்துவம் பற்றி, கவிஞர் கூறிய கருத்துக்களை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பாரதிதாசன் பற்றியும், அவரது படைப்புகள் பற்றியும் தொகுத்துக் கூறச் செய்தல்.
- கவிதையைச் சந்திபிரித்து வாசிக்க வழிப்படுத்தல்.
- அரும்பதங்களுக்கும், அருந்தொடர்களுக்கும் விளக்கம் கூறச் செய்தல்.
- பாடல்களின் ஊடாக முன்வைக்கப்படும் கருத்துக்களை நயந்து கூறவழிப்படுத்தல்.
- கவிஞரது கவித்துவம் பற்றிக் கலந்துரையாடி அதனை எழுதச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) **எண்ணக்கருக்கள்**

- **பாடலாசிரியர் பற்றிய அறிமுகம்:**

    - ♦ பாரதிதாசன் **(1891 - 1964)** வரை
        - கனக சுப்புரத்தினம் - இயற்பெயர்
        - பாரதிதாசன், பாவேந்தர், புரட்சிக் கவிஞர் என்றெல்லாம் இலக்கிய உலகில் அறியப்பட்டவர்.
    - ♦ இவர் ஒரு சிறந்த கவிஞராக, தமிழாசிரியராக, எழுத்தாளராக, திரைக்கதை ஆசிரியராக, அரசியல் வாதியாக தமது வாழ்வில் பல்வேறு துறைகளில் தடம் பதித்தவர்.

- ♦ பாரதியார் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தமது பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.
- ♦ இவரது சிறந்த படைப்புக்கள் பல. அவற்றில் பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குயில் என்பன குறிப்பிடத்தக்கன.

- **ஆசிரியர் வெளிப்படுத்த விழைந்த விடயம்:**

  - ♦ உதய சூரியன்:
    - சூரியோதயத்தால் உலகம் கண்ட புத்துணர்ச்சியும் அதனால் ஏற்பட்ட பேருவகையும் உற்சாகமும்.

- **வெளிப்பாட்டுமுறை:**

  - ♦ உதய சூரியன்
    - உதய சூரியனின் வருகை, அதனால் உலகத்தில் உண்டான மாற்றங்கள், அம்மாற்றங்களால் கவிஞரின் உள்ளத்தில் ஏற்பட்ட உவகை வெளிப்படுத்தப்பட்டமை.
    - சூரியோதயத்தின்போதான நிகழ்வுகளை, சூரியோதயத்தின் பயனை எடுத்துரைத்தல்.
    - சிறிய சொற்களை அடைமொழிகளாகப் பயன்படுத்தி, நுட்பமாக வர்ணித்தல்.
    - உருவக அணியைப் பயன்படுத்தியிருத்தல் - இருட் கதவு.

  - ♦ மானிட சக்தி
    - ஒருவரை முன்னிலைப்படுத்தி உரையாடுவது போலக் கூறுதல்.
    - மானுட சக்தியின் மகத்துவத்தை அழுத்திக் கூறுதல்.
    - சிறுசிறு வினாக்களைக் கேட்டு, சிந்தனையைத் தூண்டல்.
    - அணிகளைப் பயன்படுத்தியிருத்தல்.

      உருவக அணி - மானிடம் என்றொரு வாள்

      இயைபு அணி - பாடல் அடிகளின் இறுதிச்சீர்கள் ஒத்த ஓசையுடன் இயைந்து வருவது.

      உதாரணம் : கொண்டு - உண்டு<br>வாளும் - தோளும்

**அரும்பதங்கள்:**

| | | |
|---|---|---|
| தகத்த காயம் | - | ஒளிவீசும் ஆகாயம் |
| அயர்வு | - | சோர்வு |
| பிரவாகம் | - | பெருக்கு |
| பரிதி | - | சூரியன் |
| மிலைதல் | - | சூடுதல் |

## தரவிருத்தி உள்ளீடுகள்

- கவிதைகளின் பிரதி.
- கவிதைகள் பதிவுசெய்யப்பட்ட இறுவட்டு.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- கவிதைகள் வெளிப்படுத்தும் விடயங்களை விளக்குவார்.
- கவிதைத் தலைப்பின் பொருத்தப்பாட்டினைக் கூறுவார்.
- கவிதையில் வெளிப்படும் உணர்வினை எழுதுவார்.
- கவிஞர் கையாண்டுள்ள உத்திகளை விளக்குவார்.
- கவிஞர் கையாண்ட அணிகளை இனங்கண்டு கூறுவார்.
- கவிதை தொடர்பான கருத்துக்களை விமர்சிப்பார்.

**தேர்ச்சி** 3.0 : உரைநடை இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தம் கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன் வைப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 3.1 : உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார்.

**விடய உள்ளடக்கம்** : இலக்கிய விமரிசனம் (கட்டுரை)
- பேராசிரியர் அ. சீனிவாசராகவன்

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்**

- 'இலக்கிய விமரிசனம்' என்றால் என்னவென்று வரைவிலக்கணப்படுத்துவார்.
- இலக்கிய விமரிசன வகைகளையும், அவை தொடர்பான கருத்துக்களையும் சுருக்கமாகக் கூறுவார்.
- இலக்கிய விமரிசனத்தினால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிடுவார்.
- இலக்கிய விமரிசனம் தொடர்பாக முன்வைக்கப்படும் கருத்துக்களைப் பட்டியற்படுத்துவார்.
- கட்டுரையாசிரியர் தனது கருத்துக்களை வலியுறுத்தக் கையாளும் உத்திகளை எடுத்துக்கூறுவார்.
- கட்டுரையாசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி.... என்று தொடங்கும் செய்யுள் தொடர்பான கதையைக் கூறச் செய்தல்.
- இக்கதை தொடர்பாகக் கட்டுரையாசிரியர் கொண்டுள்ள கருத்துக்களை முன்வைத்துக் கலந்துரையாடி முக்கிய விடயங்களைக் கூறச் செய்தல்.
- விடயம் தொடர்பான கருத்துக்களை மாணவர்கள் விமர்சிக்க வழிப்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்:**

- **கட்டுரை ஆசிரியர்**

பேராசிரியர் அ. சீனிவாசராகவன் (1905 - 1975). பத்திரிகையாளர், மொழிபெயர்ப்பாளர், கட்டுரையாசிரியர், கவிஞர்.

- **சொல்ல விழைவது :**

    - ♦ இலக்கிய வளர்ச்சிக்கு இலக்கிய விமர்சனம் இன்றியமையாதது.
    - ♦ இலக்கியத்தின் பெருமையை அறிவதற்கும் நயப்பதற்கும் விமர்சனம் வழிகாட்டியாக அமைதல்.

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| கொங்கு | - | பூந்துகள், தேன் |
| பயிலிய | - | பயின்ற |
| அஞ்சிறை | - | அழகிய சிறகு |
| சஹ்ருதயம் | - | தன்னொத்த உணர்வுடையவன் |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- செயற்பாட்டுப் பத்திரம்
- ‘கொங்குதேர் வாழ்க்கை....’ என்னும் செய்யுள் எழுதப்பட்ட அட்டை

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்**

- ‘இலக்கிய விமரிசனம்’ என்றால் என்னவென்று கூறுவார்.
- இலக்கிய விமரிசன வகைகள் ஒவ்வொன்றையும் பட்டியற்படுத்திச் சுருக்கமாக விளக்குவார்.
- இலக்கிய விமர்சனம் தொடர்பாக முன்வைக்கப்படும் கருத்துக்கள் பற்றிய அபிப்பிராயத்தைக் கூறுவார்.
- கட்டுரை ஆசிரியர் கையாளும் உத்திகளை விளக்குவார்.
- கட்டுரை ஆசிரியரின் மொழிநடை பற்றிக் கருத்துரை வழங்குவார்.

**தேர்ச்சி** 3.0 : உரைநடை இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 3.3 : பாடப்பகுதியை அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறி முறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : சிறுகதை - 'எனக்கு வயது பதின்மூன்று'

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்**

- 'எனக்கு வயது பதின்மூன்று' என்ற சிறுகதையை வாசித்துப் பெற்ற உணர்வுகளைப் பற்றிக் கலந்துரையாடுவார்.
- சிறுகதையின் கரு, களம், சூழல் பற்றி விளக்குவார்.
- கதை கூறப்படும் பாங்கு, பாத்திரப்படைப்பு என்பவற்றினை விளக்கி எழுதுவார்.
- கதாசிரியர் கையாண்டுள்ள மொழிநடை, அதன் பொருத்தப்பாடு பற்றி விமர்சிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கதாசிரியர் 'அ.ஸ.அப்துல் ஸமது' தொடர்பான தேடல்களை மேற்கொள்ள வழிப்படுத்தல்.
- சிறுகதையினை மாணவர்கள் வாசித்துக் கிரகிக்கச் சந்தர்ப்பமளித்தல்.
- கதைக்கரு, களம், கதைவளர்ச்சி பற்றிக் கலந்துரையாட வழிப்படுத்தல்.
- சிறுகதையில் இடம்பெறும் பாத்திரங்களின் இயல்புகளை விமர்சிக்க வழிகாட்டுதல்.
- கையாளப்பட்டுள்ள மொழிநடை பற்றி விமர்சனரீதியான கருத்துக்களை முன்வைக்கச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) **எண்ணக்கருக்கள்**

**ஆசிரியர்:-**

- அன்பு இறைதாசன் என்ற புனை பெயருடைய அ.ஸ. அப்துல் ஸமது கிழக்கிலங்கையின் அக்கரைப்பற்றில் 1929 இல் பிறந்தார்.
- அப்துல் ஸமது மூன்று நாவல்களையும் ஐந்து கட்டுரைத் தொகுதிகளையும் வெளியிட்டார்.
- மாணவப்பருவத்திலிருந்தே எழுதத்தொடங்கியவரின் முதற் சிறுகதை **'நூர்ஜஹான்'** 1950இல் தினகரன் இதழில் வெளியாகியது.
- கிழக்கிலங்கையின் மூத்த படைப்பாளிகளில் முக்கியமானவர்.

  'எனக்கு வயது பதின்மூன்று' என்ற சிறுகதைத் தொகுதிக்கு 1977இல் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது.

**கதை அறிமுகம்:**

- ‘ஸல்மா’ என்ற பதின்மூன்று வயதுச் சிறுமி போடியார் ஒருவர் வீட்டில் வேலைக்காரியாக 5 வருடங்கள் வேலை செய்கிறாள்.
- அதே வயதுடைய போடியாரின் மகள் ஸீனாவையும் தன்னையும் பல விடயங்களில் ஒப்பிட்டுப் பார்க்கிறாள்.
- போடியாரின் மகன் ‘தாஹா’ காட்டும் இரக்கத்தில் சிறிது மகிழ்ச்சியடைகிறாள்.
- ‘ஸல்மா’ தன் யதார்த்த நிலையினை விளங்கி நிதானத்துடன் அவ்வீட்டிலிருந்து வெளியேறி தன் விருப்பப்படி உடையணிந்து அழகுத்தோற்றத்துடன் நெசவாலைக்கு வேலைக்குச் செல்கிறாள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- செயற்பாட்டுப்பத்திரம்.
- சிறுகதை ஆசிரியர் பற்றிய குறிப்புகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- சிறுகதையின் கதைக்கரு,அமைப்பு என்பன பற்றிக் கூறுவார்.
- கதையின் பாத்திரங்கள் பற்றிய தமது கருத்துக்களைக் கூறுவார்.
- சிறுகதையினூடாகப் புலப்படும் விழுமியப் பண்புகளை விபரிப்பார்.
- சிறுகதையாசிரியர் கையாண்ட உத்திகள் பற்றி விளக்குவார்.

**தேர்ச்சி 5.0** : தமிழிலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பர்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : காலப் பகுப்பின் பின்னணியையும் அவ்வக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அவற்றின் முதன்மைப் பண்புகளையும் சுருக்கமாக அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தமிழிலக்கிய வரலாறு - ஐரோப்பியர்கால செய்யுள் இலக்கிய வளர்ச்சி

**பாடவேளைகள்** : 12

**கற்றற் பேறுகள்**

- ஐரோப்பியர் காலப் பின்னணி பற்றி அறிந்து கூறுவார்.
- ஐரோப்பியர் காலச் செய்யுள் இலக்கியங்களை வகைப்படுத்தி விளக்குவார்.
- ஐரோப்பியர் காலச் செய்யுள் இலக்கியங்களின் பண்புகள் பற்றிக் கருத்துரைப்பார்.
- விஜய நகர - நாயக்கர் கால இலக்கியங்களிலிருந்து ஐரோப்பியர் கால இலக்கியங்கள் வேறுபடுமாற்றைத் தெளிவுபடுத்துவார்.
- இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிட்ட இலக்கிய ஆளுமைகளின் பங்களிப்பு, பணிகள் பற்றிக் கருத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஐரோப்பியர் கால அரசியல், சமூக, சமய பொருளாதாரப் பின்னணி தொடர்பாகக் கலந்துரையாட வழிப்படுத்தல்.
- ஐரோப்பியர் காலச் செய்யுள் இலக்கியங்களை அறிந்து வகைப்படுத்த வழிப்படுத்தல்.
- ஐரோப்பியர் காலச் செய்யுள்களின் பண்புகள் தொடர்பாக எழுதச் செய்தல்.
- ஐரோப்பியர் காலச் செய்யுள்களின் பண்புகளை முன்னைய காலச் செய்யுள்களின் பண்புகளோடு ஒப்பிட்டு எழுதச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள் (Key Words) எண்ணக்கருக்கள்**

- நாயக்கர் காலத்தின் பின்னரான 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளைக் கொண்ட காலப்பகுதி ஐரோப்பியர் காலம் எனப்படுகிறது.

**ஐரோப்பியர் கால இலக்கிய வளர்ச்சிக்கான காரணங்கள்:**

- ஐரோப்பியர் வருகையால் அரசியல், பொருளாதார, சமூக அமைப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் இலக்கியங்களின் புதிய போக்கிற்கு வழிசமைத்தமை.

- ஆங்கிலக் கல்வி வழியாகக் கிடைத்த மேலைத்தேய நவீன இலக்கியங்களைக் கற்று, அவ்விலக்கிய வடிவில் தாமும் எழுத முயன்றமை.
- கிறிஸ்தவமதப் பிரசாரத்திற்காகத் தமிழ்நாட்டிற்கு வந்த ஐரோப்பிய பாதிரிமார் தமிழ் கற்று, தமிழ் இலக்கியங்களைப் படைத்தமை.
- அச்சியந்திரத்தின் வருகையும் பத்திரிகையின் தோற்றமும்.
- இந்துக்களுக்கும் கிறிஸ்தவருக்குமிடையே மதம் பரப்புவதில் நிலவிய போட்டிச் சூழல், சமயவாதங்கள் என்பன இருமதங்களின் சார்பாகவும் சிறந்த இலக்கியங்கள் தோன்ற வழிவகுத்தன.

**செய்யுள் இலக்கியங்கள்:**

**இந்து சமயம் சார்ந்தவை:**

- தாயுமானவர் பாடல்கள் - தாயுமானவர்
- நந்தனார் சரித்திரக் கீர்த்தனை - கோபாலகிருஷ்ண பாரதியார்
- அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் - சிவஞான முனிவர்
- காஞ்சிப்புராணம் - சிவஞான முனிவர்
- திருவானைக்காப் புராணம் - கச்சியப்ப முனிவர்
- திருத்தணிகைப் புராணம் - கச்சியப்ப முனிவர்
- கச்சியானந்த ருத்ரேசர் வண்டு விடு தூது - கச்சியப்ப முனிவர்
- சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - மீனாட்சி சுந்தரம்பிள்ளை
- குசேலோ பாக்கியானம் (காவியம்) - மீனாட்சி சுந்தரம்பிள்ளை
- திருவருட்பா - இராமலிங்க அடிகளார் (வள்ளலார்)
- அறப்பளீசுவரர் சதகம் - அம்பலவாணக்கவிராயர்
- மறைசை அந்தாதி - நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்
- பறாளை விநாயகர் பள்ளு - நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்
- வல்லிபுரநாதன் பதிகம் - சிவசம்புப் புலவர்

**கிறிஸ்தவ சமயம் சார்ந்தவை:**

- தேம்பாவணி - வீரமாமுனிவர்
- கித்தேரியம்மாள் அம்மானை - வீரமாமுனிவர்
- திருக்காவலூர்க் கலம்பகம் - வீரமாமுனிவர்
- அடைக்கல நாயகி வெண்பா - வீரமாமுனிவர்
- அன்னை அழுங்கல் அந்தாதி - வீரமாமுனிவர்
- இரட்சணிய யாத்திரிகம் - கிருஷ்ணபிள்ளை
- இரட்சணிய மனோகரம் - கிருஷ்ணபிள்ளை
- ஞானக்கும்மி - வேதநாயக சாஸ்திரியர்
- பெத்தலேகம் குறவஞ்சி -
- ஞான ஏற்றப்பாட்டு -
- திருவாக்குப் புராணம் - வே. கனகசபைப் புலவர்

**இஸ்லாமிய மதம் சார்ந்தவை:**

| | | |
|---|---|---|
| • சீறாப்புராணம் (காவியம்) | - | உமறுப் புலவர் |
| • முதுமொழி மாலை (பிரபந்தம்) | - | உமறுப் புலவர் |
| • முகைதீன் புராணம் | - | வண்ணக்களஞ்சியப் புலவர் |
| • மிதுறு சாநா | - | மதாறு சாகிபுப் புலவர் |
| • இபுனி ஆண்டார் படைப்போர் | - | அலியார் புலவர் |
| • மஸ்தான் பாடல்கள் | - | குணங்குடி மஸ்தான் சாகிபு புலவர் |
| • நாகையந்தாதி | | |
| • திருமணி மாலை | | |
| • இராஜ நாயகம் | | |

**செய்யுள் வடிவில் எழுந்த நாடகநூல்கள்:**

| | | |
|---|---|---|
| • மனோன்மணீயம் | - | பேராசிரியர் சுந்தரம்பிள்ளை |
| • நந்தனார் சரித்திரக் கீர்த்தனை | - | கோபாலகிருஷ்ண பாரதியார் |
| • மான விஜயம் | - | சூரியநாராயண சாஸ்திரியார் |
| • சகுந்தல விலாசம் | | |
| • தாருகா விலாசம் | | |
| • இரணிய வாசகப்பா | | |
| • நீலகண்ட நாயனார் கீர்த்தனை | | |

**இக்காலத்தில் எழுந்த அற நூல்கள்:**

| | | |
|---|---|---|
| • நீதி நூல் | - | வேதநாயகம்பிள்ளை |
| • பெண்புத்தி மாலை | - | வேதநாயகம்பிள்ளை |
| • பெண்புத்தி மாலை | - | முகம்மது உசைன் புலவர் |

### தரவிருத்தி உள்ளீடுகள்

- தமிழ் இலக்கிய வரலாறு கூறும் நூல்கள்

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- ஐரோப்பியர் கால இலக்கியப் போக்குகளைத் தீர்மானித்த விடயங்கள் பற்றி விளக்குவார்.
- ஐரோப்பியர் கால செய்யுள் இலக்கியங்களின் பண்புகளைக் கூறுவார்.
- செய்யுள் இலக்கியங்களைப் படைத்த முக்கியமான படைப்பாளிகள் பற்றி எடுத்துரைப்பார்.
- இலக்கிய மரபின் தொடர்ச்சி பற்றி அறிந்து கருத்துரைப்பார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **5.0** | : | தமிழிலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | **5.1** | : | காலப்பகுப்பின் பின்னணியையும் அவ்வக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அவற்றின் பண்புகளையும் சுருக்கமாக அறிந்து கருத்துக்களை முன்வைப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | | : | தமிழிலக்கிய வரலாறு - ஐரோப்பியர்கால உரைநடை இலக்கிய வளர்ச்சி |
| **பாடவேளைகள்** | | : | 03 |

## கற்றற் பேறுகள்

- ஐரோப்பியர்காலத்தில் உரைநடை இலக்கியங்கள் தோன்றியமைக்கான காரணங்களை அறிந்து கூறுவார்.
- ஐரோப்பியர்கால உரைநடை இலக்கியங்களை வகைப்படுத்துவார்.
- இக்காலத்தில் தோன்றிய உரைநடை இலக்கியங்களின் பண்புகளை விளக்குவார்.
- இக்காலத்தில் வழக்கிலிருந்த பல்வேறு வகைப்பட்ட உரைநடையின் இயல்புகளை விளக்குவார்.
- உரைநடை வளர்ச்சிக்குப் பங்களித்த முக்கிய ஆளுமைகள் பற்றி அறிந்து கூறுவார்.

## பாடத்தைத்திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- உரைநடை இலக்கியங்கள் அதிகளவில் எழுந்தமைக்கான காரணங்கள்பற்றிக் கலந்துரையாடுதல்.
- உரைநடை இலக்கியங்களை வகைப்படுத்த வழிப்படுத்துதல்.
- உரைநடை இலக்கியங்களின் பண்புகளைக் கண்டறிவதற்கு வழிகாட்டல்.
- பல்வேறுபட்ட உரைநடைகளின் பண்புகள் பற்றி உரையாடுதல்.

## முதன்மைப் பதங்கள் (Key Words) எண்ணக்கருக்கள்

### உரைநடை இலக்கியங்கள்:

**சமய கண்டனம் சார்ந்தவை**

- வேத விளக்கம்
- வேதியரொழுக்கம்
- லூத்தர் இனத்தியல்பு
- ஞானக் கண்ணாடி
- சுப்பிரபோதம்
- வச்சிரதண்டம்

**கதை நூல்கள்**

- வாமனன் கதை
- கதா மஞ்சரி
- வினோதரச மஞ்சரி
- பரமார்த்தகுரு கதை

**நாவல்கள்**

- பிரதாபமுதலியார் சரித்திரம்
- சுகுணசுந்தரி
- கமலாம்பாள் சரித்திரம்
- பத்மாவதி சரித்திரம்
- தீனதயாளு
- மதிவாணன்

**உரைநூல்கள்**

- திராவிட மாபாடியம்
- பெரியபுராண உரை
- கோயிற் புராண உரை

**வசன நூல்கள்**

- பெரியபுராண வசனம்
- கந்தபுராண வசனம்
- திருவிளையாடற் புராண வசனம்

**மொழிபெயர்ப்பு**

- பஞ்சதந்திரக் கதைகள்
- ஜீவகாருண்ய ஒழுக்கம்
- ரூபாவதி
- கலாவதி

**அகராதி**

- சதுரகராதி

**இலக்கண நூல்**

- தொன்னூல் விளக்கம்
- யாப்பிலக்கணம்
- அணியிலக்கணம்
- நாடக இயல்
- தொல்காப்பிய சூத்திர விருத்தி
- இலக்கண விளக்கச் சூறாவளி

**ஐரோப்பியர் காலத்தில் உரைநடை, வளர்ச்சி பெற்றமைக்கான காரணங்கள்**

- அரசியல், சமூக, பொருளாதாரத்துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்.
- மேலைத்தேயப் பாதிரிமார் சாதாரண மக்களுக்கும் விளங்கத்தக்கதாக தம் மதக்கருத்துக்களை பரப்ப உரைநடையைக் கையாண்டமை.
- சமயங்களுக்கிடையேயான முரண்பாடு காரணமாக எழுந்த கண்டன நூல்கள் மூலம் வசனநடை விருத்தியடைந்தமை.
- அச்சியந்திரத்தின் வருகையும் பத்திரிகைகளின் வளர்ச்சியும்.
- நவீன கல்விமுறை காரணமாகப் பாடநூல்கள் எழுதப்பட்டமை.
- ஆங்கில வழிக் கல்வியின் மூலம் அறிமுகமான மேலைத்தேய வசன இலக்கியங்கள் போல தமிழில் எழுத முற்பட்டமை.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள், பல்வேறுபட்ட உரைநடைகளின் மாதிரிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- ஐரோப்பியர் கால இலக்கியங்களை வகைப்படுத்திக் கூறுவார்.
- உரைநடை இலக்கியங்கள் தோன்றியமைக்கான காரணங்களைப் பட்டியற்படுத்துவார்.
- உரைநடை இலக்கியங்களின் பண்புகளைக் கூறுவார்.
- உரைநடை இலக்கியங்களைப் படைத்த முக்கியமான தமிழ்ப் படைப்பாளிகள் பற்றி எடுத்துரைப்பார்.
- ஒரு குறிப்பிட்ட கால இலக்கியத்தின் பண்புகள் தொடர்ந்துவரும் காலங்களிலும் தாக்கத்தைச் செலுத்தும் என்பதை அறிந்து கூறுவார்.
- பத்திரிகைகள் மற்றும் கண்டனப் பிரசுரங்கள் முதலானவை உரைநடை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்குபற்றி எடுத்துக் கூறுவார்.

**தேரச்சி 5.0** : தமிழிலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : காலப்பகுப்பின் பின்னணியையும் அவ்வக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அவற்றின் பண்புகளையும் சுருக்கமாக அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தமிழிலக்கிய வரலாறு - ஐரோப்பியர்கால இலக்கியப் பண்புகள்.

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்:**

- ஐரோப்பிய கால இலக்கியப் பண்புகளை நிர்ணயித்த காரணிகளை விளக்குவார்.
- ஐரோப்பியர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களின் பண்புகளை இனங்கண்டு கூறுவார்.
- ஐரோப்பியர் கால இலக்கியப் பண்புகளில் முற்காலத்தின் தொடர்ச்சியாக உள்ள பண்புகளை வேறுபடுத்தி எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஐரோப்பியர் கால இலக்கியப் பண்புகளை நிர்ணயித்த காரணிகள் பற்றிச் சுருக்கமாகக் கூறச் செய்தல்.
- ஐரோப்பியர்கால செய்யுள் மற்றும் உரைநடை இலக்கியங்களை வகைப்படுத்திக் காட்சிப்படுத்த வழிகாட்டல்.
- முன்னைய கால இலக்கியங்களின் பண்புகளோடு இக்கால இலக்கியங்களின் பண்புகளை ஒப்பிட்டுப் பார்க்க வழிகாட்டல்.

**முதன்மைப் பதங்கள் (Key Words) எண்ணக்கருக்கள்**

- உரைநடை பெருவழக்காதல்.
- தமிழ் இலக்கியத்தில் புதுவகை இலக்கியவடிவங்களின் அறிமுகம் (நாவல், சிறுகதை).
- புதிய கருத்துக்கள் இலக்கியப் பொருளாதல்.
- மேலைத்தேய இலக்கிய மரபின் தாக்கத்திற்குத் தமிழிலக்கியம் உட்படல்.
- வெகுஜனத்தை நோக்கிய இலக்கியங்களின் தோற்றம்.
- சமயச் சார்பற்ற இலக்கியங்கள்.
- பழந்தமிழ் இலக்கியங்கள் பதிப்பிக்கப்படல்.
- திறனாய்வு : நவீன முறையிலான இலக்கிய ஆய்வுகளின் தோற்றம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனை

- ஐரோப்பியர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களின் பண்புகளைக் கூறுவார்.
- ஐரோப்பியர்கால இலக்கியப் பண்புகளைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை விளக்குவார்.
- ஐரோப்பியர்கால இலக்கியங்களின் பண்புகளை முன்னையகால இலக்கியப் பண்புகளோடு ஒப்பிட்டுக் கூறுவார்.

**தேர்ச்சி 5.0** : தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : புலவர்கள், படைப்பாளிகளினது படைப்பாற்றல் திறன்களையும் படைப்புக்கள் பற்றியும் எடுத்துக் கூறுவர்.

**விடய உள்ளடக்கம்** : தமிழிலக்கிய வரலாறு - ஐரோப்பியர் கால இலக்கிய கர்த்தாக்கள்.

**பாடவேளை** : 05

## கற்றற் பேறுகள்

- குறித்த படைப்பாளிகளின் வாழ்க்கைப் பின்னணியை அறிந்து கூறுவார்.
- அவர்களின் இலக்கியப் படைப்புக்களைப் பட்டியற்படுத்தி எழுதுவார்.
- படைப்புக்களையும் அவற்றின் பண்புகளையும் தொடர்புபடுத்திக் கூறுவார்.
- இலக்கிய வரலாற்றில் குறிப்பிட்ட படைப்பாளிகளின் பங்களிப்பை விளக்குவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- ஐரோப்பியர் காலம் பற்றிக் கலந்துரையாட வழிகாட்டல்.
- படைப்பாளிகளையும் படைப்புக்களையும் பற்றிக் கலந்துரையாடி எழுதச் செய்தல்.
- தமிழ் இலக்கிய வரலாற்றில் இவர்களின் பங்களிப்புப் பற்றி எழுத வழிப்படுத்தல்.

## முதன்மைப் பதங்கள் (Key Words) எண்ணக்கருக்கள்

**வீரமாமுனிவர் (1680-1741)**

இத்தாலியிற் பிறந்தவர். இயற்பெயர் கொன்ஸ்டன்ஸ்ரைன் ஜோசப் பெஸ்கி. இயேசு சபையைச் சேர்ந்த பாதிரியாரான இவர் 1710 இல் மதத்தைப் பரப்பும் நோக்குடன் தமிழகம் வந்து தமிழைக் கற்றுத் தமிழ்ப் பணியாற்றினார்.

**பணிகள்:**

- உரைநடைநூல்கள்
    - ♦ வேதவிளக்கம், வேதியரொழுக்கம், பேதகம் மறுத்தல், லூத்தர் இனத்தியல்பு, ஞானக்கண்ணாடி
    - ♦ அங்கத இலக்கியம், பரமார்த்தகுருகதை
- செய்யுள் இலக்கியங்கள்
    - ♦ காவியம் - தேம்பாவணி
    - ♦ சிற்றிலக்கியங்கள் - கித்தேரியம்மாள் அம்மானை திருக்காவலூர்க் கலம்பகம் அடைக்கலநாயகி வெண்பா, அன்னையழுங்கல் அந்தாதி

- ♦ அகராதி - சதுரகராதி, தமிழ் லத்தீன் அகராதி, தமிழ் - போர்த்துக்கேய அகராதி
- ♦ இலக்கணநூல்கள் - தொன்னூல்விளக்கம், செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம்.
- ♦ மொழி பெயர்ப்பு - திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால் என்பவற்றின் இலத்தீன் மொழி பெயர்ப்பு.
- ♦ எழுத்துச் சீர்திருத்தப் பணி

**உமறுப்புலவர்** (1642-)

- இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களுள் சிறப்பிடம் பெறுபவர்.
- தூத்துக்குடி மாவட்டம் நாகலாபுரத்தைச் சேர்ந்தவர்.
- எட்டயபுர மன்னன் வெங்கடேஸ்வர எட்டப்பூபதியின் அவைக்களப்புலவர்.
- கடிகை முத்துப் புலவரிடம் தமிழ் பயின்றவர்.

**பணிகள் :**

- சீறாப்புராணம் - முதலாவது இஸ்லாமியத் தமிழ்க் காப்பியம். இறைதூதர் முகமது நபிகளின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது. விலாதத்துக்காண்டம், நுபுவத்துக் காண்டம், ஹிஜிரத்துக்காண்டம் ஆகிய மூன்று காண்டங்கள் 92 பாடல்கள் 5027 விருத்தப் பாக்கள் உடையது.
- முதுமொழிமாலை - பக்திச் சுவை ததும்பும் 80 செய்யுட்களைக் கொண்டது.

**பிற முக்கிய ஆளுமைகள்**

- தத்துவபோதக சுவாமிகள்
- இராமலிங்க அடிகளார்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள், செயற்பாட்டுப்பத்திரம்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- ஐரோப்பியர் கால பிரதான இலக்கிய கர்த்தாக்கள் பற்றி அறிந்து எழுதுவார்.
- அவர்களின் பல்வேறுபட்ட பணிகள் பற்றி அறிந்து கூறுவார்.
- தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஐரோப்பியர் பெறும் இடத்தினை மதிப்பிடுவார்.
- பின்வருவோர் தமிழுக்காற்றிய பணியினை மதிப்பிடுவார்.
  - வீரமாமுனிவர்
  - உமறுப்புலவர்

**தேர்ச்சி 6.0** : ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : காலப் பகுப்பையும், அக் காலப் பின்னணியையும், அக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : ஈழத்து இலக்கிய வரலாறு - ஆங்கிலேயர் கால இலக்கியங்கள்

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்**

- ஆங்கிலேயர் கால அரசியல், பொருளாதார, சமய, சமூக நிலை பற்றிக் கூறுவார்.
- இக்காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்தி விளக்குவார்.
- இக்கால இலக்கிய வளர்ச்சிப் போக்கு, பற்றிக் கருத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஆங்கிலேயர் காலப் பின்னணிபற்றிக் கலந்துரையாடுதல்.
- இக்காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்தி, விளக்க வழிப்படுத்தல்.
- இக்காலத்தைய இலக்கிய வளர்ச்சிப் போக்கு, அவற்றுக்கான காரணங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) எண்ணக்கருக்கள்**

**அறிமுகம்**

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் பின்னரான 150 ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி, தமிழிலக்கிய வரலாற்றில் ஆங்கிலேயர் காலம் எனப்படுகின்றது. 19 ஆம் நூற்றாண்டு ஆரம்பமாவதற்குச் சற்று முன்னதாகத் தொடங்கிய ஆங்கிலேயர் ஆட்சி, இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை நடைபெற்றது.

இக்காலப்பகுதியிலே கல்விகற்ற மத்தியதர வர்க்கத்தினர் தோற்றம் பெற்றனர். இவர்களால், இலங்கையின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு நிலைகளில் மாத்திரமன்றிக் கலை, இலக்கிய முயற்சிகளிலும் பெருமளவு மாற்றங்கள் உருவாகின.

**ஆங்கிலேயர் கால இலக்கியங்கள்**

**இலக்கியங்கள்.**

ஆங்கிலேயர்கால இலக்கியங்களை இரண்டு வகையாக வகைப்படுத்தலாம்.

- செய்யுள் இலக்கியங்கள்:
  - ♦ நகுலமலைக் குறவஞ்சி (1895) - விசுவநாத சாஸ்திரியார்
  - ♦ இளசைப் புராணம் (1897)
  - ♦ மொஹிதீன் புராணம் (1889)
  - ♦ ஞானானந்த புராணம் (1874)
  - ♦ நவீனம், மரபு சார்ந்த முயற்சிகள்

(உ- ம்) :

| | | | |
|---|---|---|---|
| ◊ | கனகி புராணம் | - | சுப்பையனார் |
| ◊ | கோட்டுப் புராணம் | - | வே. இராமலிங்கம் |
| ◊ | தால புராணம் | - | சீ. காசிநாதப்புலவர் |
| ◊ | தத்தைவிடுதூது | - | தி. த. ரவணமுத்துப்பிள்ளை |
| ◊ | சூது புராணம் | - | சி. அப்புக்குட்டி ஐயர் |

இவை மட்டுமன்றி, ஏராளமான சிற்றிலக்கியங்கள் இக்காலப்பகுதியில் தோன்றின. பத்தொன்பதாம் நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்றிருந்த திருத்தலங்கள் எல்லாவற்றின் மீதும் சிற்றிலக்கியங்கள் இயற்றப்பட்டன. ஊஞ்சல், பதிகம், பிள்ளைத் தமிழ் என்பன ஒப்பீட்டளவில் அதிகமானவை.

- உரைநடை இலக்கியங்கள்:
  - ♦ துண்டுப்பிரசுரம்
  - ♦ கண்டன நூல்கள்
  - ♦ வசன நூல்கள்
  - ♦ கலைக்களஞ்சியம
  - ♦ பாட நூல்கள்
  - ♦ நாவல்
    - ◊ அசன்பே சரித்திரம் (1885) - அறிஞர். சித்திலெப்பை
    - ◊ மோகனாங்கி (1892) - த. சரவணமுத்துப்பிள்ளை
  - ♦ நாடகம்
    - ◊ விலாசம்
    - ◊ சபாநாடகங்கள்
    - ◊ நாடக மோடி
  - ♦ மொழிபெயர்ப்பு (தமிழ் - ஆங்கிலம்)
    - ◊ அரிச்சந்திரன் நாடகம்
    - ◊ குறிஞ்சிப் பாட்டு
  - ♦ பத்திரிகைகள்
    - ◊ கிறிஸ்தவ மதம் சார்ந்தவை - உதயதாரகை, சத்திய வேதபாதுகாவலன்
    - ◊ இந்துமதம் சார்ந்தவை - இந்து சாதனம், சைவ உதயபானு

- ◊ இஸ்லாம் மதம் சார்ந்தவை - முஸ்லிம் நேசன்
- ◊ அறிவியல் சார்ந்தவை - வைத்திய விசாமினி, விஞ்ஞான வர்த்தனி
- ◊ சிறுவர்க்கானவை - பாலியர் நேசன்

- ♦ அகராதி முயற்சிகள்
  - ◊ மானிப்பாய் அகராதி
  - ◊ தமிழ், ஆங்கிலம் - வினிஸ்லோ அகராதி
- ♦ பதிப்பு முயற்சிகள்
  - ◊ சூடாமணி மூலமும் உரையும் - ஆறுமுகநாவலர்
  - ◊ தொல்காப்பியம், கலித்தொகை, தணிகைப் புராணம், சூளாமணி, இலக்கண விளக்கம் போன்றன. - சி. வை. தாமோதரம் பிள்ளை
  - ◊ சூடாமணி நிகண்டு, நம்பி அகப்பொருள், கல்வளை அந்தாதி - வல்லை வைத்தியலிங்கம் பிள்ளை
- ♦ ஆய்வு நூல்
- ♦ தமிழ் இலக்கிய வரலாறு
  - ◊ தமிழ் புளூராக் (1859) - சைமன் காசிச்செட்டி
  - ◊ பாவலர் சரித்திர தீபகம் (1886) - ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை
- ♦ இலக்கணங்கள்
  - ◊ நித்திய கரும விதி
- ♦ அறிவியல் சார் பாடநூல்கள்
  - ◊ இரண வைத்தியம்
  - ◊ மனுஷ அங்காதி பாதம்
  - ◊ வைத்தியாகரம்
  - ◊ இந்து பதார்த்த சாரம்

## தரவிருத்தி உள்ளீடுகள்

- தமிழிலக்கிய வரலாற்று நூல்
- இலக்கிய நூல்களை வகைப்படுத்தி எழுதிய டிமைன்தாள்
- செயற்பாட்டுப்பத்திரம்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- இக்கால இலக்கியங்கள் தோன்றிய காலப்பின்னணியை அறிந்து கூறுவர்.
- ஈழத்திலக்கிய வரலாற்றில் ஆங்கிலேயர் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களைப் பொருள் அடிப்படையில் வேறுபடுத்துவர்.
- இக்கால இலக்கியப்போக்கினை நிர்ணயித்த காரணிகளைப் பட்டியற்படுத்துவர்.
- இக்காலத்தின் உரைநடை வளர்ச்சி பற்றி எடுத்துரைப்பர்.

**தேர்ச்சி 6.0** : ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : காலப் பகுப்பையும், அக் காலப் பின்னணியையும், அக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : ஈழத்திலக்கிய வரலாறு ஆங்கிலேயர் இலக்கியப் பண்புகள்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற்பேறுகள்**

- ஆங்கிலேயர் கால அரசியல், பொருளாதார, சமய, சமூக நிலை பற்றிக் கூறுவார்.
- இக்காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்தி விளக்குவார்.
- இக்கால இலக்கிய வளர்ச்சிப் போக்கு, பற்றிக் கருத்துரைப்பார்.
- இலக்கியப் பண்புகளை விளக்குவார்.
- இக்காலப் பகுதியில் குறிப்பிட்ட இலக்கிய ஆளுமைகள், இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஆங்கிலேயக் காலப் பின்னணி பற்றிக் கலந்துரையாடுதல்.
- இக்காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்தி விளக்க வழிப்படுத்தல்.
- இக்காலத்தய இலக்கிய வளர்ச்சிப் போக்கு, அவற்றுக்கான காரணங்கள் பற்றிக் கலந்துரையாடல்.
- இக்கால இலக்கியப் பண்புகள் பற்றிக் கருத்துரைக்க வழிப்படுத்தல்.
- முன்னைய கால இலக்கியப் பண்புகளிலிருந்து இக்காலத்தைய இலக்கியப் பண்புகள் வேறுபடுமாற்றைக் கூற வழிப்படுத்தல்.
- இக்காலப் பகுதியில் குறிப்பிட்ட இலக்கிய ஆளுமைகள் இலக்கிய வளர்ச்சிக்காற்றிய பணி பற்றிக் கலந்துரையாடுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) எண்ணக்கருக்கள்**

**அறிமுகம்**

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் பின்னரான 150 ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி, தமிழிலக்கிய வரலாற்றில் ஆங்கிலேயர் காலம் எனப்படுகின்றது.

**இலக்கியப் பண்புகள்:**

- சமயச்சார்பு நூல்கள்

  சிற்றிலக்கிய வடிவங்கள் சமயக் கருத்துக்களைக் கூறப்பயன்பட்டன. தல புராணங்களும் எழுந்தன.
- தமிழ் இலக்கியத்தில் புதுவடிவங்கள்

  சமூகச் சீர்கேடுகளை எடுத்துக்கூறும் இலக்கியங்களாக அமைதல். பெண் விடுதலைக் கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளமை.

  (எ-டு) தத்தைவிடுதூது, கனகிபுராணம், கோட்டுப்புராணம்
- பல்வகை உரைநடைப்பாங்குகள்

  (எ-டு) பத்திரிகை நடை, பாடப்புத்தக நடை, கட்டுரை நடை, கண்டன நடை, ஆக்க இலக்கியநடை
- நவீன இலக்கிய வடிவங்களின் தோற்றம்.

  (எ-டு) நாவல், சிறுகதை
- அறிவியல்துறை வளர்ச்சி
- உரை இலக்கியங்கள் தோன்றியமை
- இலக்கிய வரலாறு;

**எழுத்து முயற்சிகளின் ஆரம்பம்:**

- நாடக நூல்களின் தோற்றம்
- மொழிபெயர்ப்புக்கள் அதிகளவில் நிகழ்ந்தன.
- அகராதிகளின் தோற்றம்.
- ஒப்பியல் துறை வளர்ச்சி
- ஆங்கிலமொழிச் செல்வாக்குத் தமிழ்மொழியில் இடம்பெறல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- தமிழிலக்கிய வரலாற்று நூல்
- இலக்கியப்பண்புகள் எழுதப்பட்ட டிமைன்தாள்
- செயற்பாட்டுப்பத்திரம்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்**

- ஈழத்திலக்கிய வரலாற்றில் ஆங்கிலேயர் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களைச் சமய அடிப்படையில் வகைப்படுத்துவார்.
- இக்கால இலக்கியங்கள் தோன்றிய காலப்பின்னணியை அறிந்து கூறுவார்.
- இலக்கியங்களின் பண்புகளை நிர்ணயித்த காரணிகளைப் பட்டியற்படுத்துவார்.
- ஆங்கிலேயர் கால இலக்கியப்பண்புகளை விளக்கி எழுதுவார்.

**தேர்ச்சி 6.0** : ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : புலவர்கள், படைப்பாளிகளினது படைப்பாற்றல் திறன்களையும், படைப்புக்கள் பற்றியும் எடுத்துக்கூறுவார்.

**விடய உள்ளடக்கம்** : ஈழத்துத்தமிழிலக்கிய வரலாறு - ஆங்கிலேயர் காலம் இலக்கிய கர்த்தாக்கள் (19ஆம் நூற்றாண்டு)

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்**

- ஆங்கிலேயர் காலத்தில் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த ஆளுமைகளை இனங்கண்டு கூறுவார்.
- குறிப்பிட்ட இலக்கிய கர்த்தாக்கள் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை விளக்கி எழுதுவார்.
- குறிப்பிட்ட இலக்கிய கர்த்தாக்களின் தனித்துவமான பண்புகளை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஆங்கிலேயர் கால சமூக, சமய, அரசியல், பொருளாதார பின்னணிகளைக் கூற வழிகாட்டுதல்.
- இக்காலத்தில் இலக்கியப் பணியாற்றிய குறித்த ஆசிரியர்களின் இலக்கியப்பணிகளை எழுதிக்காட்ட வழிப்படுத்துதல்.
- தமிழ் இலக்கிய வரலாற்றில் குறித்த இலக்கிய கர்த்தாக்கள் பெறும், முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுதல்.
- மாணவர்கள் குழுநிலையில் கலந்துரையாடி, குறித்த ஆசிரியர்களின் இலக்கியப் பணிகளை எழுதிக் காட்ட வழிப்படுத்துதல்.

**முதன்மைப் பதங்கள் (**keywords**) எண்ணக்கருக்கள்**

- **சைமன் காசிச்செட்டி**

- **ஆறுமுகநாவலர் ( 05.12.1879 - 18.12.1882)**
  (இயற்பெயர் ஆறுமுகம்) நல்லூரிற் பிறந்தார். சைவத்தையும் தமிழையும் வளர்க்கப் பெரும் பணியாற்றினார்.
  - ♦ திருவாவடுதுறை ஆதீனத்தில் நாவலர் பட்டம் பெற்றவர்.
  - ♦ அச்சு இயந்திர சாலைகளை நிறுவிப் பதிப்புப் பணிகளை மேற்கொண்டவர்.
  - ♦ பதிப்புப்பணி - வித்தியாநுபாலன யந்திரசாலையை நிறுவுதல் - சுத்தப்பதிப்பு

- ♦ சூடாமணி நிகண்டு
- ♦ சௌந்தர்யலகரி உரை
- ♦ பாலபாடம்,
- ♦ ஆத்திசூடி,
- ♦ கொன்றைவேந்தன் உரை
- ♦ திருமுருகாற்றுப்படை உரை
- ♦ பெரிய புராணங்கள் போன்றவை
- ♦ பிற்காலம் பதிப்பாசிரியருக்கு வழிகாட்டி
- ♦ உரைநடை: சாதாரணமக்களும், சிறுவர்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய எளிமையான நடையில் நூல்களை எழுதியமை.

  உ - ம்: சைவவினாவிடை, பாலபாடம்.
- ♦ வீரமாமுனிவருக்கு - அடுத்தகட்ட உரைநடை வளர்ச்சியை நாவலர் முன்னெடுக்கின்றார். வசனநடை கைவந்த வல்லாளர் எனப்போற்றப்படுதல்.
- ♦ இலக்கணத்தைத் தெளிவாக அறிந்துகொள்வதற்கான நூல்கள் எழுதியமை.
  - ◊ நன்னூற்காண்டிகை
  - ◊ இலக்கணச்சுருக்கம்
  - ◊ இலக்கண வினா விடை
- ♦ செய்யுள் வடிவில் இருந்த தமிழ்நூல்கள் சாதாரணமக்களிடமும் சென்றடைய வேண்டும் என்பதற்காக உரைநடையில் எழுதியமை. - பெரியபுராண திருவிளையாடல் வசனங்கள்.
- ♦ ஆங்கில மொழியிற் காணப்பட்ட நிறுத்தக் குறியீடுகளைத் தமிழ்மொழிக்குச் செம்மையாக அறிமுகப்படுத்தியமை.
- ♦ தமிழ் மாணவர்களுக்காகப் பாடசாலைகளை ஆரம்பித்தமை.
- ♦ தமிழிற் பிரசங்க மரபை ஆரம்பித்தமை.

- **சி. வை. தாமோதரம்பிள்ளை**
  - ♦ பதிப்பு நெறிமுறைகளைப் பின்பற்றியதாக சிறந்த முறையில் பழந்தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்துள்ளார்.
  - ♦ நாவலரை முன்னோடியாகக் கொண்டு பதிப்புத்துறையில் ஈடுபட்டவர்.
  - ♦ தினவர்த்தமானி என்ற பத்திரிகையின் ஆசிரியர்.
  - ♦ உ. வே. சாமிநாதஐயருக்கு வழிகாட்டியவராக விளங்கினார்.
  - ♦ கல்லூரி ஆசிரியராக, பத்திரிகை ஆசிரியராக, நூற்பதிப்பு ஆசிரியராக, பதிப்பாசிரியராகத் திகழ்ந்தார்.
  - ♦ நீதிநெறி விளக்கம், தொல்காப்பியச் சொல்லதிகாரம், வீரசோழியம், தணிகைப் புராணம், இறையனார் அகப்பொருள் உரை, தொல்காப்பியப் பொருளதிகாரம், சூளாமணி, கலித்தொகை, இலக்கண விளக்கம் ஆகிய நூல்களைப் பதிப்பித்தார்.
- **ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை**
- **பாவலர் துரையப்பா பிள்ளை**
- **குமாரசுவாமிப் புலவர்**

போன்றோரையும் குறிப்பிடலாம்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- இலக்கிய கர்த்தாக்கள், அறிஞர்களது பாடல்கள்.
- ஈழத்திலக்கிய வரலாற்று நூல்கள்.

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- ஆங்கிலேயர் காலத்தின் முக்கிய இலக்கிய கர்த்தாக்கள் பற்றிச் சுருக்கமாக எடுத்துரைப்பர்.
- இலக்கிய கர்த்தாக்களின் பல்துறைசார்ந்த இலக்கியப்பணிகள் பற்றிக் கருத்துரைப்பர்.
- இலக்கிய கர்த்தாக்களின் இலக்கியப்பணிகளின் முக்கியத்துவத்தினை மதிப்பிடுவர்.
- கீழ்வரும் தமிழ் இலக்கிய கர்த்தாக்கள், அறிஞர்கள் தமிழுக்காற்றிய பணியினை மதிப்பிடுவார்.
  1. சி. வை. தாமோதரம்பிள்ளை
  2. ஆறுமுக நாவலர்

**தேர்ச்சி 7.0** : மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சிமட்டம் 7.2** : சொற்களைப் பொருள் அறிந்து சேர்த்தும் பிரித்தும் எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : புணரியல்

**பாடவேளை** : 12

**கற்றற் பேறுகள்**

- புணர்ச்சி என்றால் என்ன என்பது பற்றி விளக்குவார்.
- சொற்கள் புணரும் விதத்தை அடிப்படையாகக் கொண்டு புணர்ச்சியை வகைப்படுத்தி, வரைவிலக்கணப்படுத்துவார்.
- புணர்ச்சி வகைகளுக்கு ஏற்ற உதாரணங்கள் தந்து விளக்குவார்.
- புணர்ச்சியின் சில விதிகள், தற்காலத்தில் பின்பற்றப்படாதவாற்றை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- உதாரணங்களை வழங்கி, புணர்ச்சியினை வகைப்படுத்த வழிகாட்டுதல்.
- புணர்ச்சியையும், புணர்ச்சி வகைகளையும் வரைவிலக்கணப்படுத்தி உதாரணம் கூற வழிப்படுத்துதல்.
- புணர்ச்சி விதிகள் சில, தற்காலத்தில் பின்பற்றப்படாதவாற்றை விளங்கிக் கொள்ளும் விதத்தில் உதாரணங்களைத் தருவதற்கு வழிகாட்டுதல்.

**முதன்மைப் பதங்கள் (key words) எண்ணக்கருக்கள்**

- புணர்ச்சி
- நிலைமொழி, வருமொழி
- அகப்புணர்ச்சி - புறப்புணர்ச்சி
- வேற்றுமைப் புணர்ச்சி - அல்வழிப் புணர்ச்சி
- இயல்புப் புணர்ச்சி - விகாரப் புணர்ச்சி (தோன்றல், திரிதல், கெடுதல்)
- உயிரீற்றுப் புணர்ச்சி : (1) உயிர்முன் உயிர் வருதல்
  (2) உயிர்முன் மெய் புணர்தல்
- மெய்யீற்றுப் புணர்ச்சி : (1) மெய்முன் மெய் புணர்தல்
  (2) மெய்முன் உயிர் புணர்தல்
- உடம்படுமெய்ப் புணர்ச்சி
- குற்றியலுகரப் புணர்ச்சி
- லகர, ளகர, ஈற்றுப் புணர்ச்சி
- னகர, ணகர ஈற்றுப் புணர்ச்சி

- மகர, யகர, ரகர, ழகர ஈற்றுப்புணர்ச்சி
- வல்லினம் மிகுதல்/ மிகாமை
- சிறப்பு விதிப் புணர்ச்சிகள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- புணர்ச்சி வகைகளை விளங்கிக் கொள்ளக்கூடிய சொல்லட்டைகள்
- இலக்கண நூல்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்**

- புணர்ச்சி என்பதை வரைவிலக்கணப்படுத்திக் காட்டுவார்.
- புணர்ச்சி வகைகளைக் கூறுவார்.
- புணர்ச்சி வகைகளுக்கு உதாரணம் தந்து விளக்குவார்:
- புணர்ச்சி விதிகள் சில தற்காலத்தில் பின்பற்றப்படாதவாற்றை எடுத்துக்காட்டுவார்.

**தேர்ச்சி 7.0** : மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சிமட்டம் 7.3** : சொற்களின் அமைப்பையும் வகைகளையும் அறிந்து மொழியைச் செம்மையாகப் பயன்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம்** : இடைச்சொல்

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள்**

- இடைச்சொற்களின் இயல்பை அறிந்து கூறுவார்.
- இடைச்சொற்களின் வகைகளை இனங்கண்டு எழுதுவார்.
- இடைச்சொற்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை விளங்கிப் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- வாக்கியங்கள் சிலவற்றை வழங்கி அவற்றுள் இடைச்சொற்களை வேறுபடுத்தி இனங்காண வழிப்படுத்தல்.
- இடைச்சொற்களின் பயன்பாடு, அவற்றின் வகைப்பாடு தொடர்பாகக் கலந்துரையாடி விளக்குதல்.
- இடைச்சொற்கள் பயன்படும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்பப் பொருத்தமாகப் பிரயோகிக்க வாய்ப்பளித்தல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- இடைச்சொற்கள், பெயர்ச்சொல், வினைச்சொல் என்பன போல தனித்து நின்று பொருள் தராமல் அவற்றுடன் இணைந்து பல்வேறு இலக்கணப் பொருள் தரும் சொற்கள் ஆகும்.
- இடைச்சொற்கள் எண்ணிக்கையில் குறைவானவை ஆயினும் வழக்கில் பெருமளவிற்குப் பயன்பட்டு வருகின்றன.
- இடைச்சொற்கள் பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் இடைச்சொற்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (1) | வேற்றுமை உருபுகள் | (ஐ, கு, அது..........) |
| (2) | சொல்லுருபுகள் | (கொண்டு, ஆக...........) |
| (3) | பன்மை விகுதிகள் | (கள், ஆர்..............) |
| (4) | ஆக்கப்பெயர் விகுதிகள் | (மை, சி, இயம்...........) |
| (5) | தொழிற்பெயர் விகுதிகள் | (தல், அது, மை..........) |
| (6) | திணை, பால் விகுதிகள் | (ஏன், ஓம், ஆய்...........) |
| (7) | கால இடைநிலைகள் | (த், ட், கின்று...........) |

(8) எதிர்மறை இடைநிலைகள் (ஆ, ஆத், மாட்டு.........)

(9) பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் (அ, உ, இ, மல்...........)

(10) ஏவல், வியங்கோள் வினை விகுதிகள் (க, இய...........)

(11) சாரியைகள் (அத்து, அம்............)

(12) உவமை உருபுகள் (போல, பார்க்கிலும்.........)

(13) இணைப்பிடைச்சொற்கள் (உம், அல்லது, ஆகவே.........)

(14) தத்தம் பொருள் உணர்த்துவன (உம், தான், மட்டும்.........)

- இடைச்சொற்கள் தத்தம் பொருள் உணர்ந்தும் இடைச்சொற்கள் பல்வேறு பொருள்களைப் புலப்படுத்தும் வகையில் சந்தர்ப்பங்களுக்கேற்ப, பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(1) உம் - எதிர்மறை - விவசாயிகள் கடினமாக உழைத்தும் விளைச்சலைப் பெறமுடியவில்லை.
- ஐயம் - ஆசிரியர் வந்தாலும் வருவார்.
- எச்சம் - காலையிலும் இறைவனை வணங்குவேன்.
- முற்று - யாதும் ஊரே; யாவரும் கேளிர்.
- உயர்வு சிறப்பு - வள்ளுவரும் போற்றிய இல்லறம்.
- இழிவு சிறப்பு - திருடனிலும் மோசமானவன்.
- தெரிநிலை - அழகும் இல்லை அறிவும் இல்லை.
- ஆக்கம் - வீடு அலுவலகமும் ஆயிற்று.
- உடனடித்தன்மை - மணியடித்ததும் மாணவர்கள் வெளியேறினர்.
- மாற்று வழி - நீங்கள் நடந்தும் வரலாம், வாகனத்திலும் வரலாம்.
- உறுதிப்பாடு மறுப்பு - உலகமே எதிர்த்தாலும் உன்னைக் கைவிடேன்.

(2) ஏ (ஏகாரம்) எனும் இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசை நிறை என்னும் பொருள்களில் வரும்.

(3) ஓ (ஓகாரம்) எனும் இடைச்சொல் ஒழியிசை, வினா, உயர்வுச் சிறப்பு, இழிவுச் சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, பிரிநிலை, அசைநிலை ஆகிய பொருள்களில் வரும்.

(4) கொல் எனும் இடைச்சொல் ஐயம், அசைநிலை என்னும் பொருள்களில் வரும்.

(5) தான் எனும் இடைச்சொல் அழுத்தம் விகற்பப்பொருளில் வரும்.
(அம்மாதான் இன்று சமையல் செய்தாள்) - அழுத்தம்

(6) மட்டும் எனும் இடைச்சொல் வரையறைப் பொருளில் வரும்.
(முதலாம் தவணைப்பரீட்சைக்கு நான்கு பாடங்களில் இருந்து மட்டும் வினாக்கள் வரும்)

(7) ஆவது எனும் இடைச்சொல் திடக்குறிப்பின்மை, குறைந்தபட்சம், இது அல்லது அது, நடவாமை, வரிசைப்பொருள் ஆகிய பொருள்களில் வரும்.

(8) கூட எனும் இடைச்சொல் குறைந்தபட்சம், முற்று, எச்சம் தழுவிய எதிர்மறை ஆகிய பொருள்களில் வரும்.
அனுமதி, சாத்தியப்பாடு, பொருத்தப்பாடு முதலியவற்றை உணர்த்தும்.

- இடைச் சொற்கள் வாக்கியத்தில் இணைப்பிடைச் சொல்லாகவும் பயன்படும். உம், அல்லது, ஆனால், இல்லையென்றால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும் முதலிய இணைப்பிடைச் சொற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- இடைச்சொல் பற்றிய சொல்லட்டைகள்/அட்டவணைகள்.
- இடைச்சொற்களின் பொருள் புலப்படும் வகையிலான வாக்கியங்கள், பந்திகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- இடைச்சொற்களை அதன் இயல்புக்கேற்ப வேறுபடுத்திக் கூறுவார்.
- இடைச்சொற்களைத் தேவைக்கேற்பப் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.
- இடைச்சொற்களின் பயன்பாடுகள் பற்றி விளக்குவார்.

**தேர்ச்சி 7.0** : மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வர்.

**தேர்ச்சிமட்டம் 7.3** : சொற்களின் அமைப்பையும் வகைகளையும் அறிந்து மொழியைச் செம்மையாகப் பயன்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம்** : உரிச்சொல்

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்**

- உரிச்சொல் என்றால் என்ன என்பது பற்றிக் கூறுவார்.
- உரிச்சொற்களை இனங்கண்டு வேறுபடுத்தி விளக்குவார்.
- உரிச்சொற்களை வகைப்படுத்தி எழுதுவார்.
- உரிச்சொற்களின் பயன்பாட்டை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- செய்யுள் ஒன்றினை வழங்கி அதில் இடம்பெற்றுள்ள உரிச்சொற்களை இனங்காண வழிப்படுத்தல்.
- உரிச்சொற்களின் வகைகள், இயல்புகள் தொடர்பில் கலந்துரையாடுவதன் மூலம் விளக்குதல்.
- உரிச்சொற்களின் பயன்பாட்டை உதாரண மூலம் விளக்குதல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்**

- பல்வேறு வகைப்பட்ட பண்புகளைக் கொண்டதாய் பெயர்ச்சொல், வினைச்சொல்லோடு இணைந்து உரிச்சொல் வழங்கி வருகின்றது.
- உரிச்சொற்கள் தனித்து இயங்காது.
- உரிச்சொற்கள் இருவகைப்படும்.

  (அ) ஒரு பொருள் குறித்த பல சொற்கள் மிகுதி என்ற பொருளைப் பின்வரும் சொற்கள் உணர்த்துகின்றமை.

  (1) சால - சாலச் சிறந்தவன்.

  (2) உறு - ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு.

  (3) தவ - ஈயாது ஈயும் உயிர் தவப்பலவே.

  (4) நனி - பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானில் நனி சிறந்தனவே.

  (5) கூர் - பரியது கூர்ங் கோட்டத்தாயினும் யானை வெரூஉம் புலி தாக்குறின்.

  (6) கழி - கழி கண்ணோட்டம்

(ஆ) பல பொருள் குறித்த ஒரு சொல்

(1) கடி நகர் (காவல்)

(2) கடி நுனைப்பகழி (கூர்மை)

(3) கடி மலர் (வாசனை)

(4) கடி அரமகளிர் (அச்சம்)

(5) கடி உணவு (மிகுதி)

(6) கடி வினை (திருமணம்)

(7) கடி மிளகு (காரம்)

### தரவிருத்தி உள்ளீடுகள்

- உரிச்சொற்கள் கொண்ட சொல்லட்டை
- உரிச்சொற்களின் பொருள் புலப்படக்கூடிய வாக்கியங்கள்

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனை

- உரிச்சொற்களை வேறுபடுத்திக் கூறுவார்.
- உரிச்சொற்களின் பயன்பாடு பற்றி விளக்குவார்.
- ஒரு பொருள் குறித்த உரிச்சொற்களை இனங்கண்டு எழுதுவார்.
- பல பொருள் குறித்த ஒரு உரிச்சொல்லினை இனங்கண்டு எழுதுவார்.

## தரம் - 13

## இரண்டாந் தவணை


| இல | விடய உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 01 | கட்டுரையாக்கம் | 48 - 50 |
| 02 | கிரகித்தல் | 51 |
| 03 | விவாதம் | 52 - 53 |
| 04 | புறநானூறு | 54 - 55 |
| 05 | மணிமேகலை (119 - 141) | 56 - 58 |
| 06 | காரணமாலை (15 பாடல்கள்) | 59 - 61 |
| 07 | கவிதை - கவிஞன் | 62 - 63 |
| 09 | கவிதை - எல்லாம் உமதே | 64 - 65 |
| 10 | கவிதை - வீசாதீர் | 66 - 68 |
| 11 | இலங்கையாற்றுப்படை | 69 - 70 |
| 12 | சிறுகதை - கூத்து | 71 - 72 |
| 13 | சிறுகதை - நெருக்கடி | 73 - 75 |
| 14 | இலக்கிய வரலாறு - தற்காலம் | 76 - 77 |
| 15 | சிறுகதை | 78 - 80 |
| 16 | நாவல் | 81 - 83 |
| 17 | கவிதை | 84 - 86 |
| 18 | இலக்கணம் - தொடரியல் | 87 - 89 |
| 19 | இலக்கணம் - வாக்கியவியல் | 90 - 91 |
| 20 | வாக்கியம் இணைப்பிடைச் சொற்கள் | 92 - 94 |
| 21 | வழு நிலை வழா நிலை | 95 - 97 |
|  | நிறுத்தக் குறியீடுகள் | 98 - 100 |

**தேர்ச்சி 4.0** : இலக்கியங்களைக் கற்பதனூடாகத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : ஆக்கங்களை வாசித்துப் பெற்ற அனுபவத்தின் ஊடாகச் சுய ஆக்கங்களைப் படைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : கட்டுரை எழுதுதல்

**பாடவேளை** : 06

**கற்றற்பேறுகள்**

- கட்டுரைத் தலைப்பிற்கேற்ப, தகவல்களைத் தேடிக் குறிப்பெடுப்பார்.
- கட்டுரைத் தலைப்பினை விளங்கிச் சட்டகம் அமைப்பார்.
- கட்டுரைக்கான நுட்பங்களை அனுசரித்துக் கட்டுரை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பாடப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள கட்டுரைகளை வாசிக்க வழிப்படுத்துல்.
- வழங்கப்பட்ட தலைப்பிற்குப் பொருத்தமான தகவல்களைத் திரட்ட வழிகாட்டுதல்.
- கட்டுரைக்கான சட்டகம் அமைத்தல் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- சட்டகத்தின் அடிப்படையில் செம்மையான மொழிநடையில் கட்டுரை எழுதுவதற்கு வழிப்படுத்துதல்.

**முதன்மைப்பதங்கள் (Key Words) எண்ணக்கருக்கள்:**

**கட்டுரை வகைகள்** மொழி, இலக்கியம், பெரியார், பொதுநீதி, அறிவியல், சூழல், தொடர்புச்சாதனங்கள், பண்பாடு தொடர்பான கட்டுரைகள்.

உ+ம் (1) **செம்மொழியான தமிழ்மொழி**

1) செம்மொழி எனப்படுவதற்கான தகுதிகள்

2) உலகிற் செம்மொழிகள்
   கிரேக்கம், எபிரேமியம், சீனம், இலத்தீன், சமஸ்கிருதம், அரபு, தமிழ், பாரசிகம்.

3) நீண்டகால இலக்கியப் பாரம்பரியம்.

4) செவ்வியல் இலக்கியங்கள் இருத்தல்.
   1. 2000 வருடங்களிற்கு மேற்பட்ட பழமையான இலக்கியப் பாரம்பரியம்.
   2. இன்றும் வழக்கில் உள்ளமை.

5) 1994 இல் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டமை.

6) செம்மொழியாக்கப்பட்டதால் ஏற்பட்ட நன்மைகள்.
   1. சர்வதேச அங்கீகாரம்.
   2. உலகப் பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழிப் பீடங்கள் காணப்படல்.
   3. பிறநாட்டவர்கள் தமிழ்மொழியைக் கற்கும் வாய்ப்பு.

உ ம் (2) **பேச்சுத்தமிழும் எழுத்துத் தமிழும்**

1) தமிழில் இருவகை வழக்குகள்

பேச்சுவழக்கு, எழுத்து வழக்கு

2) நவீனகாலம் வரை செந்தமிழே செல்வாக்குப் பெற்றிருந்தது.

- இலக்கியங்கள், இலக்கணநூல்கள், உரைநூல்கள் அனைத்தும் இலக்கியத் தமிழிலேயே எழுதப்பட்டன.
- செந்தமிழ் அனைவருக்கும், எல்லாத் தமிழ்பேசும் பிரதேசங்களுக்கும் பொதுவான நியமத்தமிழ் எனக் குறிப்பிடப்படுகிறது.

பேச்சுத் தமிழ் பிரதேசத்திற்குப் பிரதேசம், சமூகத்திற்குச் சமூகம் வேறுபடும். இவற்றை கிளைமொழிகள் என்றும் அழைப்பர்.

உ + ம் சமூகக்கிளை மொழி - மீனவசமூகம், விவசாயசமூகம்
பிரதேசக்கிளைமொழி - மலையகம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு

நவீன இலக்கிய வருகையின் பின் அவ்வப்பிரதேசப் பேச்சுத்தமிழ் இலக்கியங்களிற் செல்வாக்குப் பெறல்.

நாவல், சிறுகதை, நாடகம்

- பண்டைய இலக்கணங்கள் இலக்கியத் தமிழிற்கு முதன்மை கொடுத்தல்.
- நவீன இலக்கணகாரர்கள் பேச்சுத் தமிழிற்கு முதன்மை கொடுத்தல்.
- பொது அறிவுறுத்தல்கள், ஊடகங்கள், அலுவலகரீதியான அறிக்கைகள், கல்வி, ஆராய்ச்சி முதலான துறைகளில் எழுத்துத்தமிழ் கையாளப்படல்.
- இருவகை வழக்கும் மொழியைப்பொறுத்த வரையில் இன்றியமையாதனவையே.

**கட்டுரை எழுதும் பொழுது கவனிக்கப்பட வேண்டியவை**

- தலைப்புக் கேற்ப பொருளமைவு.
- அமைப்பு (எடுப்பு, தொகுப்பு, முடிப்பு).
- சொல்லாட்சி, நேர்த்தி, உறுப்பு, கருத்தொழுங்கு.
- மொழிச் செம்மை.

## தரவிருத்தி உள்ளீடுகள்

மாதிரிக் கட்டுரைகள் - தமிழ்ப்பணி, தமிழ்ப்பண்பாடு தொடர்பானவை.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- கட்டுரைத் தலைப்பினை விளங்கிக் கூறுவார்.
- கட்டுரைத் தலைப்பிற்கேற்ப, கட்டுரைக்கான சட்டகம் அமைப்பார்.
- கட்டுரைச் சட்டகத்திற்கேற்ப, பொருத்தமான தகவல்களைத் திரட்டிப் பட்டியற் படுத்துவார்.
- கட்டுரை அமைப்பிற்கேற்ப தகவல்களைத் தொகுத்துச் செம்மையான மொழிநடையில் எழுதுவார்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி: 1.0** | : | தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும் வகையில் கட்டுருவாக்கத் திறன் உள்ளவராகச் செயற்படுவார். |
| **தேர்ச்சி மட்டம்: 1.1** | : | கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | கிரகித்தல் |
| **பாடவேளைகள்** | : | 05 |

**கற்றற் பேறுகள்:**

- கட்டுரை ஆசிரியர் / கவிஞருடைய ஆக்கம் பற்றி விளங்கிக் கூறுவார்.
- உரைப்பகுதி / செய்யுட்பகுதிகளில் இடம்பெற்ற விடயங்களை விளங்கித் தமது கருத்துக்களை முன்வைப்பார்.
- வாசித்துக் கிரகித்த தகவல்களை மீண்டும் தமது மொழிநடையில் கூறுவார்.
- கொடுக்கப்படும் கதைப் பகுதியில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- தரப்பட்ட ஆக்கத்தை நிதானமாகவும் மௌனமாகவும் வாசிக்கச் செய்தல்.
- அருஞ்சொற்களை இனங்காண வழிப்படுத்துதல்.
- தரப்பட்ட பகுதியில் கூறப்பட்ட விடயத்தின் சாராம்சத்தைக் கூறவைத்தல்.
- தரப்பட்ட பகுதியோடு தொடர்பாக வினவப்படும் வினாக்களுக்கு விடை எழுதச்செய்தல்.

**முதன்மைப்பதங்கள்** (Key words) **எண்ணக்கருக்கள்**

- கருத்தூன்றி வாசித்தல்.
- மையக்கருத்து, துணைக்கருத்து என்பவற்றை இனங்காணல்.
- முக்கிய கருத்துக்களைக் குறிப்பெடுத்தல்.
- சொந்த மொழிநடையில் எழுதுதல்.
- கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருத்தமாக விடையளித்தல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மாதிரி உரைநடை.
- மாதிரிச்செய்யுள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்**

- கொடுக்கப்பட்ட பகுதியின் மையக்கருத்தைக் கூறுவார்.
- குறித்த பகுதியில் உள்ள அருஞ்சொற்களுக்கான பொருளைக் கூறுவார்.
- வழங்கப்பட்ட பகுதியிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **1.0** | : | தொடர்பாடல் திறனை விருத்திசெய்யும் வகையில் கட்டுருவாக்கத் திறன் உள்ளவராகச் செயற்படுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | **1.4** | : | குறித்த விடயம் தொடர்பாக வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் நிகழ்ச்சிகளிலும் தமது கருத்துக்களை முன்வைப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | | : | விவாதம் |
| **பாடவேளைகள்** | | : | 06 |

**கற்றற் பேறுகள்**

- விவாத நியமங்களைப் பின்பற்றி விவாதிப்பார்.
- தலைப்பிற்குப் பொருத்தமான தகவல்களைத் திரட்டிப் பட்டியற்படுத்துவார்.
- தமது அணிக்குச் சாதகமான கருத்துக்களை முன்வைத்து விவாதிப்பார்.
- பிறர் கருத்துக்களைப் பொறுமையாகச் செவிமடுத்து, அவற்றைத் தர்க்கரீதியாக மறுதலித்து, தமது கருத்துக்களை வலியுறுத்தி விவாதிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- மாணவர்கள் பார்த்த/செவிமடுத்த விவாத நிகழ்ச்சிகள் பற்றிக் கேட்டு, கலந்துரையாடி விவாதத்தை அறிமுகம் செய்தல்.
- விவாதமொன்றின்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும், விவாதிப்போரது வகிபாகம் தொடர்பாகவும் கலந்துரையாடுதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, தலைப்பை வழங்கி விவாதத்தில் ஈடுபட வழிப்படுத்தல்.
- மாணவர்கள் நிகழ்த்திய விவாதங்கள் தொடர்பாக ஏனைய மாணவர்களின் கருத்துக்களைக் கேட்டுக் கலந்துரையாடுதல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்**

**விவாதமொன்றிற்காக மேற்கொள்ளவேண்டிய முன்னாயத்தங்கள்:**
- தலைப்பைப் புரிந்து கொள்ளல்.
- உபதலைப்புக்களாகப் பிரித்து, விவாதத்தில் பங்கெடுப்போர் தகவல்களைத் திரட்ட வழிப்படுத்தல்.
- விவாதத்தின்போது கருத்துக்களை முன்வைக்கும் முறை தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- வெட்டியும் ஒட்டியும் பேசுவதற்கு வழிப்படுத்தல்.

**விவாதத்தின்போது கருத்துக்களை முன்வைக்கும் படிமுறைகள்**
- தலைப்புக்குப் பொருத்தமான சாதகமான கருத்துக்களை ஒவ்வொன்றாக முன்வைத்தல் (வலியுறுத்துதல், மீளவலியுறுத்தல், ஒப்பிடல்)
- தலைப்பை நியாயப்படுத்துவதற்கான ஆதாரங்களை முன்வைத்து விவாதித்தல்.
- வழங்கப்பட்ட நேரத்தை அனுசரித்து விவாதித்தல்.

**விவாதத்தின்போது தவிர்க்க வேண்டிய விடயங்கள்**

- சுற்றிவளைத்துப் பேசுதல்
- தலைப்பினின்றும் விலகுதல்
- கூறியது கூறல்
- தேவையின்றி விரித்துப் பேசுதல்
- தனிப்பட/நேரடியாகத் தாக்கிப்பேசுதல்.

**விவாதிகளிடம் இருக்க வேண்டிய திறன்கள்**

- தலைமைத்துவம் (தலைவரிடம்)
- அவதானிக்கும் திறன்
- சந்தர்ப்பத்திற்கேற்ப, கருத்துக்களை முன்வைத்தலும் நியாயப்படுத்தலும்.
- குழுவில் ஒருமைப்பாட்டுடன் செயற்படல்.
- கருத்துக்களை உள்வாங்கி, தர்க்கித்து, நிராகரித்து நியாயப்படுத்தல்.
- நேர முகாமைத்துவம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மாதிரி விவாத இறுவட்டு.
- விவாதத் தலைப்பிற்குப் பொருத்தமான தகவல்கள்.
- காகிதாதிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்**

- விவாதத்தில் கருத்துக்களை முன்வைத்து ஒட்டியும் வெட்டியும் பேசுவார்.
- தகவல்களைப் பொருத்தமாகத் தொகுத்துப் பேசுவார்.
- எதிரணியின் கருத்துக்களைப் பொறுமையாகச் செவிமடுத்துத் தம் கருத்துக்களை வலியுறுத்திப் பேசுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 2.0 | : | செய்யுள் இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | 2.1 | : | உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவர். |
| **விடய உள்ளடக்கம்** | | : | புறநானூற்றுச் செய்யுள் - 142<br>அறு குளத்து உருத்தும்.... |
| **பாடவேளைகள்** | | : | 05 |

**கற்றற் பேறுகள்**

- செய்யுளைச் சந்தி பிரித்து வாசிப்பார்.
- அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.
- செய்யுளின் பொருளை விளங்கி எழுதுவார்.
- புலவர் வலியுறுத்த விழைந்த விடயத்தைக் கூறுவார்.
- கையாளப்பட்ட அணிகளை இனங்கண்டு விளக்குவார்.

**பாடத்தை திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- புறநானூறு பற்றி அறிமுகத்தைத் தேடிஅறியச் செய்தல்.
- பாடலை வாசிக்க வழிப்படுத்தல்.
- பாடலைச் சந்தி பிரித்து வாசித்து அரும்பதங்களின் பொருள் கூற வழிகாட்டுதல்.
- பாடலின் பொருளைச் சொந்த மொழிநடையில் எழுத வழிப்படுத்தல்.
- பாடலில் வெளிப்படுத்த விழைந்த விடயம், கையாளப்பட்ட உத்தி, அணி தொடர்பாகக் கலந்துரையாடுதல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்**

**புறத்திணை** : புரவலர்களின் கொடைத்திறன், வீரச்சிறப்பு முதலியவற்றைப் பாடுதல்.

பாடப்பட்ட புரவலன் கடையெழுவள்ளல்களில் ஒருவன் :

- வையாவிக்கோப்பெரும் பேகன் மயிலுக்குப் போர்வை கொடுத்தவன். கபிலர், பரணர், வன் பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்க் கிழார் ஆகிய புலவர்கள் இவனைப் பாடியுள்ளனர்.

**பாடிய புலவர் :**

- சங்கப்புலவர்களில் முதன்மையான ஒருவர். புறநானூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை, குறுந்தொகை ஆகிய நூல்களில் இவர் பாடிய 61 செய்யுள்கள் உள்ளன.

**பாடல் இடம் பெற்ற திணை :**

- பாடாண்திணை (பாடப்படும் ஆண்மகனது ஒழுக்கம்)

**துறை :**

- இயன்மொழி வாழ்த்து (புரவலரின் தன்மையினைப் புகழ்ந்து சொல்லும் புறத்துறையே இயன்மொழி வாழ்த்து ஆகும். அவன் இவ்வாறு கொடுத்தான். அது போல மற்றவரும் கொடுத்தல் வேண்டும் என்று பிறர் அறியக் கூறுவதும் ஆகும்)

**கொடைமடம்படுதல் :**

- வேண்டப்படுவார், வேண்டப்படாதவர் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் கொடையளிப்பது.

**புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயம் :**

- பேகனது கொடைச்சிறப்பு.

**சொல்லும் விதம் :**

- விளைநிலத்தில் மட்டுமன்றிக் களர்நிலத்திலும் பொழியும் மழையை உவமையாக்கி அனைவருக்கும் கொடுக்கும் அவன் கொடைச்சிறப்பைக் கூறுதல்.
- கொடைமடம்படுதல் என்ற தொடர் மூலம் பழிப்பது போலப் புகழ்தல் (பொதுவாக மடம்படுதல் இகழ்ச்சிக்குரியது. ஆனால் கொடை விடயத்தில் அது புகழ்ச்சிக்குரியதாகிறது)

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| அறுகுளம் | - | நீர் அற்ற குளம் |
| உகுத்தல் | - | சொரிதல் |
| வரையா | - | வரையறுக்கப்படாத |
| கடாஅ யானை | - | மதம் பிடித்த யானை |
| கழற்கால் | - | வீரக்கழல் அணிந்தகால் |
| மயக்குதல் | - | கலத்தல் |

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பாடல் எழுதப்பெற்ற அட்டை.
- அரும்பதங்கள் எழுதப்பட்ட சொல்லட்டை

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- குறித்த செய்யுள் பகுதி இடம் பெற்ற சந்தர்ப்பத்தைக் கூறுவார்.
- அரும்பதங்களுக்கு விளக்கம் கூறுவார்.
- செய்யுளின் பொருளைத் தமது சொந்த மொழிநடையில் எழுதுவார்.
- செய்யுளில் கையாளப்பட்டுள்ள அணிகளை விளக்குவார்.
- புலவர் கூறவந்த விடயத்தை விளக்கிக் கூறுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 2.0 | : | செய்யுள் இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும், தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பர். |
| **தேர்ச்சி மட்டம்** | 2.3 | : | பாடப்பகுதியை (Text) அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளையும், எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பர். |
| **பாட உள்டக்கம்** | | : | மணிமேகலை - தெய்வம் வந்து தோன்றிய காதை (119 -141) |
| **பாடவேளை** | | : | 06 |

**கற்றற் பேறுகள்:**

- மணிமேகலை காவியத்தில் குறித்த செய்யுட் பகுதி அமையப்பெற்ற இடத்தினையும் கதைத்தொடர்பினையும் அறிந்து கூறுவார்.
- செய்யுட் பகுதியைப் பொருள் விளங்க, சந்தி பிரித்து வாசிப்பார்.
- செய்யுட் பகுதியில் உள்ள அரும்பதங்களுக்கான பொருளைக் கூறுவார்.
- செய்யுட் பகுதியில் இடம்பெறும் அணிகளையும், கையாண்டுள்ள உத்திகளையும் விளக்குவார்
- படைப்பாக்க நுட்பத்தை நயந்து விமர்சிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மணிமேகலைக் காப்பியத்தை அறிமுகம் செய்து, குறித்த செய்யுட் பகுதி இடம்பெறும் சந்தர்ப்பத்தையும் கதைத்தொடர்பையும் கலந்துரையாடுதல்.
- மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதையின் உள்ளடக்கத்தைத் தெளிவுபடுத்தல்.
- பாடலைக் காட்சிப்படுத்தி, சந்திபிரித்தும் கொண்டுகூட்டியும் வாசிக்க வழிப்படுத்துதல்.
- பாடலின் பொருளைச் சொந்த மொழிநடையில் எழுதச் செய்தல்.
- பாடலில் இடம்பெறும் அணிகள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- மாலைப்பொழுதினை விபரிக்க, புலவர் கையாண்ட உத்திகளை விளக்குதல்.
- பறவைகளினதும் விலங்குகளினதும் அன்போடு கூடிய செயற்பாடுகளைக் கூறி, அவற்றுக்கான காரணங்களை எழுத வழிப்படுத்துதல்.
- மாலை நேரமானதும் மக்களின் செயற்பாடு அமையும் விதம் பற்றி விளக்குதல்.
- இச்செய்யுளின் பின்னணி பற்றி அறிய உதவுதல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்:**

**(அ) மணிமேகலை காப்பியம் பற்றிய அறிமுகம்**

- காப்பிய ஆசிரியர்: மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச்சாத்தனார்.
- சிலப்பதிகாரத்தின் கதையோடு தொடர்புள்ள இக்காப்பியம் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் துறவு பற்றிக் கூறுகிறது.
- உதயகுமாரன் மணிமேகலையைக் காணப் பெருவிருப்புற்று ஈற்றில் ஏமாற்றமடைந்து, காமநோயினால் வருந்தி, உவவனத்திலிருந்து திரும்பிச் சென்ற சூழலில் மாலைப்

பொழுதானது வந்த காட்சியைக் காவிய ஆசிரியர் விபரிப்பதாக இச்செய்யுட் பகுதி அமைகின்றது.

**(ஆ) மாலைப்பொழுதைப் பெண்ணாக உருவகித்து வருணித்தல்**

‘‘அந்தி என்னும் பசலைமெய் யாட்டி
வந்திருத் தனளால் மாநகர் மருங்கென்’’

- மாலைப்பொழுதில் தம்துணையோடு கூடியிருக்கவேண்டும் என்ற காதல் வேட்கையோடுள்ள அன்னம், அன்றில் பறவைகளின் செயற்பாடுகளை எடுத்துக் காட்டுதல்.
- பசுக்கள் தம் கன்றுகளைக் காணவேண்டும் என்னும் தவிப்பில் பால் சொரிந்து செல்லும் காட்சியூடு மாலைப்பொழுதில் எழும் விலங்குகளின் பாச உணர்வைச் சிறப்பித்தல்.
- மக்களின் செயற்பாடுகளை முன்வைத்தல்.
  - அந்தணர் செந்தீ வளர்த்தல்.
  - பெண்கள் மனைகளில் விளக்கேற்றல்.
  - பாணர்கள் யாழில் மருதப் பண்ணினை எழுப்பல்.
  - கோவலர் வேய்ங்குழல் இசைத்தல்.

**(இ) உவமை அணியைப் பயன்படுத்தியிருத்தல்.**

கதிரவன் மேற்குத் திசையில் மறையும் காட்சியைப் போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தவனுக்கு உவமித்தல்.

‘‘அமரக மருங்கிற் கணவனை இழந்து
தமரகம் புகூஉம் ஒருமகள் போல்’’

**(ஈ) புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயம்**

புகார் நகரத்தின் மாலை நேரத்துத் தோற்றத்தையும் அங்கு நிகழும் இயற்கை, செயற்கை நிகழ்ச்சிகளையும் சொல்லும் விதம்.

- புகார் நகரத்தை அழகிய ஒரு பெண்ணாக உருவகித்தல்.
- மாலை வேளையில் கடற்கரையில் கிழக்குத் திசையிலே உதிக்கும் பூரண சந்திரனும் மேற்கிலே மறையும் சூரியனும் அந்தப் பெண்ணின் தோடுகள் என உருவகித்தல்.
- தாமரை கூம்புதல்(மாலையானதும் பறவைகள் உறைவிடங்களை அடைதல்)
- மேய்ந்துவிட்டு வீடு திரும்பும் பசுக்கள் தம் கன்றை நினைத்த அளவில் சொரிந்த பாலால் புழுதி அடங்குதல்.
- அந்தணர் அந்திக்காலத்தில் தீ வளர்த்தல்.
- பெண்கள் இல்லங்களில் விளக்கேற்றல்.
- இசைக்கலைஞர்கள் கருவிகளை மீட்டி இசை எழுப்புதல்.
- சூரியனாகிய தன் கணவனை இழந்த வருத்தத்தோடு அவன் காதலியான அந்தியானவள் பசலையடைந்த மேனியளாகி, புகார் நகரத்திலே வந்து தங்கினாள் எனல்.
- இயற்கை நிகழ்ச்சிகள் கற்பனை மெருகேற்றி வருணிக்கப்படுதல்.

**அரும்பதங்கள்**

குணதிசை - கிழக்குத்திசை
குடதிசை - மேற்குத்திசை
பூம்பொறி - பூவாகிய எந்திரம் / சிறை
தெங்கு - தென்னை
சேதா - சிவப்புப்பசு
தூள் - புழுதி

## தரவிருத்தி உள்ளீடுகள்

- கதைச்சுருக்கம்
- பாடல் அட்டை

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- மணிமேகலை காப்பியத்தில் குறித்த செய்யுட் பகுதி இடம்பெற்ற சந்தர்ப்பத்தைக் கூறுவார்.
- செய்யுளின் பொருளைச் சொந்த மொழி நடையில் எழுதுவார்.
- செய்யுளில் கையாளப்பட்டுள்ள அணிகளை இனங்கண்டு விளக்குவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **2.0** | : | செய்யுள் இலக்கியங்களைக் கற்று, அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழி நடையில் முன்வைப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | **2.3** | : | பாடப்பகுதியை (Text அவதானமாகக் கிரகித்து எழுத்தாக்க பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்து, கருத்துக்களை முன்வைப்பர். |
| **விடய உள்ளடக்கம்** | | : | காரணமாலை - திருமக்கமா நாட்டுச் சிறப்பு (பதினொரு பாடல்கள்) |
| **பாடவேளைகள்** | | : | 10 |

## கற்றற் பேறுகள்

- பாடல்களைச் சந்தி பிரித்து வாசிப்பார்.
- அரும்பதங்களை இனங்கண்டு பொருள் கூறுவார்.
- பாடல்களின் கருத்தைத் தமது மொழிநடையில் எழுதுவார்.
- மக்கத்தின் மகிமை பற்றிக் கூறும் பாடல்களின் கற்பனை வளம், அணிப்பிரயோகம், சொல்லாட்சி என்பவற்றை விபரிப்பார்.
- விடயங்களை வெளிப்படுத்த புலவர் கையாண்ட உத்திகளை விளக்குவார்.
- புலவர் கையாண்டுள்ள பாவகைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- காரணமாலை பற்றியும், அதை இயற்றியவர் பற்றியும் சுருக்கமாக விளக்குதல்.
- பாடல்களின் பொருளைச் சொந்த மொழிநடையில் எழுதச் செய்தல்.
- அணிப்பிரயோகத்தினை விளக்குவதற்கு வழிப்படுத்தல்.
- பாவகைகள் பற்றிய தகவல்களைத் தேடி அறிய வழிகாட்டுதல்.
- மக்கா பற்றிய தகவல்களைத் தொகுத்து வழங்குதல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

(அ) ஆசிரியர்

- சாமு நெய்னார் லெப்பை சேகுத்தம்பிப் புலவர்.
- இவர் யாழ்ப்பாணத்தவர், காலி மாநகரத்தில் வாழ்ந்தவர்.

(ஆ) நூல்

- முகம்மது நபிகளின் சீறா சரித்திரத்தை இசைத் தமிழில் பாடியுள்ளமை.
- மக்கமா நகரத்தின் சிறப்பை இசைத் தமிழில் பாடியுள்ளமை.

(இ) புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயம் :

1 திருமக்க மாநாட்டுச் சிறப்பு

- இயற்கை அழகு, வளம், செல்வச்செழிப்பு, சோலைகள், கனிகள், முத்துக்கள், மாணிக்கங்கள், மழை பொழிதல்.

2. திருமக்காவில் காணத்தக்க அழகுகள்

- உயர்ந்தெழுந்த கட்டிடங்கள்
- மன்னர் மாளிகைகள்,
- கடிமலை முரசு, கச்சி (ஹஜ்) முழக்கம்
- நாட்டின் இயற்கை அழகினை வர்ணித்தல்.
- பொதுவாக இலக்கியங்களில் இடம்பெறும் நாடு, நகர் வர்ணனைகளை ஒத்ததாக அமைந்திருத்தல்.

3. மக்காவின் சிறப்புக்கள்

- மக்கா நாடெங்கள் நாடே.
- பொன்னகர்.
- திருவளம் பொருந்திய மக்கா.
- இறைவன் அருள் பொங்கும் மக்கா.
- மழைவளம் பொருந்திய மக்கா.
- ஆதம் (அலை) அவர்களும், ஹவ்வா (அலை) அவர்களும் ஒன்று சேர்ந்த மக்கா.
- முஹம்மது நபி அவர்கள் பிறந்ததும், ஆள்கின்றதுமான மக்கா.
- மலக்குகள் தினமும் வந்து கூடும் மக்கா.
- முஸா நபியின் பொருட்டால் மழை பொழிந்த மக்கா.

**ஆன்மீகச் சிறப்புக்கள்**

- இறையருளின் பெருமை.
- அல்லாஹ்வின் உண்மைத்தூதர்.
- தீன் மார்க்க விசுவாசியான முஹம்மது நபிகளாரின் சிறப்புக்கள்.
- ஆதம் (அலை) ஹவ்வா (அலை) ஆகியோரின் சிறப்பு.
- தினமும் பாங்கு ஒலிக்கும் சிறப்பு

### தரவிருத்தி உள்ளீடுகள்

- காரணமாலை பாடல் அட்டை
- சொல்லட்டை - அரும்பதங்கள்.

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- காரணமாலை நூல் பற்றியும் அதன் ஆசிரியர் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிடுவார்.
- பாடல்களின் பொருளைத் தமது சொந்த மொழிநடையில் கூறுவார்.
- இப்பாடல்களில் உள்ள கவிச் சிறப்புக்களை விளக்குவார்.
- பாடல்களினூடாகக் கூறப்படும் விடயங்களைப் பகுத்தும் தொகுத்தும் கூறுவார்.

**தேர்ச்சி 4.0** : இலக்கியங்களைக் கற்பதனூடாகத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : ஆக்கங்களை வாசித்துப்பெற்ற அனுபவத்தின் ஊடாகச் சுய ஆக்கங்ளைப் படைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : **கவிதை** - கவிஞன் வித்துவான் க. வேந்தனார்

**பாடவேளைகள்** : 04

**கற்றற்பேறுகள்**

- கவிதையைச், சந்தி பிரித்தும் கொண்டு கூட்டியும் வாசிப்பார்.
- அருஞ்சொற்களுக்கான பொருளைக் கூறுவார்.
- பாடலின் பொருளைத் தமது சொந்த மொழிநடையில் எழுதுவார்.
- கவிஞர் இக்கவிதையூடாகக் கூறவந்த விடயத்தை விளக்குவார்.
- இக்கவிதையில் வெளிப்படும் படைப்பாக்கத்திறன், கவித்துவ உத்திகள் என்பனவற்றை விமர்சிப்பார்.
- நயந்த பகுதிகளை எடுத்து விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- வித்துவான் க. வேந்தனார் பற்றிய அறிமுகத்தை வழங்குதல்.
- கவிதையைச் சந்திபிரித்துப் பொருள் விளங்கி வாசிக்க வழிப்படுத்தல்.
- அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுவதற்குச் சந்தர்ப்பமளித்தல்.
- கவிதையின் பொருள் தொடர்பில் கலந்துரையாடல்.
- கவிதையின் பிரதான கருத்து, துணைக்கருத்துக்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- கவிதையிலுள்ள கவிச்சிறப்புக்கள் பற்றிக் கூறுவதற்கு வழிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள் (**Key Words**) எண்ணக்கருக்கள்:**

**அ. வித்துவான் க.வேந்தனார் பற்றிய அறிமுகம்:**

- யாழ்ப்பாணம் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
- இயற்பெயர் - கனகசபை நாகேந்திரம்பிள்ளை (1918 - 1966)
- 16 ஆவது வயதில் சோ. இளமுருகனாரின் (தனித்தமிழ் இயக்கப் பின்னணியில் அமைந்த) வழிகாட்டலால் தனது பெயரை க.வேந்தனார் என மாற்றிக் கொண்டார். வித்துவான் பரீட்சையில் சித்தியடைந்தமையால் வித்துவான் க.வேந்தனார் என்று அழைக்கப்பட்டார்.
- இவர் சிறந்த தமிழாசிரியர், தமிழறிஞர், தமிழ்ப் பற்றாளர், சொற்பொழிவாளர், கவிஞர்.
- இவரது கவிதைகளுட் புகழ்பெற்றது “காலைத்தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா” என்னும் சிறுவர் பாடலாகும்.

- இவர் எழுதிய நூல்கள்:

  கவிதைப் பூம்பொழில் (கவிதைகள்)

  இந்து சமயம் (பாடநூல்)

  திருநல்லூர் திருப்பள்ளி எழுச்சியும் குயிற்பத்தும்

  குழந்தைமொழி (சிறுவர் பாடல்கள்)

  தன்னேர் இலாத தமிழ் (கட்டுரைத்தொகுப்பு)

- **கவிஞர் கூற விழைந்த விடயம்**

  உண்மைக் கவிஞர்களின் பண்புகள்

  - இத்தகைய விடயங்களைப் பாடக் கூடாது என எதிர்மறையாகவும் இத்தகைய விடயங்களைப் பாட வேண்டும் என உடன்பாடாகவும் சொல்லப்படும் விதம்.

- கவிஞன் யார்? கவிதை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்னும் பிரதான கருத்தைக் கொண்டு இக்கவிதை எழுதப்பட்டுள்ளது.
  - அறிவுப்புரட்சியைக் கவிதை ஏற்படுத்த வேண்டும்.
  - உள்ளத்தின் ஒளியோடு பாடுபவன் கவிஞன்.
  - இறவாத கவிஞனையே உலகம் ஏற்கும்.

- எளிமையாகப் பொருள் விளங்கக் கூடியவாறு அமைந்திருப்பது சிறப்பம்சம்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- கவிதை பிரதி - கவிஞன்
- வித்துவான் க. வேந்தனாரின் நிழற்படப்பிரதி.
- வித்துவான் க. வேந்தனார் பற்றிய குறிப்புகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- வித்துவான் க.வேந்தனார் பற்றிச் சுருக்கமாகக் கூறுவார்.
- ‘‘கவிஞன’’ எனும் கவிதையைப் பதப்பிரிப்பு செய்து வாசிப்பார்.
- இக்கவிதையின் பொருளை தனது மொழிநடையில் எழுதுவார்
- இக்கவிதையில் கவிஞர் சொல்ல வந்த விடயம் பற்றிக் கருத்துக்களை முன்வைப்பார்.
- சிறந்த கவிதை/சிறந்த கவிஞன் கொண்டிருக்க வேண்டியப் பண்புகள் பற்றிக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி 4.0** : இலக்கியங்களைக் கற்பதனூடாகத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : பல்வேறு ஆக்கங்களை வாசித்துக் கிரகித்து,அவற்றில் இடம்பெறும் மொழிக்கூறுகளைப் பகுத்து, கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : கவிதை - எல்லாம் உமதே! - கவிஞர் அபூபக்கர்

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்**

- கவிதையினூடாகக் கவிஞர் வெளிப்படுத்த விழைந்த விடயத்தினை இனங்கண்டு கூறுவார்.
- புரட்சிக்கு வித்திடும் ஆசிரியரின் அணுகுமுறையை விளக்குவார்.
- புரட்சி ஏற்படக் காரணம் என்னவெனக் கூறுவார்.
- இக்கவிதை தொடர்பான விமர்சன ரீதியான கருத்துக்களை முன்வைப்பார்.
- கவிஞரின் கவித்துவ வெளிப்பாடு பற்றித் தமது கருத்துக்களை முன்வைத்து விமர்சிப்பார்.
- கவிதையில் காணப்படும் கற்பனைவளம், அணிப்பிரயோகம், உணர்ச்சி வெளிப்பாடு, சொல்லாட்சி என்பன பற்றிக் கருத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கவிதையில் கூறப்பட்டுள்ள விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- கவிதையை வாசித்துக்காட்டி மாணவர்களையும் வாசிக்கச் செய்தல்.
- கவிதையில் காணப்படும் சொல்லாட்சி, கவித்துவம், உணர்ச்சி வெளிப்பாடு பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- புரட்சி ஏற்படக் காரணங்கள் எவை என விளக்கிக் கூறுதல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்**

(அ) கவிஞர் அபூபக்கர் பற்றிய அறிமுகம்.

(ஆ) கவிஞர் வெளிப்படுத்த விழைந்த விடயம் :

- உழைக்கும் மக்களிடையே, அவ்வுழைப்பினைச் சுரண்டிச் சுகிப்பவர்களுக்கு எதிராக ஒன்றுபட்டுப் போராடும் உணர்வினைத் தூண்டுவது.
- செல்வந்தர்களின் வாழ்க்கைக்குத் தொழிலாளரின் உழைப்பே காரணம் எனக் கூறுதல்.
- ஆக்கத்திற்குப் பயன்படுத்திய கைகளை (வலிமையை), முதலாளிகளின் அழிவுக்காகப் பயன்படுத்த வேண்டுமெனத் தூண்டுதல்.

(இ) சொல்லும் விதம் :

- உழைப்பாளிகள் படும் துன்பத்தினை விவரிப்பதன் மூலம் அவர்கள் மேல் இரக்கமும் உழைப்பை உறிஞ்சி அனுபவிக்கும் செல்வந்தர்கள் பற்றி இழிவாக விவரிப்பதன் மூலம் அவர்கள் மேல் வெறுப்பும் ஏற்படச் செய்தல்.
- சுரண்டுபவர்களுக்கு எதிராக ஒன்று பட்டுப் போராட வேண்டும் என்ற உணர்வை உழைப்பாளிகளிடம் நேராகவே வலியுறுத்தல்.
- எளிமையான சொற்பிரயோகம்.
- உணர்ச்சி வெளிப்பாடு.
- அணிகளைப் பயன்படுத்துதல்.
  - உருவக அணி
  - சோடையுற்ற சொறிநாயாய்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- கவிஞர் அபூபக்கரின் வாழ்க்கைக் குறிப்புகள்.
- கவிஞர் அபூபக்கரின் நிழற்படப்பிரதி.
- கவிதைப்பிரதி - எல்லாம் உமதே

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்**

- சமூகத்தில் புரட்சி ஏற்பட ஏதுவாக இருந்த காரணங்களை விளக்கி எழுதுவார்.
- கவிஞர் உணர்த்த விழையும் கருத்துக்களை முன்வைப்பார்.
- எல்லாம் உமதே! என்ற கவிதைத் தலைப்பின் பொருத்தப்பாடு பற்றி விளக்கி எழுதுவார்.
- கவிதையினூடாக வெளிப்படுத்தப்படும் விடயத்தை இனங்கண்டு கூறுவார்.
- தலைப்பிற்கும் கவிதைக்கும் இடையிலான பொருத்தப்பாடு பற்றி விளக்குவார்.
- கவிதை தொடர்பாக விமர்சித்து, கருத்துக்களை முன்வைப்பார்.
- கவிதையில் கையாளப்பட்டுள்ள அணிகள், உத்திகள் பற்றி விளக்கி எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **4.0** | : | இலக்கியங்களைக் கற்பதனூடாகத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | **4.1** | : | பல்வேறு ஆக்கங்களை வாசித்துக் கிரகித்து, அவற்றில் இடம்பெறும் மொழிக் கூறுகளைப் பகுத்து, கருத்துக்களை முன்வைப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | | : | கவிதை: வீசாதீர்<br>மஹாகவி து. உருத்திரமூர்த்தி |
| **பாடவேளைகள்** | | : | 04 |

**கற்றற் பேறுகள்**

- கவிதையினூடாகக் கவிஞர் வெளிப்படுத்த விழையும் விடயங்களை இனங்கண்டு கூறுவார்.
- கருத்தை வெளிப்படுத்தக் கவிஞர் கையாண்ட உத்திகளை வெளிப்படுத்துவார்.
- கவிதையிற் காணப்படும் கற்பனை வளம், அணிப்பிரயோகம், உணர்ச்சி வெளிப்பாடு முதலியவற்றை விவரிப்பார்.
- கவிஞரின் சொல்லாட்சி, அதன் பொருத்தப்பாடு பற்றிக் கருத்துரைப்பார்.
- கவிதையில் புலப்படுத்தப்படும் மனிதநேய / விழுமியக் கருத்துக்களைக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கவிதையின் ஆசிரியர் பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்து கலந்துரையாடுதல்.
- கவிதையை மாணவர் வாசிக்க வழிப்படுத்தல்.
- கவிதை வெளிப்படுத்த விழைந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடல்.
- கவிதையின் பொருளைத் தலைப்புடன் தொடர்புபடுத்தி விளக்குவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- கவிதையிலுள்ள சிறப்புகள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- இடம்பெற்றுள்ள அணியை விளங்க வழிப்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) **எண்ணக்கருக்கள்:**

**(அ) பாடல் ஆசிரியர் பற்றிய அறிமுகம்**

- பாடல் ஆசிரியர்: ‘மஹாகவி’ து. உருத்திரமூர்த்தி (1927 - 1971)
- அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது இயற்பெயர் து. உருத்திரமூர்த்தி
- ஈழத்து நவீன தமிழ்க்கவிதை முன்னோடிகளுள் ஒருவர்.
- ஆயிரத்துத் தொழாயிரத்து ஐம்பதுகளிற் தமிழ்க் கவிதை உலகிற்கு வந்தவர்.

- **ஆக்கங்கள்**:

1. கவிதைத் தொகுப்பு : வள்ளி, வீடும் வெளியும்
2. குறும்பா : குறும்பா 100
3. பா நாடகம் : கோடை, புதியதொரு வீடு
4. காவியங்கள் : கல்லழகி, சடங்கு, கந்தப்ப சபதம்
5. வில்லுப்பாட்டு : கண்மணியாள் காதை

‘வீசாதீர்’ என்ற இக்கவிதை 1958இல் வெளிவந்தது

**(ஆ) கவிஞர் வெளிப்படுத்த விழைந்த விடயம்**

- வீதியோரத்தில் விழுந்துகிடக்கும் பிச்சைக்காரனின் அவலநிலை கண்டு நெஞ்சில் நெகிழ்வேதும் இன்றிச் செருக்கோடு சில்லறையை வீசிவிட்டுச் செல்வது அவனை அவமதிப்பது, மட்டுமன்றி அவனது அமைதியைக் கெடுப்பதுமாகும். மேலும் பொருளின் மதிப்பை உணராது அதை அவமதிப்பதுமாகும்.

**(இ) சொல்லும் விதம்**

- வாசகரைக் கவிதையின்பால் ஈர்க்கத்தக்க கேலியும் கிண்டலுமான விளிப்பு.
  - ஏதோ அவதியிலே ஏகுகிறீர்,
    ஏனப்பா
    நீர்தாம் உலகு நிலைமாறிப்
    பாதாளத்
    தாழ விழாமல் அதன் வாழ்வைக் காப்பவரோ?

- வினாக்களைக் கேட்டுச் சிந்திக்க வைத்தல்.
  - துன்புறுத்தி வீங்கும் பசியால் விழுந்தானோ?

- வேறுபடுத்தி மனக்கண்முன் காட்சியைக் கொண்டுவரும் கட்புலச் சித்திரிப்பு.
  - ஆள் சுருளும்
    வெய்யிலிலே
    நீர்போகும் வீதிநடைப் பாதையிலே
    உய்யும் வகை தெரியாதவொரு மனிதன்
    கை இல்லான்,
    தூங்குகிறான் போலக் கிடக்கின்றான்.

**(ஈ) சொல்லாட்சி**

- பேச்சோசைப் பண்பு மிகுந்திருத்தல்
  பாத்திரப் பேச்சின் பின்னால் மரபுவழி யாப்பு ஒன்று அமைந்திருத்தல்
  - கொத்தவரும் காகத்தைப் பாரும்
    குறை உயிரோ,
    செத்த உடலோ - தெளிவில்லை
- அணிப்பிரயோகம் இடம்பெறல்.
- எளிமையான சொற்கள் கட்டிறுக்கமாகப் பயன்படுத்தப்படல்.
- உணர்ச்சி வெளிப்பாடு.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- ‘வீசாதீர்’ பிரதி.
- ‘மஹாகவி’ பற்றிய குறிப்புகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்**

- பாடுபொருளை பாடல்த் தலைப்பு வலியுறுத்தும் விதத்தை விளக்கி எழுதுவார்.
- கவிஞர் கையாண்டுள்ள உத்திகளை எடுத்துக்காட்டுகள் ஊடாக முன்வைப்பார்.
- கவிதையில் காணும் நயத்தை எடுத்துரைப்பார்.
- கவிதையின் பாடுபொருளை அனுபவத்துடன் இணைத்து விவரிப்பார்.

**தேர்ச்சி 3.0** : உரைநடை இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தம் கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன் வைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** : பாடப்பகுதியை அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறை களையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : இலங்கையாற்றுப்படை

**பாடவேளை** : 06

### கற்றற் பேறுகள்

- இராமாயணத்திற் கூறப்படும் இலங்கை, இவ்வாறானதெனக் கவிஞர் முன்வைக்கும் ஆதாரங்களை அறிந்து கூறுவார்.
- இராமாயணத்திற் கூறப்படும் இராவணனின் தலைநகருக்கும் இலங்கைக்கும் இடையேயான தொடர்புகளை விளக்குவார்.
- ஆசிரியர் தனது கருத்தை வலியுறுத்த முன்வைக்கும் ஆதாரங்களைப் பட்டியற்படுத்துவார்.
- தனது கருத்துக்களை முன்வைக்க (கட்டுரையாசிரியர்) பயன்படுத்தும் உத்திகள் பற்றிக் கலந்துரையாடுவார்.
- ஆசிரியரின் மொழிநடைச் சிறப்புப் பற்றி விளக்குவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- கட்டுரையாசிரியர் பற்றிக் கலந்துரையாடுதல்.
- இராமாயணக் கதையைச் சுருக்கமாகக் கூறுவதற்கு வழிப்படுத்தல்.
- ஆசிரியர் தனது கருத்துக்களுக்கு ஆதாரமாகக் கூறும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- விமர்சன ரீதியாகத் தமது கருத்துக்களை முன்வைக்க வழிகாட்டுதல்.

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

#### கட்டுரை ஆசிரியர்

சு. நடேசபிள்ளை (1895 - 1965). தஞ்சாவூரிற் பிறந்தவர். இயற்பெயர் **நாகநாதன்.** சேர். பொன். இராமநாதனின் மருமகன். பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியர், அதிபர், அரசாங்க சபையில் பிரதிநிதி, பாராளுமன்ற உறுப்பினர், தபால் தந்தி வானொலித்துறை மந்திரி ஆகிய பதவிகளையும் வகித்தவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தினால் இவருக்கு இலக்கிய கலாநிதி என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டது. கதிர்காமநாதன் திருப்பள்ளியெழுச்சி, சகுந்தலை வெண்பா என்பவற்றை இயற்றினார். ஆங்கிலப் பாடல்கள் பலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தவர். இவரின் கட்டுரைகள் ஞாயிறு, கல்கி ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன.

#### ஆசிரியர் கூறவிழைந்த விடயம்

- இராமாயணத்தில் கூறப்படும் இலங்கை இந்த இலங்கைத் தீவு ஆகும்.

**தனது கருத்துக்களை நிறுவப் பயன்படுத்தும் உத்திகள்**

- மேனாட்டறிஞர்களின் கருத்துக்களை மேற்கோள்காட்டுதல்.
- வடமொழி, தமிழ் இலக்கியங்கள் கூறும் கருத்துக்களோடு இணைத்துக்காட்டுதல்.
- சாசனங்கள் கூறும் செய்திகளைத் தருதல்.
- கர்ண பரம்பரைக் கதைகளை ஆதாரம் காட்டுதல்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- குறித்த உரைநடைப் பகுதி பற்றிய குறிப்புகள்.
- இலங்கையின் வரலாறு தொடர்பான வேறு கட்டுரைகள்
- எழுதுதாள், எழுதுகருவி.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- கட்டுரையின் மையக்கருத்து, துணைக்கருத்து என்பவற்றை இனங்கண்டு எழுதுவார்.
- தனது கருத்துக்களை எவ்வாறு ஆசிரியர் முன்வைக்கிறார் என விளக்குவார்.
- கட்டுரையின் மொழிநடைச் சிறப்புக்களை விளக்குவார்.
- கட்டுரையில் கையாளப்பட்ட உத்திகளை விளக்குவார்.
- கட்டுரை பற்றிய தனது கருத்துக்களை விமர்சன ரீதியாக முன்வைப்பார்.

**தேர்ச்சி 3.0 :** உரைநடை இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** இலக்கியங்கள் தோன்றிய பின்னணியை அறிந்து கூறுவார்.

**விடய உள்ளடக்கம் :** சிறுகதை - கூத்து

**பாடவேளை :** 05

**கற்றற் பேறுகள்:**

- ‘‘கூத்து’’ சிறுகதையை வாசித்து, கிரகித்துப் பெற்ற அனுபவங்களைக் கூறுவார்.
- சிறுகதையானது எழுதப்பட்ட பின்புலத்தின் வாழ்வியற் கூறுகளைப் பிரதிபலிக்கும் தன்மையை இனங்கண்டு விளக்குவார்.
- கதை கூறப்படும் பாங்கு, பாத்திரப்படைப்பு என்பவற்றினை விளக்கி எழுதுவார்.
- கதாசிரியர் கையாண்டுள்ள மொழிநடை, தலைப்பின் பொருத்தப்பாடு பற்றியும் விமர்சித்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- கதாசிரியர் ‘‘நவம்’’ தொடர்பான அறிமுகத்தை மாணவர்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாகக் கலந்துரையாடலை ஒழுங்குப்படுத்துதல்.
- ‘‘கூத்து’’ என்ற கலை வடிவம் தொடர்பிலும் ‘அர்ஜுனன் தபசு’, ‘சுபத்திரை கல்யாணம்’ என்பவற்றை மையப்படுத்திய மகாபாரதக் கதை தொடர்பிலும் கலந்துரையாடலின் மூலம் எளிமையான அறிமுகத்தை வழங்குதல்.
- சிறுகதையினை மாணவர்கள் வாசித்துக் கிரகிக்கச் சந்தர்ப்பமளித்தல்.
- சிறுகதையினை வாசித்ததனூடாக மாணவர்கள் விளங்கிக் கொண்டவற்றையும் பெற்ற அனுபவங்களையும் கூற வழிப்படுத்துதல்.
- எழுந்தமானமாக விடைகளை முன்வைக்கச்செய்து விடைகள் தொடர்பில் கலந்துரையாடுதல்.
- செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்கி மாணவர்கள் தனித்தனியாக/குழுவாகச் செயற்பட்டு விடைகளை எழுத நெறிப்படுத்துதல்.
- கதையின் மையக்கருத்து, துணைக்கருத்துக்கள், கதையின் வெளிப்பாட்டு முறை, பாத்திரப் படைப்பு, மொழிப்பிரயோகம், தலைப்பின் பொருத்தப்பாடு என்பன தொடர்பில் கலந்துரையாடுதல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்:**

இக்கதை மூலம் கதாசிரியர் கூறவிழைந்த விடயம்

விரோதங்களை வளர்த்துக் கொள்வதும் உணர்ச்சி வசப்படுவதும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

கதையிற் பயன்படுத்தப்பட்ட உத்திகள்

1) கதையின் மையக்கருத்தைத் தானே வெளிப்படையாகக் கூறிக் கதையைத் தொடங்குதல். இது வ.வே.சு ஐயர் சிறுகதையை ஆரம்பிக்கும் முறையை நினைவுபடுத்துகிறது.

2) தான் அழுத்தம் கொடுக்க விரும்பும் விடயத்தை, ஒற்றை மேற்கோட்குறியில் இடுதல்.
   - அதற்கு வேறு ஒரு ''காரணமும் இருந்தது''
   - சற்று நேரத்துக்கு முன்னர் தான் சங்கீதத்தை அவன் செவிகளில் பெய்து விட்டு......

3) இலக்கியவழக்கு, பேச்சு வழக்கு ஆகிய இருவகைச் சொற்களையும் தேவைக்கேற்பப் பயன்படுத்துதல்.
   - இந்த நியதிக்குச் சரவணமுத்துவே இதோ ''சாலுங் கரியாய்'' இருக்கிறார் - இலக்கியவழக்கு
   - ''அந்தப்புரத்தில் தான் இவ்வளவு நாளாக வாய்ச்சேட்டையோடு அந்த வழிகள் விட்டிரிச்சி''

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- சிறுகதை பற்றிய சுருக்கக் குறிப்புக்கள்
- சிறுகதை ஆசிரியர் பற்றிய குறிப்புகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்**

- சிறுகதை தொடர்பான தமது கருத்துக்களை முன்வைப்பார்.
- சிறுகதைக்கும் தலைப்புக்குமான பொருத்தப்பாட்டை விளக்குவார்.
- பாத்திரங்களின் குணாம்சங்களை விளக்குவார்.
- கதாசிரியர் கையாண்ட மொழிநடை பற்றி விமர்சிப்பார்.
- சிறுகதையில் நயந்த பகுதியைக் குறிப்பிட்டு அதற்கான காரணத்தையும் விளக்குவார்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 3.0** | : | உரைநடை இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார். |
| **தேர்ச்சி மட்டம் 3.3** | : | பாடப்பகுதியை (Text) அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்துக் கருத்துக்களை முன்வைப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | சிறுகதை - நெருக்கடி - ந. பிச்சமூர்த்தி |
| **பாடவேளைகள்** | : | 06 |

**கற்றற் பேறுகள்:**

- சிறுகதையினூடாக வெளிப்படுத்தப்படும் கருப்பொருள் பற்றி விபரித்துக் கூறுவார்.
- சிறுகதையின் வெளிப்பாட்டு முறையினை விளக்கி எழுதுவார்.
- சிறுகதையில் கையாளப்பட்டுள்ள மொழிநடை பற்றிக் கருத்துரைப்பார்.
- சிறுகதையில் நயந்த பகுதிகள் பற்றி விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சிறுகதையினை வாசிப்பதற்கு வழிப்படுத்தல்.
- சிறுகதையினூடாக வெளிப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடச் செய்தல்.
- சிறுகதையின் வெளிப்பாட்டுமுறை பற்றி வினவி விடை கூறச் செய்தல்.
- சிறுகதையில் இடம்பெறும் பாத்திரங்களின் குணப்பண்புகளை விமர்சிக்க வழிப்படுத்தல்.
- சிறுகதையில் கையாளப்பட்டுள்ள மொழிநடை பற்றிய கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளித்தல்.
- சிறுகதையில் இடம்பெறும் நயக்கத்தக்க பகுதிகளை விளக்குவதற்கு வழிப்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

**பிச்சமூர்த்தி (1900 - 1976) பற்றிய அறிமுகம்**

கும்பகோணம் நடேசையர் - காமாட்சியம்மாள் தம்பதியின் புத்திரரான பிச்சமூர்த்தியின் இயற்பெயர் வேங்கடமகாலிங்கம். அவர் சென்னை சட்டக்கல்லூரியிற் பயின்று 1938 வரை வழக்கறிஞராகவும் பின் 1935 - 1956 காலப்பகுதியில் இந்துமத அறநிலையப் பாதுகாப்புத்துறை அதிகாரியாகவும் கடமையாற்றினார். ஆரம்பத்தில் பத்திரிகைகளில் ஆங்கிலத்தில் எழுதியவர் 1925 இல் பாரதியின் எழுத்துக்களுடனான அறிமுகம் கிட்டியது முதல் தமிழில் எழுதத் தொடங்கினார். தமிழில் புதுக்கவிதைத்துறையில் முன்னோடியாகக் கருதப்படும் பிச்சமூர்த்தி சிறுகதைத்துறையிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். 1932இல் கலைமகளில் வெளிவந்த ‘ஸயன்ஸுக்குப் பலி’ என்ற

சிறுகதையே அவரது முதலாவது சிறுகதை என்று கருதப்படுகிறது. ‘மணிக்கொடி’ சஞ்சிகையிலேயே அவரது கவிதைகளும் சிறுகதைகளும் பெரிதும் வெளிவந்துள்ளன. நாடகம், கட்டுரை முதலானவற்றையும் எழுதியுள்ளார். ‘பதினெட்டாம் பெருக்கு’ (1979) முதலாக அவரது சிறுகதைகளைக் கொண்ட பல தொகுதிகள் வெளிவந்துள்ளன.

### அரும்பதங்கள் / பிறமொழிச்சொற்கள்

| | | |
|---|---|---|
| படி | - | ஓர் அளவு, எட்டு ஆழாக்குக் கொண்ட ஓர் அளவு |
| வீசம் | - | பதினாறில் ஒரு பகுதியைக் குறிக்கும் பின்ன அளவு |
| ஸ்தலம் | - | இடம் (இக்கதையில் தோட்டம்) |
| சர்க்கார் | - | அரசாங்கம் |
| சீக்கு | - | நோய் |
| முடை | - | கஷ்டம், நெருக்கடி |
| அநாமதேயம் | - | இன்னார் அல்லது இன்னது என்பதை அறியமுடியாத நிலை |
| மோசம் | - | வஞ்சம் |
| தாட்சண்யம் | - | பரிவு, இரக்கம் |
| லோலக் | - | தொங்கட்டான் |
| தரித்திரம் | - | கொடிய வறுமை |
| அசட்டுத்தனம் | - | முட்டாள் தனம் |
| அப்பீல் | - | மேன்முறையீடு |
| பிரமித்தார் | - | வியப்புற்றார், திகைப்படைந்தார் |
| ரௌத்திரம் | - | கடுமையான கோபம் |
| அந்தரங்கம் | - | பிரத்தியேகமானது, பிறரின் தலையீட்டிற்கு உரியதல்லாதது. |
| குமாஸ்தா | - | எழுதுவினைஞர் |
| இலாகா | - | அமைச்சகம், அலுவலகத்தில் ஒரு பிரிவு, திணைக்களம், திறை |
| பைசல் | - | வழக்கு அல்லது பிரச்சினைகளுக்குக் காணும் தீர்வு |
| அநுபோகம் | - | ஒருவர் தன் வசத்திலுள்ள உடமையை அனுபவிக்கும் உரிமை |
| பிசகு | - | பிழை / தவறு |
| நோட்டீஸ் | - | அறிவித்தல், விளக்கம் கோரும் கடிதம் |
| செப்பிடுவித்தை | - | மாவித்தை, தந்திரம், சூழ்ச்சியான செயல் |

### வெளிப்படுத்த விழைந்த விடயம்

- நெருக்கடிக்கு உள்ளாகிய ஒருவரது நிலையும் அதிலிருந்து அவரை வெளிக்கொண்டு வருவதற்காக அனுதாபத்துடன் செயற்படும் பாத்திரங்களின் துலங்கலும்.

### வெளிப்பாட்டு முறை

- கதாபாத்திரங்களின் உரையாடல்களினூடாகக் கதை நகர்த்திச் செல்லப்படுகிறது.
- இயற்கைக் காட்சிகளோடு தொடர்புபடுத்தி நிலைமைகள் சித்திரிக்கப்படுகின்றன.
  உ - ம்: அவரைக் கொடியொன்று கொழுகொம்பின் துணையுடன் மேலே படர்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

- பிச்சமூர்த்தி பற்றிய கட்டுரைகள்

## தரவிருத்தி உள்ளீடுகள்

- எழுது கருவிகள், எழுது தாள்கள்
- பிச்சமூர்த்தி பற்றிய கட்டுரைகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- சிறுகதையில் புலப்படும் விடயங்களை விபரித்துக் கூறுவார்.
- சிறுகதையில் கையாண்டுள்ள உத்தியை விளக்குவார்.
- கதையில் இடம்பெறும் பாத்திரங்களின் குணப்பண்புகளை விளங்கி எழுதுவார்.

**தேர்ச்சி 5.0** : தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**தேர்ச்சிமட்டம் 5.1** : காலப்பகுப்பின் பின்னணியையும் அக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அவற்றின் பண்புகளையும் அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தமிழ் இலக்கிய வரலாறு - தற்காலம்

**பாடவேளைகள்** : 4

**கற்றற் பேறுகள்** :

- இருபதாம் நூற்றாண்டின் அரசியல், பொருளாதார சூழ்நிலையை அறிந்து கூறுவார்.
- இருபதாம் நூற்றாண்டில் தமிழில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் தோன்றியமை பற்றிக் கூறுவார்.
- நவீனகவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம், திறனாய்வு என்பவற்றின் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றி விளக்குவார்.
- இக்கால இலக்கியங்கள் சமூகப்பிரக்ஞை கொண்டவையாக அமைந்திருப்பதை விளக்குவார். (விடுதலை, சமூகமாற்றக்கருத்துக்கள், பகுத்தறிவுச்சிந்தனை, பொதுவுடைமைக்கொள்கை)
- தமிழிலக்கியமும் தமிழாய்வும் விரிவுற்றவாற்றை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஐரோப்பியர் கால இறுதிப்பகுதி பற்றிக் கலந்துரையாடி இருபதாம் நூற்றாண்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குதல்.
- இக்காலத்தில் எழுந்த இலக்கியங்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் பட்டியலிட்டுக் காட்சிப்படுத்தல்.
- இக்காலத்து இலக்கியப் பண்புகள் பற்றிக் கலந்துரையாடி விடை கூறச் செய்தல்.
- செய்யுளிலக்கியங்கள், உரைநடை இலக்கியங்கள் என வகுத்துப் பாடத்தைத் திட்டமிட்டு விளக்க வழிகாட்டல்.
- உரைநடை இலக்கியங்களுள் நாவல், சிறுகதை என்பவற்றைப் பட்டியல் படுத்திக் காட்சிப்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்**

- இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இற்றை வரையுள்ள காலப்பகுதி ‘‘தற்காலம்’’ என அழைக்கப்படுகிறது.
- காலப்பின்னணி
  - ஆங்கிலக்கல்வி விருத்தி
  - ஜனநாயகக் கல்வி வாய்ப்பு
  - ஐரோப்பிய நாகரிகத் தொடர்பு
  - சுய மொழிக் கல்வி
  - அச்சியந்திரங்களின் வளர்ச்சி

- இலக்கிய வகைகள்
  - கவிதை
  - கட்டுரை
  - திறனாய்வு
  - நாடகம்
  - நாவல்
  - சிறுகதை

- இருபதாம் நூற்றாண்டின் இலக்கியப் பண்புகள்.
- இலக்கிய கர்த்தாக்கள்.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- தமிழிலக்கிய வரலாறு நூல்.

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.
- இக்காலத்தில் தமிழிலக்கியம் நவீனத்துவம் அடைந்தமை பற்றிக் கருத்துரைப்பார்.
- இருபதாம் நூற்றாண்டில் நவீனகவிதை, புனைகதை இலக்கியம், என்பன வளர்ச்சியடைந்தமை பற்றி விளக்குவார்.
- இக்கால இலக்கிய வளர்ச்சிக்குப் பத்திரிகைகள், சஞ்சிகைகளின் பங்களிப்பினைப் பற்றிக் கலந்துரையாடுவார்.
- இக்கால இலக்கியங்களின் பாடுபொருளாக சமுதாயம் /சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் அமைந்தமை பற்றி விளக்குவார்.

**தேர்ச்சி 5.0** : தமிழ் இலக்கி வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**தேர்ச்சிமட்டம் 5.1** : காலப்பகுப்பின் பின்னணியையும் அவ்வக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தமிழ் இலக்கிய வரலாறு : தற்காலம் - சிறுகதை

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்:**

- இருபதாம் நூற்றாண்டின் அரசியல், பொருளாதாரப் பின்புலத்தை அறிந்து கூறுவார்.
- தமிழ்ச் சிறுகதைகளின் தோற்றத்திற்கான பின்னணியை அறிந்து கூறுவார்.
- ஆரம்பகாலச் சிறுகதை ஆசிரியர்களையும் அவர்களது படைப்புக்களையும் விளக்கி எழுதுவார்.
- குறிப்பிடத்தக்க சிறுகதைப் படைப்பாளிகளின் இலக்கியப் பங்களிப்பை விமர்சித்துக் கூறுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- ஐரோப்பியர் வருகையால் தமிழில் அறிமுகமான நவீன இலக்கிய வடிவங்கள் பற்றிக் கலந்துரையாடி எழுத வழிகாட்டல்.
- தமிழ்ச் சிறுகதைகளில் தோற்றத்திற்கான பின்னணிபற்றி அறிமுகம் செய்து வழிப்படுத்தல்.
- சிறுகதைகளின் உருவம், உள்ளடக்கம் என்பவற்றிலேற்பட்ட வளர்ச்சி பற்றி விளக்குதல்.
- தனித்துவமான படைப்பாளிகளின் பங்களிப்புக்களை விளக்குதல்.

**முதன்மைப் பதங்கள் (Key words) எண்ணக்கருக்கள்:**

காலவரையறை : இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இற்றை வரையான காலப்பகுதி தற்காலம் என அழைக்கப்படுகிறது.

காலப்பின்னணி : ஆங்கிலக் கல்வி விருத்தி, ஜனநாயகக் கல்வி வாய்ப்பு, ஐரோப்பிய நாகரிகத் தொடர்பு, சுயமொழிக் கல்வி, அச்சியந்திர வளர்ச்சி.

தமிழ்ச் சிறுகதையின் தோற்றத்துக்கான காரணிகள்

- சமூக மாற்றங்கள் - நிலமானிய சமூகச் சிதைவு - புதிய மத்தியதர வர்க்கத்தின் எழுச்சி.
- ஆங்கிலக் கல்வி மூலம் ஆங்கிலச் சிறுகதைகளைக் கற்றவர்கள் தாமும் அவ்விலக்கிய வடிவத்தை எழுதியமை.
- 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே கதைவாசிப்பது தொடர்பான ஆர்வத்தை, பரமார்த்தகுருகதை, கதாமஞ்சரி, விநோதரச மஞ்சரி, பஞ்சதந்திரக்கதைகள் என்பன ஏற்படுத்தியிருந்தமை.

- அச்சியந்திரப் பாவனை வளர்ச்சியடைந்தமை.

- பத்திரிகை, சஞ்சிகைகள், சிறுகதைகள் வெளிவரத் தொடங்கியமை.

ஆரம்ப காலச் சிறுகதைகள்

வ.வே.சு.ஐயர், பாரதியார், அ.மாதவையர் இவர்களுள் ஓரளவிற்கேனும் உருவ அமைதியுடன் எழுதியவர் வ.வே.சு.ஐயர். அரசமரம், மங்கையர்க்கரசியின் காதல், லைலாமஜ்னு முதலிய எட்டுக்கதைகள் மங்கையர்க்கரசியின் காதல் என்னும் தொகுப்பாக வெளிவந்துள்ளது.

### பொதுப் பண்புகள்

- காதல் வீரம் தொடர்பான கதைகள்.
- பிரசாரத்தன்மை மேலோங்கியிருத்தல் - அறப்போதனை.
- காவியத்தன்மை வாய்ந்த வர்ணனைகளும் மொழிநடையும்.
- உருவ அமைதி பெரிதும் பேணப்படவில்லை.

### 1930 - 1950 வரையான காலப்பகுதியில் வெளிவந்த சிறுகதைகள்

1930களில் சிறுகதைகள் உருவம், உள்ளடக்கம் என்பன பற்றிய பிரக்ஞை அதிகரித்தது.

மணிக்கொடி சஞ்சிகை சிறுகதை வளர்ச்சிக்கெனவே வெளிவந்தது.

புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், ந.பிச்சமூர்த்தி, பி.எஸ்.ராமையா, ந.சிதம்பர சுப்பிரமணியம், மௌனி போன்றோர் மணிக்கொடி எழுத்தாளர்களிற் குறிப்பிடத்தக்கவர்கள்.

### பொதுப்பண்புகள்

- சமகாலப் பிரச்சினைகள் அதிகளவில் கதைப்பொருள்களாகக் கொள்ளப்பட்டன.

  முன்னைய இலக்கியவாதிகளால் பார்க்கப்பட்ட விடயங்கள் மட்டுமன்றிப் பார்க்கப்படாத விடயங்களும் கதைப் பொருள்களாகின்றன.

- கதையிற் பயன்படுத்திய உரைநடையிற் பல்வேறு வகையான மாற்றங்கள்.

- சிறுகதையின் உருவத்தில் பல்வேறு வகையான மாற்றங்கள் இடம் பெற்றமை.

  உ - ம்: புதுமைப்பித்தன் சிறுகதைகள்.

- மனிதனுக்கு வெளியேயுள்ள பிரச்சினைகள் மட்டுமன்றி மனிதமனத்தினுள் எழுகின்ற போராட்டங்களும் நுட்பமாகச் சித்தரிக்கப்படுதல்.

- பல்வேறு பிரதேசங்களுக்குமுரிய பேச்சு வழக்குகள் தனித்தன்மையுடன் சித்திரிக்கப்படுதல்.

**ஐம்பதுகளின் பின்னரான சிறுகதைகள்**

ஜெயகாந்தன், லா.ச.ராமாமிர்தம், ஜானகிராமன், கி.ராஜநாராயணன், ஜெயமோகன் முதலியோர் முக்கியமான சிறுகதை எழுத்தாளர்களாகக் கொள்ளப்படுகின்றனர்.

- தேசிய உணர்வுச் சிறுகதைகள் :
  சி. சு. செல்லப்பாவின் படைப்புக்கள்.

- சமூக, பொருளாதார மாற்றங்களை வெளிப்படுத்தும் சிறுகதைகள்:
  ஜெயகாந்தனின் படைப்புக்கள்.

- வட்டாரச் சிறுகதைகள் :
  சி. ராஜநாராயணனின் படைப்புக்கள்.

- முற்போக்குச் சிறுகதைகள் :
  தமிழ்ச் செல்வனின் படைப்புக்கள்.

- பின்நவீனத்துவச் சிறுகதைகள் :
  பிரேம் - ரமேஷ் படைப்புக்கள்
  கோணங்கியின் படைப்புக்கள்

- பெண்ணியச் சிறுகதைகள் :
  அம்மையின் படைப்புக்கள்

- தலித்தியச் சிறுகதைகள் :
  இமையத்தின் படைப்புக்கள்

- விஞ்ஞானப் புனைவுகள் :
  சுஜாதாவின் படைப்புக்கள்.

**பொதுப் பண்புகள்**

- புதுவகையான நடை
- புதுமையான / புரட்சியான நோக்கு
- புதுப் புது உத்திகள்.
- யதார்த்தப் பண்புடையவை.
- வாழும் மனிதர்களைக் கதைமாந்தர்களாகக் கொண்டவை.
- பேச்சு வழக்குச் சொற்களைக் கையாண்டு உயிரோட்டமான நடையில் அமைபவை.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- செயற்பாட்டுப் பத்திரம்.
- இருபதாம் நூற்றாண்டு இலக்கியவரலாற்று நூல்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்.**

- ஆரம்பகாலச் சிறுகதைகளின் பொதுப்பண்புகளை விளக்கிக் கூறுவார்.
- 1930களில் தமிழ் சிறுகதையில் ஏற்பட்ட புதிய வளர்ச்சிநிலைகள் பற்றி விளக்குவார்.
- புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் ஆகிய எழுத்தாளர்களின் சிறுகதைப் பங்களிப்புக்கள் பற்றி எழுதுவார்.

**தேர்ச்சி** 5.0 : தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பர்.

**தேர்ச்சிமட்டம்** 5.1 : காலப்பகுப்பின் பின்னணியையும் அவ்வக் காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அவற்றின் பண்புகளையும் அறிந்து கருத்துக்களை முன்வைப்பர்.

**விடய உள்ளடக்கம்** : தமிழ் இலக்கிய வரலாறு : தற்காலம் - நாவல்

**பாடவேளைகள்** : 04

## கற்றற் பேறுகள்

- தமிழ் நாவல் இலக்கியத்தின் தோற்றத்துக்கான பின்னணியை அறிந்து கூறுவார்.
- தமிழ் நாவல் இலக்கியம் காலந்தோறும் அடைந்துவந்த மாற்றங்களை விளக்குவார்.
- குறிப்பிடத்தக்க நாவலாசிரியர்கள் தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை விமர்சிப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய வரலாறு, தொடர்பாகக் கலந்துரையாடி வினாக்கள் கேட்டல்.
- நாவல் இலக்கியத்தின் பண்புகள் பற்றிக் கண்டறியச் செய்தல்.
- ஆரம்பகால நாவலாசிரியர்களின் படைப்புக்கள் அவற்றின் பண்புகள் குறித்துக் கலந்துரையாடி, எழுத வழிகாட்டல்.
- காலந்தோறும் இடம்பெற்ற நாவல் வளர்ச்சி பற்றி விளங்குவதற்கு வழிப்படுத்தல்.
- நாவல் வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் படைப்புகளை விளக்கி கூறச் செய்தல்.

## முதன்மைப் பதங்கள் (Key Words) எண்ணக்கருக்கள்

**நாவல் எழுதப்படுவதற்கான பின்னணிகள்**

- ஆங்கில நாவல்களைக் கற்றதனால் ஏற்பட்ட ஆர்வம்
- புதிதாக உருவாகிய மத்திய தர வர்க்கத்தினரின் பிரச்சினைகளைச் சித்திரிக்க, பொருத்தமான வடிவமாகக் காணப்பட்டமை.
- பத்திரிகைகள், சஞ்சிகைகளின் பரவலாக்கம்.

**ஆரம்ப கால நாவல்கள்**

- வேதநாயகம்பிள்ளை - பிரதாபமுதலியார் சரித்திரம் (1879 - முதலாவது நாவல்)

  சுகுணசுந்தரி (1887)
- ராஜம் ஐயர் - கமலாம்பாள் சரித்திரம் (1896)
- மாதவையா - பத்மாவதி சரித்திரம் (1898) பிரேம கலாவத்யம் (1893)
- சித்திலெவ்வை மரிக்கார் - அசன்பே சரித்திரம் (1885)

**ஆரம்பகால நாவல்களின் பண்புகள்.**

- காவியமரபின் தொடர்ச்சி
- விரிவான பாத்திர வர்ணனை
- செந்தமிழ் நடை
- நீதிநூற்பாடலடிகளை உள்ளடக்கிய அறப் போதனை

**இடைக்கால நாவல்கள் (1910 - 1950 வரை)**

- வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார்
- ஆரணி குப்புசாமி முதலியார்
- ஜே. ஆர். ரங்கராஜீ - ராஜாம்பாள்
- எஸ். ஜி. கோதை நாயகி அம்மையார்.

பெரும்பாலும் துப்பறியும் கதைகள், மர்மச் சம்பவங்களைக் கொண்டவை மொழி பெயர்ப்புத் தழுவல் நாவல்கள்

கா. சி. வேங்கடரமணி - முருகன் ஓர் உழவன், கந்தன் ஒரு தேசபக்தன் என்பன இப்போக்குக்கு விதிவிலக்கானவை.

தமிழ் நாவல்களுக்குப் புத்துயிரும் புத்தூக்கமும் தந்தவர் கல்கியே. வரலாற்று நாவல்களுக்கும் வழியமைத்துத் தந்தவரும் அவரே.

கல்கியின் வரலாற்று நாவல்கள் - பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம்.

கல்கியின் சமூக நாவல்கள் - கள்வனின் காதலி, அலையோசை, தியாக பூமி.

**1950 க்குப் பின்னரான நாவல்கள்**

- தேசிய உணர்வு நாவல்கள் :

  கல்கியின் அலையோசை

  இந்திரா பார்த்தசாரதியின் சுதந்திரபூமி, தந்திர பூமி.

- சமூக, பொருளாதார மாற்றங்களை வெளிப்படுத்தும் நாவல்கள்:

  ராஜம் கிருஷ்ணனின் அமுதமாகிவருக.

  சுந்தர ராமசாமியின் ஒரு புளிய மரத்தின் கதை.

- வட்டார நாவல்கள் :

  சங்கரராமின் மண்ணாசை (1940)

  ஆர். ஷண்முகசுந்தரத்தின் நாகம்மாள்

- வரலாற்று நாவல்கள் :

  அகிலனின் கயல்விழி

  மணிவண்ணனின் பல்லவம்

  சாண்டில்யனின் யவனராணி

- முற்போக்கு நாவல்கள் :

  சிதம்பர ரகுநாதனின் பஞ்சும் பசியும் (1947)

  ஜெயகாந்தனின் உன்னைப் போல் ஒருவன்

- நவீனத்துவ நாவல்கள் :

  சுந்தரராமசாமியின் ஜே. ஜே. சிலகுறிப்புகள்

- உளவியல் நாவல்கள் :

  கோவி மணிசேகரனின் தென்னங்கீற்று

- பின்நவீனத்துவ நாவல்கள் :

  தமிழவனின் 'ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்'

- பெண்ணிய நாவல்கள் :

  நாகம் கிருஷ்ணனின் வீடு

- தலித்திய நாவல்கள் :

  இமையத்தின் கோவேறு கழுதை

- விஞ்ஞானப் புனைவுகள் :

  சுஜாதாவின் என் பெயர் இந்திரா

### தரவிருத்தி உள்ளீடு

- ஆரம்ப கால, தற்கால நாவல்கள்.
- நாவல்கள், நாவலாசிரியர்களின் அட்டவணை

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்.

- நாவல்கள் தோன்றுவதற்கான காரணிகளை விளக்குவார்.
- 1940 களுக்கு முந்திய நாவல்களின் பண்புகளை வேறுபடுத்துவார்.
- பிற்பட்ட காலத்தில் எழுந்த நாவல்களின் பண்புகளை விமர்சிப்பார்.
- நாவல்களின் உள்ளடக்கத்தில் ஏற்பட்ட மாற்றம், வளர்ச்சி என்பன பற்றி விளக்கிக் கூறுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 5.0 | : | தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பர். |
| **தேர்ச்சிமட்டம்** | 5.1 | : | காலப் போக்கினையும் அவ்வக் காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அவற்றின் பண்புகளையும் சுருக்கமாக அறிந்து கருத்துக்களை முன்வைப்பர். |
| **விடய உள்ளடக்கம்** | | : | தமிழ் இலக்கிய வரலாறு : தற்காலம் - கவிதை |
| **பாடவேளை** | | : | 04 |

**கற்றற் பேறுகள்:**

- தற்காலத் தமிழ் கவிதையின் வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.
- நவீன கவிதை மரபின் வளர்ச்சிப் போக்கினைக் கூறுவார்.
- தற்காலக் கவிதைகளின் வேறுபட்ட வடிவம், உள்ளடக்கம் பற்றி விளக்குவார்.
- தற்காலக் கவிதையின் புதிய போக்குகள், முக்கிய ஆளுமைகள் பற்றி விளக்குவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- ஐரோப்பியர்கால இறுதிப்பகுதி, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் அரசியல், பொருளாதார, சமய, சமூக நிலைபற்றிக் கலந்துரையாடுதல்.
- தமிழ்க்கவிதை வரலாற்றில் பாரதியாரால் ஏற்படுத்தப்பெற்ற மாற்றங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- பாரதியாரின் பின்னர் முக்கியமான கவிதை ஆளுமைகள், அவர்களின் கவிதைகள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- அண்மைக் காலங்களில் தமிழ்க் கவிதையானது, உருவம் மற்றும் உள்ளடக்கங்களில் அடைந்து வரும் மாற்றங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல்.

## முதன்மைப் பதங்கள் (Key Words) எண்ணக்கருக்கள்

- இருபதாம் நூற்றாண்டு தொடக்கம் இன்றுவரையான காலம் தற்காலம் எனப்படுகிறது.

**தற்கால இலக்கியங்கள் புதுவழியிற் சென்றமைக்கான காரணங்கள்**

- ஆங்கிலக் கல்வியின் வருகையால் ஆங்கில இலக்கியங்களைக் கற்றவர்கள் அவற்றிலுள்ள முன்னேற்றகரமான அம்சங்களைத் தமது கவிதையிலும் பிரதிபலித்தமை.
- பல்வேறு நவீன கொள்கைகளின் செல்வாக்கைத் தமிழ்க் கவிஞர்களும் உள்வாங்கியமை.
- பொதுமக்கட்சார்பு இலக்கியம் பற்றிய விழிப்புணர்வு.
- பத்திரிகை, சஞ்சிகைகள் பிரசுரமாகுதல்.
- பாரதியார் தமிழ்க்கவிதையின் திருப்பு முனையாகவும் நவீன கவிதையின் முன்னோடியாகவும் திகழ்பவர். கவிதையின் பொருள், வடிவம் என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தியவர்.

பொருள்: பொதுமக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல். தேசவிடுதலை, பெண்விடுதலை, சாதி எதிர்ப்பு மூடக்கொள்கைகளுக்கு எதிர்ப்பு, மொழிஉணர்ச்சி.

வடிவம்: எளிய பதங்கள் எளியநடை, எளிய சந்தம் பொதுமக்களைக் கவரும் மெட்டு என்பவற்றைக் கையாண்டமை, கண்ணி, சிந்து, கும்மி தெம்மாங்கு முதலிய நாட்டுப்புற மக்களின் பாவடிவங்களை ஏட்டிலக்கியத்துட் கொண்டு வந்தமை, எளிய வசன நடையில் இலக்கியங்கள் படைக்கப்பெற்றமை.

பள்ளி எழுச்சி, நான்மணிமாலை முதலிய மரபுவழி இலக்கிய வடிவங்களை நவீன நோக்கில் பயன்படுத்தியமை.

பாரதிதாசன், திராவிட நாட்டு விடுதலைக்காகப் பாடினார்.பெண்ணடிமைத்தனம், சாதி எதிர்ப்பு, சமய எதிரப்பு விதவை விவாகம், தமிழ்ப்பற்று, இந்தி எதிர்ப்பு என்பன பாடுபொருள்களாயின.

பாரதி வழியில் நாமக்கல் ராமலிங்கம்பிள்ளை, வாணிதாஸன், சுரதா, அழ வள்ளியப்பா, தேசிக விநாயகம்பிள்ளை முதலியோர் தொடர்கின்றனர்.

அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மனின் புல்லின் இதழ்கள் கவிதைத் தொகுப்புடன் ஆங்கிலப் புதுக்கவிதை முயற்சி ஆரம்பிக்கிறது.

இம்முயற்சி ஆங்கில வழியாகத் தமிழிலும் அறிமுகமாகின்றது.

மணிக்கொடி சஞ்சிகை புதுக்கவிதையின் தோற்றத்திற்கு வித்திட்ட எழுத்து, வானம்பாடி ஆகிய சஞ்சிகைகள் அதன் வளர்ச்சிக்கு உதவின. ந.பிச்சமூர்த்தி, ப.ராஜகோபாலன், புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன், க.நா.சுப்பிரமணியம் முதலியோர் ஆரம்பகாலப் புதுக்கவிதையாளர்களாகக் காணப்படுகின்றனர்.

தொடர்ந்து கவிதையின் வடிவத்தில் வளர்ச்சி காணப்பட்ட படிமம், ஹைகூ கவிதைகளைக் குறிப்பிடலாம்.

படிமங்களைப் பயன்படுத்தி வெற்றி கண்டவர் - நா. பிச்சமூர்த்தி

ஹைகூ - அப்துல் ரகுமான்.

## 1950 க்குப் பின்னரான தமிழ்க் கவிதை:

- தனிமனித உணர்ச்சி வெளிப்பாடு :

  சுந்தரராமசாமியின் கவிதைகள்

- படிமம் / குறியீட்டுப்பாங்கு :

  பிரமின்

  அப்துல் ரகுமான்

- சமூக, அரசியல் மாற்றங்கள் :

  மு. மேத்தா

- முற்போக்குப் பார்வை :

  மீரா

  சிற்பி பாலசுப்பிரமணியம்

  இன்குலாப்

- தலித்தியம் :

  பழமலை

- பெண்ணியம் :

  சுகிர்தராணி

  மாலதி மைத்ரி

- திரைப்படப் பாடல்கள் :

  பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்

  கண்ணதாசன் பாடல்கள்

  வாலியின் பாடல்கள்

- கைக்கூ கவிதைகள் :

  அமுத பாரதியின் புதுக்கவிதைகள்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- கவிதை - நூல்கள்
- கவிஞர்கள் அட்டவணை

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்.

- தமிழ்க்கவிதை வரலாற்றில் பாரதியின் முக்கியத்துவத்தை விளக்குவார்
- புதுக்கவிதை வளர்ச்சியில் வானம்பாடி சஞ்சிகையின் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- புதுக்கவிதையின் வடிவம், உள்ளடக்கம் பற்றிக் கருத்துரைப்பார்.
- கவிதையின் வடிவத்தில் ஏற்பட்ட மாற்றம், வளர்ச்சி என்பன பற்றித் தெளிவுறுத்துவர்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 7.0 | : | மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | 7.4 | : | வாக்கிய வகைகளையும் அவற்றின் அமைப்பையும் அறிந்து அவற்றைப் பொருத்தமாகப் பிரயோகிப்பர். |
| **விடய உள்ளடக்கம்** | | : | தொடரியல் - தொகைநிலை, தொகாநிலை |
| **பாடவேளை** | | : | 06 |

**கற்றற் பேறுகள்**

- தொடர் என்றால் என்ன என்பதை அறிந்து கூறுவார்.
- தொடர்களின் பயன்பாடு பற்றி விளக்குவார்.
- தொடர்களின் வகைகளை வேறுபடுத்தி உதாரணம் எழுதுவார்.
- தொடர்களைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- சொற்றொடரின் இயல்பையும் வகைகளையும் விளங்குவதற்கு வழிப்படுத்தல்.
  தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள் பற்றிக் கலந்துரையாடி உதாரணங் கூறச் செய்தல்.
- தொகைநிலை, தொகாநிலைத் தொடர்களை வேறுபடுத்தச் சந்தர்ப்பம் அளித்து எழுது வித்தல்.

## தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள்

சொற்கள் பொருள் தரக்கூடிய வகையில் தொடரும்போது அவற்றினிடையே அமைந்து வரவேண்டிய வேற்றுமை உருபு முதலான உறுப்புகள் மறைந்து (தொக்கு) வெளிப்பட்டு (தொகாது) வருவதும் உண்டு. இந்த அடிப்படையில் சொற்றொடரை மரபிலக்கணகாரர் தொகை நிலைத்தொடர், தொகா நிலைத்தொடர் என இரண்டாகப் பகுத்து நோக்குவர்.

**தொகைநிலைத்தொடர்**

தொகைநிலைத் தொடர் என்பது சொற்களுக்கிடையே உருபுகள் முதலியன தொக்கு நிற்க ஒரு மொழித்தன்மைப்பட தொடர்ந்து வருதலாகும்.

## தொகை நிலைத் தொடர் ஆறு வகைப்படும்.

- வேற்றுமைத்தொகை
- வினைத்தொகை
- பண்புத்தொகை
- உவமைத்தொகை
- உம்மைத்தொகை
- அன்மொழித்தொகை

**வேற்றுமைத்தொகை**

இரண்டு முதல் ஏழு வரையுள்ள வேற்றுமைகளின் உருபுகள் மறைந்து வரும் தொடர், வேற்றுமைத் தொகை எனப்படும்.

1) வயலுழுதான் (ஐ) - இரண்டாம் வேற்றுமைத்தொகை
2) மரப்பெட்டி (ஆல்) - மூன்றாம் வேற்றுமைத்தொகை
3) கூலிவேலை (கு) - நான்காம் வேற்றுமைத்தொகை
4) ஊர்நீங்கினான் (இன்) - ஐந்தாம் வேற்றுமைத்தொகை
5) தம் வீடு (அது) - ஆறாம் வேற்றுமைத்தொகை
6) குகைக்கோயில் (கண்) - ஏழாம் வேற்றுமைத்தொகை

**வினைத்தொகை**

பெயரெச்சத்தின் விகுதியும் காலங்காட்டும் இடைநிலையும் தொக்கு நிற்க, அதன் முதனிலையாகிய வினையடியுடன் பெயர்ச் சொல் தொடர்வது வினைத்தொகையாகும்.

(உ+ம்) விடிகாலை உந்துவிசை
நடுகல் நிறைகுடம்
செய்ம்மதி

**பண்புத் தொகை**

பண்பை உணர்த்தி ஆன, ஆகிய உருபுகள் மறைந்து நின்று, ஒரு சொல் நீர்மைப்படும் தொகை நிலைத் தொடர் பண்புத் தொகையாகும்.

(உ+ம்) செந்தாமரை - வண்ணம் நாற் குணம் - அளவு
வட்டக்கல் - வடிவம் இன்சொல் - சுவை

குறிப்பு:- பொதுப்பெயரோடு சிறப்புப் பெயரோ சிறப்புப் பெயரோடு பொதுப்பெயரோ இணைந்து இடையில் ஆகிய எனும் பண்புருபு மறைந்து வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகும்.

தாமரைப்பூ - பொதுப்பெயர் - பூ
- சிறப்புப் பெயர்- தாமரை
கதலிவாழை - பொதுப்பெயர் - வாழை
- சிறப்புப்பெயர் - கதலி

**உவமைத் தொகை**

போல, ஒப்ப, அன்ன, புரைய முதலிய உவமை உருபுகள் இடையிலே தொக்கு நிற்க உவமானச் சொல்லும் உவமேயச் சொல்லும் தொடர்வது ஆகும். இவ் உவமை வினை, பயன், வண்ணம், வடிவம் என்பன பற்றி வரும்.

மழைக்கை - பயன் கயல்விழி - தோற்றம் (வடிவம்)
புலிச்சோழன் - வினை பவளவாய் - வண்ணம்

**உம்மைத் தொகை**

எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவுகளாற் பொருட்களை அளக்குமிடத்துத் தொடரும் அவ்வளவைப் பெயர்களுள் இடையிலும் இறுதியிலும் ‘உம்’ என்பது மறைந்து நிற்பது உம்மைத்தொகையாகும்.

(உ+ம்) சுகதுக்கம் - சுகமும் துக்கமும் கபிலபரணர் - கபிலரும் பரணரும்

**அன்மொழித் தொகை**

முந்தைய ஐந்து தொகை நிலைத் தொடர்களில் யாதேனும் ஒன்று, தான் குறிக்கும் பொருளை விடுத்து வாக்கிய நிலையில் தன்னோடு தொடர்புடைய பிறிதொன்றைச் சுட்டுமாயின் அது அன்மொழித் தொகை எனப்படும்.

**உதாரணம் :** பூங்குழல் வந்தாள்.

பூவையுடைய குழலை உடையவள் வந்தாள் என விரியும்.

பூங்குழல் - பூவையுடைய குழல் என வரும் போது வேற்றுமைத் தொகை.

ஆகவே பூங்குழல் வந்தாள் என்பது வேற்றுமைத் தொகையிடத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

கருங்கூந்தல் பாடினாள்

பண்புத் தொகையிடத்துப் பிறந்த அன்மொழித் தொகை

கயல்விழி ஆடினாள்

உவமை தொகையிடத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

**தொகா நிலைத் தொடர்**

தொகாநிலைத் தொடர் என்பது சொற்களுக்கிடையில் உருபுகள் முதலியன தொகாமலும் ஒரு மொழித்தன்மைப்படாமலும் சொற்கள் தொடர்ந்து வருதலாகும்.

இது ஒன்பது வகைப்படும்.

1. எழுவாய்த் தொடர்
   உ + ம் - கண்ணன் வந்தான்
2. விளித்தொடர்
   உ + ம் - கண்ணா வா
3. வேற்றுமைத் தொடர்
   உ + ம் - கண்ணனைக் கண்டேன்
4. வினைமுற்றுத் தொடர்
   உ + ம் - படித்தான் கண்ணன்
5. பெயரெச்சத் தொடர்
   உ + ம் - படித்த கண்ணன்
6. வினையெச்சத் தொடர்
   உ + ம் - வந்து படித்தான்
7. இடைச்சொற்றொடர்
   உ + ம் - மற்றொன்று
8. உரிச் சொற்றொடர்
   உ + ம் - கடியரண்
9. அடுக்குத் தொடர்
   உ + ம் - பெரிய பெரிய

## தரவிருத்திஉள்ளீடுகள்

- தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள் - எழுதிய டிமைன் தாள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்.

- தொகை, நிலை தொகா நிலைத் தொடர்களை வேறுபடுத்திக் கூறுவார்.
- தொடர்களைப் பொருத்தமுற வாக்கியங்களில் எழுதுவார்.
- தொகைநிலைத் தொடர்களின் வகைகளை அறிந்து வெளிப்படுத்துவார்.
- தொகாநிலைத் தொடர்களின் வகைகளை இனம் கண்டு வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி** 7.0 : மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வர்.

**தேர்ச்சி மட்டம்** 7.4 : வாக்கிய வகைகளையும் அவற்றின் அமைப்பையும் அறிந்து, அவற்றைப் பொருத்தமுறப் பிரயோகிப்பர்.

**விடய உள்ளடக்கம்** : வாக்கியம். (வாக்கிய வகைகள்)

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்**

- வாக்கியம் பற்றியும்,வாக்கியவகைகள் பற்றியும் விளக்கிக் கூறுவார்.
- அமைப்பு அடிப்படையில் வாக்கியங்களை வகைப்படுத்தி உதாரணம் தந்து விளக்குவார்.
- தனிவாக்கியங்களை இணைத்துக் கூட்டுவாக்கியமாக/கலப்பு வாக்கியமாக எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- பல்வேறு வகைப்பட்ட வாக்கியங்களைக் காட்சிப்படுத்தி,அவற்றிற்கிடையிலான வேறுபாடு தொடர்பாக வினாக்கள் கேட்டு பதில் கூறச் செய்தல்.
- தனிவாக்கியம்,கூட்டுவாக்கியம்,கலப்பு வாக்கியம் என்பவற்றை உதாரணத்துடன் விளங்கிக் கொள்ள வழிகாட்டல்.
- வாக்கியங்களை வழங்கி,அவை எவ்வகை வாக்கியங்கள் என்று எழுத வழிப்படுத்தல்.
- தனிவாக்கியங்களைக் கூட்டுவாக்கியங்களாகவும்,கூட்டுவாக்கியங்களைத் தனிவாக்கியங்களாகவும் மாற்ற வழிப்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்**

**வாக்கியங்கள்:**

- சொற்கள் பொருள்படத் தொடர்ந்து வந்து கருத்து முற்றுப்பெற்று அமைவது வாக்கியம் ஆகும்.

- **தனிவாக்கியங்கள்:**

  ஒரு வாக்கியத் தொடரை மட்டும் கொண்டு அமைவது தனி வாக்கியமாகும். இது ஓர் எழுவாயையும் ஒரு பயனிலையையும் கொண்டிருக்கும்.

  உ-ம் ஔவையார் சிறந்த புலவர்.
  பாடசாலை மாணவர்கள் நீண்ட தூரம் நடந்தனர்.

- **கூட்டுவாக்கியம்:**

  இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சமநிலைத் தொடர்களின் இணைப்பே கூட்டு வாக்கியம் எனப்படும்.

  உ-ம்: நான் தமிழ் இலக்கணம் படித்தேன்.

எனது நண்பி தமிழ் இலக்கணம் படித்தாள்.

நானும்,எனது தம்பியும் தமிழ் இலக்கியம் படித்தோம்.

- **கலப்பு வாக்கியம்**

  ஒரு தலைமைத்தொடரோடு சார்புவாக்கியத் தொடர் ஒன்றோ,பலவோ இணைந்து வருவதே கலப்பு வாக்கியமாகும்.

  உ-ம் :

  கவிச்சக்கரவர்த்தி கம்பர் உத்தரகாண்டத்தைப் பாடினார் என்பதை, ஆய்வாளர் சிலர் மறுப்பர்.

  இந்த உதாரணத்தை நோக்கினால், இது தனி வாக்கியங்கள் இரண்டினால் உருவாகியுள்ளமையை அவதானிக்கலாம்.

  கவிச்சக்கரவர்த்தி கம்பர் உத்தரகாண்டத்தைப் பாடினார்.

  ஆய்வாளர் சிலர் மறுப்பர்.

  என்னும் இரண்டு தனிவாக்கியங்கள் இங்கு இணைந்துள்ளன.

  இவை இரண்டும் சமநிலை வாக்கியங்கள் அல்ல. இவற்றுள் ஆய்வாளர் சிலர் மறுப்பர் என்பது முதன்மை பெறுவதாக அதாவது தலைமைத் தொடராக உள்ளது. கவிச்சக்கரவர்த்தி உத்தரகாண்டத்தைப் பாடினார் என்பது சார்புத் தொடராக உள்ளது.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- வாக்கிய அட்டை
- வாக்கிய வகைகள் எழுதப்பட்ட டிமைன்தாள்
- செயற்பாட்டுப்பத்திரம்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- வாக்கியம் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றது என்பதை அறிந்து கூறுவார்.
- தனிவாக்கியம், கூட்டுவாக்கியம், கலப்பு வாக்கியம் என்பவற்றின் அமைப்பை விளங்கி வேறுபடுத்துவார்.
- பாடப்பகுதிகளிலிருந்து, வாக்கிய வகை ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான உதாரணங்களை எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 7.0 | : | மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வர். |
| **தேர்ச்சி மட்டம்** | 7.4 | : | வாக்கிய வகைகளையும் அவற்றின் அமைப்பையும் அறிந்து, அவற்றைப் பொருத்தமுறப் பிரயோகிப்பர். |
| **விடய உள்ளடக்கம்** | | : | வாக்கியம். - இணைப்பிடைச் சொற்கள் |
| **பாடவேளைகள்** | | : | 03 |

**கற்றற் பேறுகள்**

- இணைப்பிடைச் சொற்கள் பெறும் முக்கியத்துவத்தை அறிந்து கூறுவார்.
- இணைப்பிடைச் சொற்களை வகைப்படுத்துவார்.
- இணைப்பிடைச் சொற்களின் பயன்பாட்டினைக் கூறுவார்.
- வாக்கியங்களில் இணைப்பிடைச் சொற்களைப் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.

## பாடத்தைத்திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- இணைப்பிடைச் சொற்கள் எவை என்பது பற்றிக் கலந்துரையாடி கூறச் செய்தல்.
- வாக்கியங்களுக்குப் பொருத்தமாக, இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்துமாறு வழிகாட்டல்.
- இணைப்பிடைச் சொற்களைப் பொருத்தமாகப் பயன்படுத்தி,தனிவாக்கியங்களைக் கூட்டுவாக்கியங்களாக மாற்றி எழுதவழிப்படுத்தல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- **வாக்கிய இணைப்பிடைச் சொற்கள்**

  தனிவாக்கியங்கள் இணைக்கப்பட்டுக் கூட்டுவாக்கியம் உருவாக்கப்படுகின்றது. இச்செயற்பாட்டின்போது, தனிவாக்கியங்களை இணைக்கப்பயன்படும் சொற்களே, வாக்கிய இணைப்பிடைச்சொற்கள் எனப்படுகின்றன.

அ) உம் பயனிலைத்தொடர் ஒன்றாக அமையும் போது, வேறுபடும் எழுவாய்த் தொடர்கள் உம் இடைச்சொல்லால் இணைக்கப்படுகின்றன.

உ-ம் : ஔவையார் ஆத்திசூடி எழுதினார்
பாரதியார் ஆத்திசூடி எழுதினார்.
ஔவையாரும் பாரதியாரும் ஆத்திசூடி எழுதினர்.

- செயப்படுபொருளாய் அமையும், வேற்றுமையேற்ற பெயர்த்தொடர் இணைக்கப்படுகின்றன.

  உ-ம் : கமலா திருக்குறள் படித்தாள்.

  கமலா நாலடியார் படித்தாள்.

  கமலா திருக்குறளையும் நாலடியாரையும் படித்தாள்.

- வினையடைத்தொடர்கள்

  உ-ம் : அம்மா சுவையாகச் சமைத்தார்.

  அம்மா வாசனையாகச் சமைத்தார்.

  அம்மா சுவையாகவும் வாசனையாகவும் சமைத்தார்.

- எச்சத் தொடர்கள் ( ) செய்ய

  உ-ம் : எனக்குப் பாட விருப்பம்.

  எனக்கு நடிக்க விருப்பம்.

  எனக்குப் பாடவும் நடிக்கவும் விருப்பம்.

- எச்சத் தொடர்கள் ( ) செய்து

  உ-ம் : தம்பி துடைத்துச் சென்றான்.

  தம்பி கழுவிச் சென்றான்.

  தம்பி துடைத்தும் கழுவியும் சென்றான்.

ஆ) பல தெரிவுகள் உள்ள நிலையில் ஒன்றைத் தேர்வதாக வாக்கியம் இணைக்கப்படும்போது, அல்லது, இடைச்சொல் பயன்படுத்தப்படுகின்றது.

உ-ம் : கலைவிழாவில் கவின்யா திரையிசைப் பாடல் பாடுவாள்.

கலைவிழாவில் கவின்யா நாட்டார் பாடல் பாடுவாள்.

கலைவிழாவில் கவின்யா திரையிசைப் பாடலை அல்லது நாட்டார் பாடலைப் பாடுவாள்.

'அல்லது' என்ற இடைச்சொல்லுக்குப் பதிலாக, 'இல்லையென்றால்', 'இல்லாவிட்டால்' என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன்

இ) ஆ (மாற்றுவினா இணைப்பு)

வினா வாக்கியங்களை இணைத்து,மாற்றுவினா வாக்கியங்களை உருவாக்க ஆ எனும் இடைச்சொல் பயன்படுகின்றன.

உ-ம் : நீ இப்போது சாப்பிடுகின்றாயா?

நீ இப்போது சாப்பிடவில்லையா?

நீ இப்போது சாப்பிடுகின்றாயா,இல்லையா?

ஈ) ஆனால்

முதல் வாக்கியத்தின் கருத்துக்கு முரணான கருத்துடைய வாக்கியத்தை இணைக்க, ஆனால் இடைச்சொல் பயன்படுகின்றது.

உ- ம் : நான் நாளைக்கு வருவேன்.

நான் உன்னைப் பார்க்கமாட்டேன்.

நான் நாளைக்கு வருவேன் ஆனால் உன்னைப் பார்க்கமாட்டேன்.

உ)	ஆகவே

ஒரு வாக்கியத்தின் கருத்தோடு தொடர்புடைய,அதன் விளைவு எனத்தக்க, கருத்துடைய வாக்கியத்தை இணைக்க ‘ஆகவே’ இடைச்சொல் பயன்படுகின்றது.

குமரன் நன்றாகப் பயிற்சி செய்கின்றான்.
குமரன் பதக்கம் வெல்லுவான்.
குமரன் நன்றாகப் பயிற்சி செய்கின்றான்.ஆகவே பதக்கம் வெல்லுவான்.

ஆகவே எனும் இடைச்சொல்லுக்குப் பதிலாக,எனவே, ஆதலால், ஆகையால் என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இணைப்பிடைச் சொற்கள் உள்ள வாக்கியங்கள் எழுதப்பட்ட அட்டை.
- செயற்பாட்டுப்பத்திரம்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்**

- இணைப்பிடைச் சொற்களை வகைப்படுத்திக் கூறுவார்.
- இணைப்பிடைச்சொற்களைப் பொருத்தமாக வாக்கியங்களில் இணைத்து எழுதுவார்.
- தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியமாகவும், தொடர் வாக்கியங்களைத் தனிவாக்கியங்களாகவும் மாற்றி எழுதுவார்.

**தேர்ச்சி** 7.0 : மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வர்.

**தேர்ச்சி மட்டம்** 7.4 : வாக்கிய வகைகளையும் அவற்றின் அமைப்பையும் அறிந்து, அவற்றைப் பொருத்தமுறப் பிரயோகிப்பர்.

**விடய உள்ளடக்கம்** : வாக்கியம். - வழு, வழாநிலை, வழுவமைதி

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள்:**

- வழு என்பதன் பொருளை அறிந்து கூறுவார்.
- வாக்கியங்களில் இடம்பெறும் வழுக்களை இனங்காட்டுவார்.
- வழாநிலை, வழுவமைதி என்பன பற்றி விளங்கி எழுதுவார்.
- வாக்கியங்களை வழுவின்றி எழுதுவதன் அவசியத்தை உணர்ந்து எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- வாக்கியங்களில் இடம்பெற்றுள்ள வழுக்கள் தொடர்பாகக் கலந்துரையாடி வழிப்படுத்தல்.
- வாக்கியங்களில் வழுக்களைத் தவிர்ப்பதன் அவசியம் பற்றி வினாக்கள் கேட்டல்.
- வழுவகைகள், வழுவமைதிகள், வழாநிலைகள் என்பனவற்றிற்கு உதாரணங்கள் எழுத வழிப்படுத்தல்.
- வாக்கியங்களில் வழுவமைதி காணப்படுவதை இனங்கண்டு விளங்கிக்கூற வழிப்படுத்தல்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

- வாக்கியங்களின் அடிப்படை உறுப்புக்களான எழுவாய், பயனிலை என்பவற்றுக்கிடையே திணை, பால், எண், இடம் என்பவற்றில் முரண்பாடற்ற இயைபு காணப்படுவது வாக்கிய இயைபு எனப்படும். வாக்கிய இயைபு மீறப்படும் போது வழு ஏற்படுகின்றது.

<u>வழுவகைகள்</u>

- **திணைவழு** - எழுவாய் ஒரு திணையிலும் பயனிலை இன்னொரு திணையிலும் அமைந்திருப்பது.

  உ-ம்: ஒரு காட்டில் ஒரு சிங்கம் இருந்தார்.

- **பால்வழு** - ஆண்பாலில் தொடங்கிய வாக்கியம் பெண்பாலிலோ, பெண்பாலில் தொடங்கிய வாக்கியம் ஆண்பாலிலோ முடிவது.

  உ-ம்: இளவரசன் வேட்டையாடுவதிலே சிறந்தவனாக இருந்தாள்.

- **எண்வழு** - வாக்கியத்தில் ஒருமை, பன்மை என்பன முரண்பட அமைவது.

  உ-ம்: சகல சம்பள ஏற்றங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

- **இடவழு** - வாக்கியத்தில் தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன முரண்பட அமைவது.

  உ-ம்: நாங்கள் கோவிலுக்கு வந்தார்கள்.

- **காலவழு** - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பவை முரண்பட அமைவது.

  உ-ம்: நேற்று அவர்கள் தோட்டத்தை உழுவார்கள்.

- **வினாவழு** - பொருத்தமற்ற வினாவைக் கேட்பது.

  உ-ம்: கட்டிற்கால் போல பஞ்சபாண்டவர் ஆறுபேரா?

- **விடைவழு** - வினாவுக்குப் பொருத்தமற்ற விடையைக் கூறுவது.

  உ-ம்: உனக்குச் சகோதரர்கள் எத்தனை பேர்? என்று கேட்டால் நான் தமிழிலேதான் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவேன் எனக் கூறுவது.

- **மரபுவழு** - தொன்றுதொட்டு வரும் மரபுக்கு மாறாகக் கூறுவது.

  உ-ம்: யானைக் குட்டி

- **சொல்வழு** - ஒரு சொல்லிற்குப் பதிலாக இன்னொரு சொல்லைப் பயன்படுத்துவது.

  உ-ம்: ஆசிரியர் வெண்கட்டியைப் பாவித்து (பயன்படுத்தி) எழுதினார்.

**வழாநிலை**

வழுவின்றி எவ்வாறு எழுதுவதெனக் கூறுவது.

- ஆண்பாலும் பெண்பாலும் சேர்ந்துவரும் இடங்களில் வாக்கியத்தைப் பலர்பாலில் முடிக்க வேண்டும்.

  உ-ம்: கண்ணனும் ராதையும் வந்தனர்.

- ஒன்றன்பாலோ பலவின்பாலோ என்ற ஐயம் வரும் இடங்களில் அஃறிணை இருபாற் பொதுப்பெயர் கொண்டு வாக்கியத்தை முடிக்கவேண்டும்.

  உ-ம்: ஒன்றோ பலவோ வயலுட் புகுந்த மாடு?

- உயர்திணையோ அஃறிணையோ என்ற ஐயம் வரும் இடங்களில் உரு, வடிவம் முதலிய சொற்களைக் கொண்டு வாக்கியத்தை முடிக்க வேண்டும்.

  உ-ம்: ஆணா, பெண்ணா அங்கு தோன்றும் உரு.

**வழுவமைதி**

வழுவாக அமைந்த ஒரு வாக்கியம் சில குறிப்பிட்ட சூழ்நிலைகளிலே விதிவிலக்காக ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதி எனப்படும்.

- திணைவழுவமைதி

1. உயர்வு காரணமாக அஃறிணைப் பொருளையும் உயர்திணைப் பொருளோடு சேர்த்து உயர்திணை முடிவைக் கூறலாம்.

   உ-ம்: மூத்தோர் இளையோர் பசு பெண்டிர் என்று இவர்கட்கு

மூத்தோர், இளையோர், பெண்டிர் என்னும் உயர்திணைப் பொருள்களோடு பசுவும சேர்நது ‘இவர்கள்’ என்னும் உயர்திணை முடிவு பெற்றது.

2. இழிவு காரணமாக உயர்திணைப் பொருளும் அ.ஃ.றிணைப் பொருளோடு சேர்ந்து அ.ஃ.றிணை முடிவைப்பெறும்

உ-ம்: மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.

- பால் வழுவமைதி

1. தசரதன் நாட்டுமக்களைத் தாய்போலப் பாதுகாத்தான். - தசரதன் தந்தை போல என வரவேண்டும்.

2. சமூக மதிப்புக்காரணமாக ஒருவன்/ ஒருத்தியை அவர் என அழைப்பது.

- பால் வழுவமைதி

இரண்டு கண்ணும் சிவந்தது. - சிவந்தன என்று பன்மையில் வரவேண்டியது ஒருமையில் வந்துள்ளது.

- இட வழுவமைதி

நீங்கள் எல்லோரும் வந்தீர்கள் - எல்லீரும் என வரவேண்டும்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- வழுவகைகள் எழுதிய டிமைன்தாள்
- பொருத்தமான செயற்பாட்டுப்பத்திரம்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- வாக்கியங்களில் ஏற்படும் வழுக்கள் பற்றியும் வழாநிலை, வழுவமைதி பற்றியும் கூறுவார்.
- வழுக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு கூறுவார்.
- வழுவுள்ள வாக்கியங்களைத் திருத்தி எழுதுவார்.
- வாக்கியங்களை வழுவின்றி எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 7.0 | : | மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | 7.4 | : | வாக்கிய வகைகளையும் அவற்றின் அமைப்பையும் அறிந்து, அவற்றைப் பொருத்தமுறப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | | : | நிறுத்தக்குறியீடுகள் |
| **பாடவேளைகள்** | | : | 04 |

### கற்றற் பேறுகள்:

- நிறுத்தக்குறியீடுகளின் வகைகள் பற்றி அறிந்து கூறுவார்.
- நிறுத்தக்குறியீடுகள் பயன்படும் இடங்கள் பற்றி விளக்கிக் கூறுவார்.
- நிறுத்தக்குறியீடுகளைப் பொருத்தமுற வாக்கியங்களில் அமைத்து பொருள் தெளிவுடன் எழுதுவார்.

### பாடத்தைத்திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- நிறுத்தக்குறியீடுகள் இடப்படாத வாக்கியங்களைக் காட்சிப்படுத்தி அவற்றில் இடப்படவேண்டிய குறியீடுகள் எவையெனக் கேட்டுக் கலந்துரையாடுதல்.
- நிறுத்தக் குறியீடுகளின் வகைகளைக் காட்சிப்படுத்த வழிகாட்டல்.
- ஒவ்வொன்றினதும் பயன்பாடுகளை உதாரணங்களுடன் விளங்கிக் கூற வைத்தல்.
- வாக்கியங்களைக் கொடுத்து, நிறுத்தக் குறிகளைச் சரியாக இடுவதற்கு வழிப்படுத்தல்.
- நிறுத்தக்குறியீட்டின் வகைகளைக் கூற வழிப்படுத்தல்.
- வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறியீடுகளைப் பயன்படுத்த வழிப்படுத்துதல்.

### முதன்மைப்பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்

வாக்கியங்களைப் பொருள்மயக்கமின்றி எழுதவும் உரிய இடைவெளிவிட்டு வாசிப்பதற்கும் நிறுத்தக்குறிகள் பயன்படுகின்றன.

1. முற்றுப்புள்ளி / முடிப்பிசைக்குறி (.)
   பின்வரும் சந்தர்ப்பங்களில் இடப்படும்.

   அ. வினாவும், மெய்ப்பாடும் தவிர்ந்த ஏனைய வாக்கியங்களின் இறுதியில்.
   உ-ம்: இலங்கை எமது தாய்நாடு ஆகும்.
   ஆ. சொற்களைச் சுருக்கி எழுதும் இடங்களில்
   உ-ம்: அ. மி. த. க பாடசாலை

2. காற்புள்ளி / உறுப்பிசைக்குறி (,)

   அ. ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்ச்சொற்கள், சொற்றொடர்கள் அடுத்துவரும் போது
   உ-ம்: கடையில் மா, அரிசி, சீனி, பருப்பு ஆகிய பொருட்களை வாங்கினேன்.
   ஆ. பொருள்மயக்கம் ஏற்படும் இடங்களில் மயக்கத்தை நீக்குவதற்கு
   உ-ம்: ஆசிரியர், தானே எனக்கு அதைக் கூறினார்.
   இ. ஒருவரை விழித்து அழைக்கும் போது
   உ-ம்: அன்பு நண்பா, மகனே,
   ஈ. தன்கூற்றாக அமையும் வாக்கியத்தில் கூற்றுக்குரியவரின் பெயரின் முன்னால்
   உ-ம்: சிங்கம், "நானே இந்தக் காட்டுக்கு ராஜா" எனக் கூறியது.
   உ. முகவரிகளில் இறுதிச்சொல் தவிர்ந்த ஏனைய சொற்களின் முன்
   உ-ம்: பிரதேச செயலாளர்,
   பிரதேச செயலகம்,
   உடுவில்.

ஊ. பல தனிவாக்கியங்கள் இணைந்து தொடர்வாக்கியமாகும் போது வினையெச்சங்களை அடுத்து இடப்படும்.

உ-ம்: அவன் காலையில் எழுந்து, பல்துலக்கி, குளித்து, உடையணிந்து கொண்டு பாடசாலைக்குப் போனான்.

3. அரைப்புள்ளி / தொடர்பிசைக்குறி (;)

அ. ஓர் எழுவாயின் ஒன்றுக்கு மேற்பட்ட செயல்களைக் கூறும் போது.

உ-ம்: பரீட்சையில் சித்தியடைந்த மாறன் மகிழ்ச்சியால் ஆடினான்; பாடினான்; துள்ளிக் குதித்தான்.

ஆ. இணைப்பிடைச் சொற்களை அடுத்து

உ-ம்: இன்று கடும் மழை; ஆகவே, வகுப்புகள் நடை பெறவில்லை.

4. முக்காற்புள்ளி / விளக்கிசைக்குறி (:)

அ. பட்டியலைக் கொண்டுவரும். அவையாவன, பின்வருமாறு முதலிய சொற்களின் பின்னால்

உ-ம்: பஞ்சபூதங்கள்: நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்துமாம்.

அட்டவணை அடுத்தவரியில் இடம்பெற்றால் முக்காற்புள்ளியை அடுத்துச் சிறுகோடு இடப்படும்.

உ-ம்: தமிழ்த்தினப் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் விபரம் பின்வருமாறு :-

கண்ணன்
செந்தூரன்
பரணிதரன்

ஆ. இருவருக்கிடையேயான உரையாடலை எழுதும்போது முக்காற்புள்ளி இடம்பெறும்.

உ-ம்: ஆசிரியர்: சிகிரியா ஓவியங்களைப் பார்த்திருக்கிறீர்களா?
மாணவன்: இல்லை, நாங்கள் ஒருபோதும் பார்த்ததில்லை.

இ. கணிதத்தில் விகித எண்களுக்கு இடையில்

உ-ம்: 7 : 3

ஈ. சிறுதலைப்பின் இறுதியில்

உ-ம்: நேரம்:
இடம்:
தலைவர்:

உ. பிரதான கூற்றுக்குப் பின்வரும் கூற்று விளக்கமாக அமையுமிடத்தில்

உ-ம்: கிணறு நீண்டகாலமாக இறைக்காமல் கிடந்தது: அங்கே பற்றை வளர்ந்து போயிருந்தது.

5. வினாக்குறி ( ? )

அ. வினா வாக்கியத்தின் இறுதியில்

உ-ம்: 1996 இல் உலகக்கிண்ணத்தை வென்ற கிரிக்கட் அணி எது?

ஆ. சொல்லப்படும் விடயம் சந்தேகத்திற்கு இடமானதாக இருந்தால் வாக்கியத்தின் இறுதியில் அடைப்புக்குறிக்குள் வினாக்குறி இடப்படும்.

உ-ம்: அமெரிக்க ஜனாதிபதியின் வெற்றியின் பின்னால் ரஷ்ய உளவுப்பிரிவு இருந்ததாகக் கூறப்படுகிறது (?)

6. மேற்கோட்குறி ( “ ” )

அ. ஒருவரது கருத்தை அவரது கூற்றாகவே தருமிடங்களில்

உ-ம்: “பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்ட யானோ அரசன்?” எனப் பாண்டியன் கேட்டான்.

7. விட்டிசைக்குறி ( - )

அ. கருத்துச் சடுதியாகத் திரும்பும் இடங்களில்
உ-ம்: அந்தப் பெண் - அவளை முன்னர் எங்கேயோ பார்த்திருக்கிறேன்.
ஆ. குறித்த ஒரு சொல்லிற்கு அழுத்தம் கொடுக்கவும்
உ-ம்: இத்தனை சொற்களைக் கையாண்டும் - கருத்து தெளிவாகவில்லை.
(கருத்து என்ற சொல்லுக்கு)
இ. வெண்பாவில் தனிசொல்லுக்கு முன்
உ-ம்: பாலும் தெளிதேனும் பாகும்பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
ஈ. சொற்களைச் சுருக்கி முதல் எழுத்தையும் இறுதி எழுத்தையும் மட்டும் எழுதும் இடங்களில்
உ-ம்: (உதாரணம் உ-ம்)
உ. காலம், இடம் என்பவற்றின் தொடர்ச்சியைக் குறிக்க
உ-ம்: தை - மாசி
கொழும்பு - யாழ்ப்பாணம்
காலை 8 - மாலை 4

8. மெய்ப்பாட்டுக்குறி / உணர்ச்சிக்குறி ( ! )

அ. வியப்பு, விருப்பம் முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் இடைச்சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களின் பின்னர்
உ-ம்: ஓ! எவ்வளவு அழகான பூக்கள்!
ஆ. முன்னிலையில் இல்லாத ஒருவரை/ ஒன்றை, இறந்து போன ஒருவரை/ ஒன்றை விளித்துச் சொற்பொழிவு, பாட்டு என்பவற்றிற் சொல்லும் போது அவ்விளிப்பெயரின் பின்னே உணர்ச்சிக்குறி வரும்.
உ-ம்: மகாத்மா காந்தியே! நீங்கள் சொன்ன அகிம்சையை இன்றைய உலகில் எங்கும் காணமுடிவதில்லை!
விதியே! தமிழ்ச்சாதியை என்ன செய்ய நினைத்தாய்!

## தரவிருத்தி உள்ளீடுகள்

- நிறுத்தக்குறியீடுகள் உள்ள வாக்கியங்கள் எழுதிய டிமைன்தாள்.
- செயற்பாட்டுப் பத்திரம்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- நிறுத்தக்குறியீடுகளின் வகைகளை அறிந்து கூறுவார்.
- நிறுத்தக்குறியீடுகளின் பயன்பாடுகளை விளங்கிக் கூறுவார்.
- நிறுத்தக்குறியீடுகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தி வாக்கியங்கள் எழுதுவார்.

# தரம் - 13

## மூன்றாந் தவணை


| இல | விடய உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 01 | கட்டுரையாக்கம் | 102 - 103 |
| 02 | கவிதை - தொண்டு | 104 - 105 |
| 03 | கட்டுரை - சம்பாஷணை ஒரு கலை | 106 - 107 |
| 04 | ஈழத்து இலக்கிய வரலாறு 20 ஆம் நூற்றாண்டு - கவிதை | 108 - 110 |
| 05 | நாவல் | 111 - 115 |
| 06 | சிறுகதை | 116 - 119 |
| 07 | இலக்கணம் - அணியியல் | 120 - 124 |

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 4.0 | : | இலக்கியங்களைக் கற்பதனூடாகத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | 4.2 | : | ஆக்கங்களை வாசித்துப் பெற்ற அனுபவத்தின் ஊடாகச் சுய ஆக்கங்களைப் படைப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | | : | ஆக்கங்களை எழுதுதல் - கட்டுரை |
| **பாடவேளைகள்** | | : | 03 |

**கற்றற் பேறுகள்**

- பல்வேறு ஆக்கங்களை வாசிப்பதன் மூலம் தமது அனுபவங்களைத் தொடர்புபடுத்திக் கட்டுரை எழுதுவார்.
- தலைப்புக்கு ஏற்ற தகவல்களைத் திரட்டி, தொகுத்து கட்டுரை எழுதுவார்.
- கட்டுரை நுட்பங்களைப் பொருத்தமாகப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- சிறந்த கட்டுரைகளை மாணவர்கள் வாசித்து அவை பற்றிக் கலந்துரையாடுதல்.
- தலைப்புக்கேற்ற தகவல்களைத் திரட்ட வழிகாட்டுதல்.
- கட்டுரைக்கான சட்டகம் பற்றிக் கலந்துரையாடி எழுத வழிகாட்டல்.
- தலைப்புக்குப் பொருத்தமாகச் சேகரித்த தகவல்களை ஒழுங்குபடுத்தி, கட்டுரை எழுத வழிகாட்டுதல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்**

**பொதுநீதி தொடர்பானவை.**

உ+ம் :- கற்றனைத்தூறும் அறிவு - கட்டுரை

**முகவுரை**

தலைப்பினை விளக்கி எழுதுதல்.

**விடய உள்ளடக்கம்**

நாம் கற்கும் அல்லது வாசிக்கும் முறையிலேயே எமது அறிவின் பெருக்கமும் விரிவும் தங்கியுள்ளது. வாசித்துச் சேர்க்கும் தரவுகளிலேயே அறிவு செம்மையடைகின்றது. இளமையிலிருந்து முதுமைவரையும் கண்டதையும் வாசித்தல / கற்றல். ஒரு துறையில் நிபுணத்துவம் பெறுவது கற்றலிலேயே தங்கியுள்ளது. அனுபவக்கல்வியின் முக்கியத்துவம். கால மாற்றத்திற்கேற்ப அறிவும் மாறுவதால் எப்போதும் கற்றுக்கொண்டே இருப்பதுதான் அறிவை வளர்க்கும். தொழிலில் இருந்து கொண்டே மேலும் கற்பது, தொழிற்கல்வியில் புதுப்புது அனுபவம் பெற உதவும்.

**முடிவுரை** -

தான் முன்வைத்த சகல தரவுகளையும் தொகுத்து, கட்டுரையைப் பூரணப்படுத்தல்.

**விஞ்ஞானம் சார்ந்தவை**

உ-ம் விஞ்ஞானமும் சமூகமும்

**முகவுரை**

சமூகத்தின் தேவைகளின் பல்வகைமையை விளக்கி விஞ்ஞானத்தின் மூலமான சமூக நிறைவை எடுத்துரைத்தல்.

**விடய உள்ளடக்கம்**

விஞ்ஞானமும் சமூகமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள்ளன.

மனித அறிவியலின் வியத்தகு வளர்ச்சியில் புதிய கண்டுபிடிப்புக்கள்.

துறைசார்ந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களும், அவற்றின் சமூகப் பயன்பாடுகளும்.

- வைத்தியம்
- விவசாயம்
- விண்வெளி ஆய்வுகள்
- போக்குவரத்து
- கல்வி
- வாழ்வாதாரத் தேவைகள்

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களால் சமூகத்திற்குக் கிடைத்த நன்மைகள்.

பயனுள்ள வகையில் விஞ்ஞானத்தைப் பயன்படுத்துதல்.

**முடிவுரை**

விஞ்ஞானமும் - சமூகமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவாறு இணைந்துள்ளமையும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதன் அவசியமும்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- கட்டுரைக்கான சட்டகம் எழுதிய டிமைன் தாள்.
- மேற்கோள்கள் (பாடல், கூற்றுகள்)
- முடிவுரை

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- சிறந்ததொரு கட்டுரையை வாசித்து, அது பற்றிய தமது கருத்துக்களைக் கூறுவார்.
- தலைப்புக்குப் பொருத்தமான தகவல்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்துவார்.
- கொடுக்கப்பட்ட தலைப்புகளுக்குப் பொருத்தமாகச் சட்டகம் அமைப்பார்.
- கட்டுரை நுட்பங்களைக் கருத்திற் கொண்டு கட்டுரை ஒன்றை எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 4.0 | : | இலக்கியங்களைக் கற்பதனூடாகத் தரம் வாய்ந்த ஆக்கங்களைப் படைப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | 4.1 | : | பல்வேறு ஆக்கங்களை வாசித்துக் கிரகித்து, அவற்றில் இடம்பெறும் மொழிக்கூறுகளைப் பகுத்து, கருத்துக்களை முன்வைப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | | : | கவிதை - தொண்டு |
| **பாடவேளைகள்** | | : | 03 |

**கற்றற் பேறுகள்**

- கவிதையின் மையக் கருத்தினை அறிந்து கூறுவார்.
- கவிஞர் கையாண்டுள்ள உத்திகளைக் குறிப்பிடுவார்.
- கவிதையில் நயந்த பகுதியை விளக்கிக் கூறுவார்.
- கவிதையில் கையாளப்பட்ட சொல்லாட்சி பற்றிக் கருத்துரைப்பார்.
- கவிஞரது மொழிக்கையாள்கை பற்றி எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- கவிதையின் ஆசிரியர் பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்ய வழிகாட்டல்.
- கவிதையை மாணவர்கள் வாசிக்க வழிப்படுத்தல்.
- கவிதையின் உள்ளடக்கத்தை, தலைப்புடன் தொடர்புபடுத்தி விளக்க வழிகாட்டல்.
- கவிதையில் காணப்படும் பிரதேச வழக்குச் சொற்களுக்கு விளக்கம் கூறுதல்.
- கவிதையிலுள்ள சிறப்புக்கள் பற்றிய கேள்விகளுக்கு விடை கூறச் செய்தல்.
- ஆசிரியர் தனது கருத்தினை வெளிப்படுத்தக் கையாண்டுள்ள உத்திகளைக் கண்டறியச் செய்தல்.
- இடம்பெற்றுள்ள அணிகளை விளக்க வழிகாட்டல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்:**

**(அ) பாடல் ஆசிரியர் பற்றிய அறிமுகம்**

நீலாவணன் ஈழத்து முன்னணிக் கவிஞர்களுள் முக்கியமானவர். பெரியநீலாவணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது இயற்பெயர் கே. சின்னத்துரை (1931 - 1975) 1952 இல் 'பிராயச்சித்தம்' சிறுகதை மூலம் எழுத்துலகில் பிரவேசித்தார். 1953 இல் 'ஓடிவருவதென்னேரமோ'கவிதை மூலம் கவிதைத் துறையில் காலடி பதித்தவர். தமிழுணர்வு, ஆன்மீக உணர்வு, சமுதாய உணர்வு என்பன இவரது கவிதைகளில் விரவிக் காணப்படும். வழி, ஒத்திகை ஆகிய கவிதைத் தொகுதியும் வேளாண்மை என்ற காவியத்தையும் தந்துள்ளார்.

(ஆ) **கவிஞர் வெளிப்படுத்த விழைந்த விடயம்**:

"தொண்டு என்ற போர்வையில் சுரண்ட முற்படுவோரின் போலித்தனம்"

(இ) **கவிஞர் வெளிப்படுத்தும் / சொல்லும் விதம்**:

- தத்துவரூபமான வர்ணனை.
- கட்புலக் காட்சிச் சித்திரிப்பு.
- கதை சொல்லும் பாங்கு.
- பேச்சோசையோடு கூடிய எளிமையான மொழிப் பிரயோகம்.
  - பாத்திரத்தின் பேச்சு, கதை போல இருக்கின்ற கவிதைக்குள்,
- மரபு வழி யாப்பு, எதுகை மோனைகள் அமைந்திருத்தல்.
- மாட்டையும் காகத்தையும் குறியீடுகளாகக் கொண்டு கதைவடிவிற் கருத்துக்களை முன்வைத்தல்.
- சம்பவம், நிகழ்களம் பற்றிய நுட்பமான வர்ணனைகள்.
  - குஞ்சி நீர் ஓடை குறுமணலே வார்ந்திருக்கும்
    சாம்பிக் குருத்தும் சருகான வெள்ளறுகு
    கொசுக்கள் படை 'ஙொய்ங்ங்',
    சப்பளிந்து போன வயிறு
- அணிகளின் பயன்பாடு
  1. உவமை அணி
     'கட்டாதலைகின்ற காட்டெருமை போல் பேன்கள்'
  2. உருவக அணி
     'ஙொய்ங்ங் குழல்'
     'சாட்டை விசுக்கும் பசுவால்'

## **தரவிருத்தி உள்ளீடுகள்**

- 'நீலாவணன்' கவிதைகள் தொகுதி
- 'நீலாவணன்' பற்றிய கட்டுரைகள்
- பாடல் எழுதிய டிமைன் தாள்.

## **கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்**

- தலைப்புப் பொருத்தப்பாடு பற்றி விளக்கி எழுதுவார்.
- கவிதையில் இழையோடியிருக்கும் உணர்வினை இனங்கண்டு கூறுவார்.
- கவிஞர் கையாண்டுள்ள உத்திகளை எடுத்துக்காட்டுகள் ஊடாக முன்வைப்பார்.
- கவிதையில் காணும் நயத்தை எடுத்துரைப்பார்.
- கவிதையின் பாடுபொருளை அனுபவத்துடன் இணைத்துக் கூறுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 3.0 | : | உரைநடை இலக்கியங்களைக் கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன் வைப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | 3.1 | : | உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார். |
| **விடய உள்ளடக்கம்** | | : | சம்பாஷணை ஒரு கலை - கட்டுரை |
| **பாடவேளைகள்** | | : | 06 |

**கற்றற் பேறுகள்**

- சம்பாஷணை எனும் பதத்தினை விளங்கிக் கூறுவார்.
- நல்ல சம்பாஷணையின் இயல்புகளை முன்வைப்பார்.
- சிறந்த சம்பாஷணையாளர்களை இனங்கண்டு கூறுவார்.
- சம்பாஷணையொன்றினை நிகழ்த்திக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- தரப்பட்ட கட்டுரையை வாசிக்க வழிப்படுத்துதல்.
- கட்டுரையின் சாராம்சம் பற்றிக் கலந்துரையாடி எழுதுவித்தல்.
- சம்பாஷணையொன்றின் பண்புகளைப் பட்டியற்படுத்த வழிகாட்டுதல்.
- மாணவர்கள் சம்பாஷணையொன்றினை நிகழ்த்திக் காட்ட வழிப்படுத்துதல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்:**

**கட்டுரை ஆசிரியர்**

வ.ராமசாமி ஐயங்கார் (1889 - 1951)

- மகாகவி பாரதியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்.
- தமிழகக் கவிதை உலகில் பாரதிக்குரிய உன்னத ஸ்தானத்தை உணர்த்தியவர். தமிழ் மக்களை அறிவு பூர்வமாகவும் தர்க்கரீதியாகவும் சிந்திக்க வைப்பதில் ஆர்வமுடையவர்.
- அறிஞர் அண்ணாவால் ‘‘அக்கிரகாரத்து அதிசயமனிதர்’’ என்று போற்றப்பட்டவர்.
- சுதந்திரன் (தஞ்சை), மணிக்கொடி பத்திரிகைகளில் ஆசிரியர்.
  வர்த்தமித்திரன், பிரபஞ்சமித்திரன், தமிழ்நாடு முதலிய பல பத்திரிகைகளிலும் பணியாற்றியவர். இலங்கையில் வீரசேரி பத்திரிகையிலும் பணிபுரிந்தவர்.
- இவர் எழுதிய நாவல்கள் :- சுந்தரி, சின்னச்சாம்பு, விஜயா, கோதைத் தீவு.
- சிறுகதைகளும் எழுதியுள்ளார்.
- உப்புச்சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டதற்காகச் சிறையில் இருந்தபோது எழுதிய ‘ஜெயிலின் டயரி’ பின்னர் நூலாக வெளிவந்தது.

**ஆசிரியர் கூறவிழைந்த விடயம்**

- சம்பாஷணையின் போது இடம், காலம் அறிந்தும் ரசபாவத்தை உணர்ந்தும் பொருளை அனுவித்தும் பேச வேண்டும்.
- ஆசிரியர் அர்த்தம் நிறைந்த சம்பாஷணைகளை உதாரணம் காட்டி, அத்தகைய சம்பாஷணைகளே பயனுள்ளவை என வலியுறுத்துகிறார்.
  (உ-ம்) அரவிந்தர், மகாத்மாகாந்தி, பாரதியார், பேனார்ட்ஷா ஆகியோரின் உரையாடல்கள்.

**கட்டுரை கருத்துக்களை நிறுவப் பயன்படுத்திய உத்திகள்**

- மேனாட்டறிஞர்களின் கருத்துக்களை மேற்கோள்காட்டுதல்.
- வடமொழி, தமிழ் இலக்கியங்கள் கூறும் கருத்துக்களோடு இணைத்துக்காட்டுதல்.
- சாசனங்கள் கூறும் செய்திகளைத் தருதல்.
- கர்ண பரம்பரைக் கதைகளை ஆதாரம் காட்டுதல்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மாதிரி சம்பாஷணை - இறுவட்டு
- கட்டுரையில் இடம்பெறும் சிறந்த சம்பாஷணையாளர்களின் புகைப்படப்பிரதி

  (உ-ம்) அரவிந்தர், மகாத்மாகாந்தி, பாரதியார், பேனார்ட்ஷா
- சம்பாஷணை ஒன்றின் பண்புகள் எழுதப்பட்ட டிமைன்தாள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்**

- சம்பாஷணை என்பது ஒரு கலை என்பதை அறிந்து கூறுவார்.
- சிறந்த சம்பாஷணையின் பண்புகளைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்.
- புகழ்பெற்ற சம்பாஷணையாளர்களை இனங்கண்டு, அவர்கள் பற்றிக் கருத்துரைப்பார்.
- சம்பாஷணை ஒன்றினை விமர்சித்து, தமது கருத்துக்களை முன்வைப்பார்.
- மாதிரிச் சம்பாஷணை ஒன்றை நிகழ்த்திக் காட்டுவார்.

**தேர்ச்சி 6.0** : ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : காலப்பகுப்பின் பின்னணியையும் அவ்வக் காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அறிந்து கருத்துக்களை முன் வைப்பார்.

**விடய உள்ளடக்கம்** : ஈழத்திலக்கிய வரலாறு - கவிதை

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள்:**

- இருபதாம் நூற்றாண்டின் அரசியல், பொருளாதார, சமூகப் பின்னணிகளை விளக்குவார்.
- இருபதாம் நூற்றாண்டு ஈழத்து செய்யுள் இலக்கியப் போக்கினை அறிந்து கூறுவார்.
- ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் தோற்றம் வளர்ச்சி பற்றி விளக்குவார்.
- ஈழத்து நவீன கவிதைத் துறையின் முக்கிய ஆளுமைகள் பற்றி அறிந்து கூறுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்

- இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து அரசியல், பொருளாதார, சமூகப் பின்னணி குறித்துக் கலந்துரையாட வழிப்படுத்தல்.
- இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால ஈழத்துச் செய்யுளிலக்கியப் போக்குக் குறித்து விமர்சிக்க வழிகாட்டுதல்.
- நவீன கவிதையின் இயல்புகள் குறித்துக் கலந்துரையாடிக் கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளித்தல்.
- ஈழத்து நவீன கவிதையின் தோற்றம் போக்கு என்பன குறித்து விளக்குவதற்கு உதவுதல்.
- ஈழத்து நவீன கவிதையின் உள்ளடக்கம் உருவம் என்பன குறித்துக் கேட்டறிதல்.
- ஈழத்து நவீன கவிதையின் போக்குகளைத் தீர்மானித்த பிரதான கவிஞர்களையும் அவர்களது பிரதான கவிதைகளையும் அறிமுகம் செய்ய வழிகாட்டல்.

## முதன்மைப் பதங்கள் (key word) எண்ணக்கருக்கள்

- இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து அரசியல், சமூகப் பின்னணி
  - ♦ 1920களில் விடுதலை உணர்வு முனைப்புறுதல், 1930 சர்வசன வாக்குரிமை, அரசாங்க சபை அறிமுகமாதல், அரசியல் கட்சிகளின் உருவாக்கம், 1948 இல் சுதந்திரம், 1950 களின் பிற்காலத்தில் இனமுரண்பாட்டின் ஆரம்பம், 1990களில் இனமுரண்பாடு வலுவுறுதல், 1980களில் இனமுரண்பாடு உக்கிரமடைதல்.

- ♦ முதலாளித்துவ அமைப்பு வலுப்பெறுதல், சமூக சீர்த்திருத்த நாட்டம், அரச உத்தியோகங்களில் ஈடுபடல், நகர வாழ்க்கை, இலவசக் கல்வி அறிமுகத்தால் கல்வி சகலருக்கும் சாத்தியமாதல், நவீன தொழில் நுட்பங்களின் பயன்பாடு அதிகரித்தல், பத்திரிகைகள், சஞ்சிகைகள் அதிகரித்தல், நவீன அரசியல் சமுதாயச் சிந்தனைகள் தாக்கம் செலுத்துதல், இன முரண்பாட்டின் பாதிப்புக்கள்.

- நவீன கவிதையின் இயல்புகள்.
  - ♦ சமூக நோக்கு, சுதந்திர சமூக நீதி, சமூக சீர்த்திருத்தம், சமூக சமத்துவம், சமய சமரசம் பகுத்தறிவுச் சிந்தனைகள்.
  - ♦ தன்னனுபவம்
  - ♦ எளிமை
  - ♦ தற்புதுமை
  - ♦ யதார்த்தப்பண்பு
  - ♦ பேச்சோசை
  - ♦ செய்யுள் கட்டுப்பாடுகளை மீறல் (புதுக்கவிதை, வசன கவிதை)

- ஈழத்தில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால செய்யுள் இலக்கியங்கள்.
  - ♦ சமயம் தொடர்பானவை - குமாரசுவாமிப் புலவர்
  - ♦ சமூகச் சீர்திருத்தம் தொடர்பானவை - பாவலர் துரையப்பாபிள்ளை<br>- நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

- ஈழத்து நவீன கவிதையின் தோற்றம், வளர்ச்சி 1940 களின் பிற்பகுதி முதல்.
  - ♦ கிராமியம், காதல், குடும்பம், தமிழுணர்வு, இயற்கை முதலியன கவிதைப் பொருளாதல்.
  - ♦ மரபு சார்ந்த செய்யுள் வடிவங்களில் எளிய மொழி நடையில் பேச்சோசைப்பாங்குடன் கவிதைகள் அமைதல்.

- 1950 - 1980
  - ♦ மொழியுணர்ச்சி, முற்போக்குச் சிந்தனைகள், தொழிலாளர் வாழ்வியல்.
  - ♦ யாப்பை மீறிய நிலையில் கவிதை (புதுக்கவிதை) படைக்கும் போக்கு 1960களில் ஆரம்பமாதல்.

- 1980 முதல்
  - ♦ இனமுரண்பாடு, புலப்பெயர்வு, பெண்ணியம் முதலியன.
  - ♦ பிறமொழிக் கவிதைகள் மொழிபெயர்க்கப்படல்.

- ஈழத்தின் நவீன கவிதைப் போக்கின் பிரதிநிதிகளால் அமையும் கவிஞர்கள்.
  - ♦ பாவலர் துரையப்பாபிள்ளை, சோமசுந்தரப் புலவர், அல்வாயூர்ச் செல்லையா, மீனாட்சியம்மாள், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை முதலானோர் சமூக சீர்த்திருத்தம், தேசிய உணர்வு முதலான விடயங்களை எளிய நடையில் பாடிய வகையால் ஈழத்து நவீன கவிதையின் ஊற்றுக் கண்களாகிறார்கள்.

- ‘மகாகவி’, நீலாவணன், முருகையன் ஆகியோர் ஈழத்து நவீன கவிதையின் முன்னோடிகளாகிறார்கள்.
- சச்சிதானந்தன், காசியானந்தன், சக்தி பாலையா முதலானோர் தமிழுணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்த கவிஞர்கள்.
- பசுபதி, சுபத்திரன் முதலானோர் முற்போக்குவாத சிந்தனைகளை முதன்மைப்படுத்திய கவிஞர்கள்.
- தமிழோவியன், குறிஞ்சித் தென்னவன், முதலானோர் மலையகத் தோட்டத் தொழிலாளர் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு பாடினர்.
- தா. இராமலிங்கம், தருமு சிவராம், சோலைக்கிளி, முதலானோர் ஈழத்துப் புதுக்கவிதைத் துறையில் தாக்கம் செலுத்தியவர்கள்.
- புதுவை இரத்தினதுரை, சேரன், அஸ்ரப் சிஹாப்தீன், ஔவை முதலானோர் ஈழத்து இனமுரண்பாட்டின் பல்வேறு பரிமாணங்களைக் கவிதையில் வெளிப்படுத்தியவர்கள்.
- வ. செ. ச. ஜெயபாலன், திருமாவளவன், கி. பி. அரவிந்தன் முதலானோர் புலப்பெயர்வு அனுபங்களை கவிதையூடாகத் தந்தவர்கள்.
- சிவரமணி, ஆழியாள், சுல்பிகா முதலானோர் பெண்ணிலை நின்று கவிதை படைத்தனர்.
- நு.்.மான், அ. யேசுராசா, கோ. பத்மநாதன் முதலானோர் பிறமொழிக் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்தனர்.

## தரவிருத்தி உள்ளீடுகள்

- இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் - சி. மௌனகுரு, மௌ. சித்திரலேகா, எம். ஏ. நு.்.மான்.
- இலங்கைத் தமிழ் இலக்கியம் - சி. தில்லைநாதன்.
- திறனாய்வுக் கட்டுரைகள் - எம். ஏ. நு.்.மான்.
- ஈழத்து நவீன கவிதை - புதிய உள்ளடக்கங்கள், புதிய பார்வைகள் புதிய போக்குகள் - செ. யோகராசா.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- இருபதாம் நூற்றாண்டு ஈழத்து அரசியல், சமூக, பொருளாதார பின்னணியை விளக்குவார்.
- ஆரம்பகால தமிழ்க் கவிதைகளின் நோக்குகளையும் போக்குகளையும் எடுத்துரைப்பார்.
- ஈழத்து நவீன தமிழ்க்கவிஞர்களை அவர்களது போக்கின் அடிப்படையில் பகுத்து நோக்குவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 6.0 | : | ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந் கருத்துக்களை முன்வைப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | 6.1 | : | காலப்பகுதியின் பின்னணியையும் அவ்வக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்களையும் அறிந்து கருத்துக்களை முன்வைப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | | : | ஈழத்து இலக்கிய வரலாறு தற்காலம் - நாவல் |
| **பாடவேளைகள்** | | : | 05 |

**கற்றற் பேறுகள்**

- இருபதாம் நூற்றாண்டில் அரசியல், பொருளாதார, சமூக பின்னணி பற்றிக் கருத்துரைப்பார்.
- காலப்பின்னணியில் ஈழத்தில் நாவல் இலக்கியம் தோற்றம் பெற்ற காரணிகளை விளக்குவார்.
- ஈழத்தில் எழுந்த நாவல்களைக் கால அடிப்படையில் பட்டியல்படுத்துவார்.
- ஈழத்து நாவல் இலக்கியத்தின் பிரதான போக்குகள் பற்றி விளக்குவார்.
- நாவல் இலக்கியத்தின் பண்புகள் பற்றிக் கருத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- இருபதாம் நூற்றாண்டின் அரசியல், பொருளாதார பின்னணி பற்றி அறிவதற்கு வழிப்படுத்தல்.
- நாவல் இலக்கியம் தோன்றி வளர்வதற்கு ஏதுவான காரணிகள் பற்றிக் கலந்துரையாடி கேட்டறிதல்.
- கால அடிப்படையில் ஈழத்து நாவல்களை அவற்றின் போக்கின் அடிப்படையில் வகைப்படுத்தி விளக்க வழிப்படுத்தல்.
- ஈழத்து நாவல் இலக்கிய வளர்ச்சி, பண்புகள் பற்றிக் கலந்துரையாடுதல்.

**முதன்மைப் பதங்கள் (keyword) எண்ணக்கருக்கள்**

- ஈழத்தின் முன்னோடி நாவல்களும் அவற்றின் போக்குகளும்.
    - ♦ அசன்பேயுடைய கதை (1885) - அறிஞர் சித்திலெப்பை ஈழத்து முதல் நாவல்.
    - ♦ ஊசோன் பாலந்தை கதை (1891) - திருகோணமலை எஸ். சின்னத்தம்பி
    - ♦ மோகனாங்கி (1895) - தி. த. சரவணமுத்துப்பிள்ளை

- ஆரம்பகால நாவல்களின் பிரதான பண்புகள்.
    - ♦ காவிய மரபிலிருந்து விடுபடாத தன்மை.

- ♦ உயர் நிலை மாந்தரை நாயகராகக் கொள்ளுதல்.
- ♦ கதை நிகழ்களம் ஈழம் அல்லாது பிறதேசங்களாக அமைதல்.
- ♦ பாத்திர வர்ணனை, இயற்கை வர்ணனை அதிகளவில் இடம் பெறல்.
- ♦ அற்புத சம்பவங்களும் திடீர் திருப்பங்களும் நிறைந்தவையாகக் காணப்படல்.
- ♦ பாத்திர உரையாடல்கள் செந்நெறிப்பாங்கான மொழிநடையில் அமைதல்.

- இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால நாவல்கள்.
  - ♦ வீரசிங்கன் கதை அல்லது சன்மார்க்க ஜெயம் (1905) - சி. வை. சின்னப்பபிள்ளை
    (1916) - விஜெயசீலம்
  - ♦ நொருங்குண்ட இருதயம் (1914) - மங்கள நாயகம் தம்பையா
  - ♦ இராசதுரை (1924) - செம்பொன் சோதீஸ்வரர் செல்லம்மா.
  - ♦ நீலகண்டன் ஒரு சாதி வேளாளன் (1925) - இடைக்காடர்.
  - ♦ காசிநாதன் நேசமலர் (1924) ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை
  - ♦ கோபால நேசரத்தினம் (1926 - 1927)
  - ♦ துரைரத்தினம் நேசமணி (1927 - 1928)

- பண்புகள்.
  - ♦ ஈழத்தைக் களமாகக் கொண்டமைதல்.
  - ♦ சமூகம், சமயம் தொடர்பான பிரச்சினைகள் பேசுபொருளாக அமைதல்.
  - ♦ யதார்த்தப் பண்புடையவையாக அமைதல்.
  - ♦ உயிரோட்டமான பாத்திரப் படைப்பு.
  - ♦ தராதரத் தமிழிலான விவரிப்பும் பேச்சு வழக்கிலான உரையாடலும் அறிமுகமாதல்.

- 1930 முதல் சுதந்திரம் வரையிலான நாவல்கள்.
  - ♦ காந்தமலர் அல்லது கற்பின் மாட்சி (1936) - சி. வே. தாமோதரம்பிள்ளை
  - ♦ பவளகாந்தன் அல்லது கேசரி விஜயம் (1932) - வரணியூர் ஏ. சி. இராசையா
    எச். செல்லையா
  - ♦ சோமாவதி அல்லது இலங்கை இந்தியர் நட்பு (1940)
  - ♦ காந்தமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி (1937)
  - ♦ செல்வி சரோஜா அல்லது தீண்டாமைக்குச் சவுக்கடி (19 ) - எம். ஏ. செல்வநாயகம்
  - ♦ அன்னபூரணி (1942) - சு. சச்சிதானந்தன்
  - ♦ பாசம் (1947) - க. தி. சம்பந்தன்
  - ♦ முதற் காவல் (1942) ரஷ்ய நாவல் மொழிபெயர்ப்பு - இலங்கையர்கோன்

- ♦ அரங்கநாயகி (1934) ஆங்கில நாவலின் தழுவல் - வே. ஏரம்பமுதலி

- பண்புகள்.
  - ♦ சாதி ஒடுக்குமுறை முதலான சமூக அநீதிகளுக்கு எதிரான குரல் எழத்தொடங்குதல்.
  - ♦ குடும்பம், மனித உறவுகள் என்பவற்றுக்கு முதன்மையளித்தல்.
  - ♦ சமூக, அரசியற் பிரச்சினைகள் கவனத்திற் கொள்ளப்படுதல்.
  - ♦ கணிசமான நாவல்கள், மர்மநாவல்களாக அமைதல்.
  - ♦ மொழிபெயர்ப்பு, தழுவல் நாவல்கள் தோன்றுதல்.

- சுதந்திரம் பெற்றது முதல் 1969 வரை
  - ♦ விதியின் கை (1953) - கனக செந்திநாதன்
  - ♦ கொழுகொம்பு (1955) - வ. சு. இராசரத்தினம்
  - ♦ தென்றலும் புயலும் (1955) - இளங்கீரன்
  - ♦ நீதியே நீ கேள் (1959)
  - ♦ மலைக்கொழுந்து (1964) - நந்தி
  - ♦ நீண்ட பயணம் (1965)
  - ♦ சடங்கு (1966) - செ. கணேசலிங்கன்
  - ♦ செவ்வானம் (1967)
  - ♦ தூரத்துப் பச்சை (1964) - கோகிலம் சுப்பையா
  - ♦ சுடர் விளக்கு (1966) - ந. பாலேஸ்வரி
  - ♦ சொந்தக்காரன் (1968) - வா. பெனடிக்பாலன்
  - ♦ தீ (1961) - எஸ். பொன்னுத்துரை
  - ♦ சடங்கு (1966)

- பண்புகள்.
  - ♦ கிராமிய வாழ்வியல் வெளிப்படல்.
  - ♦ சாதி முரண்பாடு, வர்க்க முரண்பாடுகளுக்கு எதிரான குரலாக அமைதல்.
  - ♦ ஈழத்தைப் பிரதிபலிக்கும் நாவல்கள் பிரக்ஞை பூர்வமாக எழுதப்படல்.
  - ♦ பாலுணர்ச்சியை மையப்படுத்திய நாவல்கள் சில எழுந்தன.

- 1970களில்
  - ♦ பஞ்சமர் (1972) - டானியல்
  - ♦ செல்லும் வழியிருட்டு (1973) - சொக்கன்

- விடிவை நோக்கி (1973) - தெணியான்
- வாழ்க்கைப் பயணம் (1974) - நயீமா சித்தீக்
- மீட்டாத வீணை (1974) - ஏ. நித்தியகீர்த்தி
- காலங்கள் சாவதில்லை (1974) - தெளிவத்தை யோசப்
- புதிய தலைமுறைகள் (1976) - வை. அகமட்
- வரலாறு அவளைத் தோற்றுவிட்டது (1976) - கே. ஆர். டேவிட்
- போடியார் மாப்பிள்ளை (1976) - எஸ். ஸ்ரீ. ஜோன்ராஜன்
- காட்டாறு (1977) - செங்கையாழியான்
- புதிய சுவடுகள் (1977) - தி. ஞானசேகரன்
- சுமைகள் (1977) - தாமரைச் செல்வி
- தங்கச்சியம்மா (1977) - நந்தி

• பண்புகள்.

- ஈழத்தின் பல்வேறு பிராந்தியங்களிலிருந்தும் நாவல்கள் தோன்றுதல்.
- மண் வாசனையை வெளிப்படுத்தல்

  (உதாரணம்: காட்டாறு, காலங்கள் சாவதில்லை, போடியார் மாப்பிள்ளை)
- சாதிப்பிரச்சினை, தொழிலாளர் பிரச்சினை, சீதனப் பிரச்சினை முதலான சமூகப் பிரச்சினைகளை வெளிப்படுத்தல்.

• 1980 முதல் 2000 வரை

- இனிவானம் வெளிச்சிடும் - தமிழ்க்கவி
- ஒரு கோடை விடுமுறை - ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
- அயலவர்கள் - செ. கணேசலிங்கன்
- நியாயப்படுத்தப்பட்ட கொலைகள் - செ. யோகநாதன்
- மரணங்கள் மலிந்த பூமி - செங்கையாழியான்
- தேம்ஸ் நதிக் கரையில் - ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
- அழிவின் அழைப்பிதழ் - இ. தியாகலிங்கம்
- வேள்வித்தீ - தாமரைச் செல்வி
- சிதைவுகள் - தெணியான்
- ஒளிபரவுகிறது - திக்வல்லைக் கமால்
- கிராமத்துக் கனவுகள் - ஷம்ஸ்

- ♦ துயிலும் ஒரு நாள் கலையும் - கோகிலா மகேந்திரன்
- ♦ மாயினி - எஸ். பொன்னுத்துரை

- பண்புகள்
    - ♦ இனமுரண்பாட்டின் உக்கிரமும் அதன் விளைவுகளும் பிரதிபலித்தல்.

      (உதாரணம் : ஞாயப்படுத்தப்பட்ட கொலை, மரணங்கள் மலிந்த பூமி)
    - ♦ புலப்பெயர்வு அனுபவ வெளிப்பாடு.

      (உதாரணம் : தேம்ஸ் நதிக்கரையில், அழிவின் அழைப்பிதழ்)
    - ♦ பெண்ணிய நோக்கு.

      (உதாரணம் : துயிலும் ஒருநாள் கலையும், உலகமெல்லாம் வியாபாரிகள்)
    - ♦ சமூக மாற்றங்கள்.

      (உதாரணம் : கிராமத்துக் கனவுகள், பொற் சிறையில் வாடும் புனிதர்கள்)

## தரவிருத்தி உள்ளீடுகள்

- ஈழத்து தமிழ் நாவல் இலக்கியம்
- இலங்கையில் தமிழ் இலக்கியம்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- இருபதாம் நூற்றாண்டு அரசியல் சமூக பொருளாதார பின்னணிகளை விளக்கிக் கூறுவார்.
- ஆரம்பகால நாவலின் பண்புகளைப் பற்றி ஆதாரம் தருவார்.
- ஆரம்பகால நாவலின் பண்புகளிலிருந்து தற்கால நாவல்களின் பண்புகள் வேறுபடுமாற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குவார்.

**தேர்ச்சி** 6.0 : ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றுப் போக்குகளை அறிந்து கருத்துக்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம்** 6.2 : புலவர்கள் படைப்பாளிகளினது படைப்பாற்றல் திறன்களையும் படைப்புகள் பற்றியும் எடுத்துக் கூறுவர்.

**விடய உள்ளடக்கம்** : ஈழத்து இலக்கிய வரலாறு - சிறுகதை

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்** :

- ஈழத்தில் இக் காலப்பகுதியில் சிறுகதை தோன்றுவதற்கான சூழ்நிலை நிலவியமையை விளக்குவார்.
- ஆரம்பகாலத்து ஈழத்துச் சிறுகதைப் போக்குகளை முன்வைப்பார்.
- சிறுகதையின் உருவம் உள்ளடக்கம் மற்றும் எடுத்துரைப்பு முறைகளை விளக்குவார்.
- தற்காலச் சிறுகதைகளின் பண்புகளை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடல் தொடர்பான ஆலோசனைகள்**

- ஈழத்து இலக்கியப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களைக் கலந்துரையா வழிகாட்டல்.
- சிறுகதைகளை உள்ளடக்கங்களுக்கேற்ப வகுப்பதற்குக் வழிகாட்டுதல்.
- சிறுகதையின் பண்புகள் தொடர்பாகக் கலந்துரையாடி எழுதுவித்தல்.

**முதன்மைப் பதங்கள்** (Key words) / **எண்ணக்கருக்கள்:**

- ஈழத்தின் முன்னோடிச் சிறுகதையாசிரியர்களும் அவர்களது சிறுகதைகளின் இயல்புகளும் (1930 - 1940)
  - ♦ இலங்கையர்கோன் (வெள்ளிப்பாதசரம், அனுலா, மேனகை முதலானவை)
  - ♦ சி. வைத்தியலிங்கம் (பாற்கஞ்சி, பூதத்தேவன் கோட்டை, நெடுவழி முதலானவை)
  - ♦ க. தி. சம்பந்தன் (விதி, புத்தரின் கண்கள், தாராவாய் முதலியன)
- பண்புகள்
  - ♦ பெரும்பாலும் மனோரதியப் பாங்கான கதைகள்.
  - ♦ இலங்கையின் வரலாற்றுச் சம்பவங்கள் கதைப் பொருளாதல் (அனுலா, பூதத்தேவன் கோட்டை)
  - ♦ இதிகாசப் பகுதிகள் கதைப்பொருளாதல் (மேனகை)

- ♦ கிராமிய வாழ்க்கைச் சித்திரிப்பு (வெள்ளிப்பாதசரம், பாற்கஞ்சி)
- ♦ மன உணர்வுகள் நுட்பமான முறையில் வெளிப்படுத்தப்படல்.
- ♦ செந்நெறிப்பாங்கான விவரிப்பு.
- ♦ பொருத்தமான இடத்தில் பாத்திர உரையாடல்கள் பேச்சு வழக்கில் அமைதல்.

- 1940 - 1950
  - ♦ அ. செ. முருகானந்தன் (மனிதமாடு, பழையதும் புதியதும், மாடு சிரித்தது)
  - ♦ அ. ந. கந்தசாமி (நாயினும் கடையர்)
  - ♦ சு. வேலுப்பிளளை (சு. வே) - (பாற்காவடி)
  - ♦ கனக செந்திநாதன் (வெண்சங்கு)
- பண்புகள்
  - ♦ ஈழத்து வாழ்வியல் வெளிப்படுத்தப்படல்.
  - ♦ கதைநிகழ் காலத்தின் பண்பாட்டுக் கூறுகள் செம்மையாக வெளிக்கொணரப்படல்.
  - ♦ சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களும் அவற்றின் விளைவுகளும் கருத்திற் கொள்ளப்படுதல். (பழையதும் புதியதும், மனிதமாடு)
- 1950 - 1980
  - ♦ வ. அ. இராசரத்தினம் (தோணி)
  - ♦ டொமினிக் ஜீவா (பாதுகை, சாலையின் திருப்பம், தண்ணீரும் கண்ணீரும்)
  - ♦ டானியல் (வள்ளி, உலகங்கள் வெல்லப்படுகின்றன)
  - ♦ செ. கணேசலிங்கன் (சங்கமம், ஒரே இனம், நல்லவன்)
  - ♦ என். கே. ரகுநாதன் (நிலவிலே பேசுவோம், தசமங்கலம்)
  - ♦ நந்தி (ஊர்நம்புமா)
  - ♦ எஸ். பொன்னுத்துரை (அணி, தேர்)
  - ♦ காவலூர் இராசதுரை (குழந்தை ஒரு தெய்வம், ஒருவகை உறவு)
  - ♦ பித்தன் (பாதிக்குழந்தை, தாகம், நத்தார்ப்பண்டிகை)
  - ♦ செ. கதிர்காமநாதன் (வெறுஞ்சோற்றுக்கே வந்தது, ஒரு கிராமத்துப்பையன்)
  - ♦ அ. ஸ. அப்துஸ்ஸமது (எனக்கு வயது பதின்மூன்று)
  - ♦ மருதூர்க் கொத்தன் (ஒளி, கோபுரங்கள் சாய்வதில்லை, வேலி)

- பண்புகள்
    - ♦ இன உணர்வு தலையெடுத்தல்.
    - ♦ வர்க்க முரண்பாடுகளை வெளிப்படுத்தல்.

      (உதாரணம் : டொமினிக் ஜீவா, டானியல்)
    - ♦ சாதி அடக்கு முறையை எதிர்க்கும் போக்கு.

      (உதாரணம் : செ. கணேசலிங்கன், எஸ். கே. ரகுநாதன்)
    - ♦ இலங்கையின் பல்வேறு பிரதேசங்கள், இன குழுமங்களின் வாழ்வியலைப் பிரதிபலித்தல்)
    - ♦ பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள் பிரதிபலித்தல்.

      (உதாரணம் : பவானி ஆழ்வார்ப்பிள்ளை, புதுமைப்பிரியை)
    - ♦ உளவியல் அணுகுமுறை

      (உதாரணம் : நந்தி)
    - ♦ ஆன்மீகத் தேடல் (மு. தளையசிங்கம்)

**1980 களுக்குப் பின் ஈழத்துச் சிறுகதை.**

- தாமரைச் செல்வி, கோகிலா மகேந்திரன், மண்டூர் அசோகா, குந்தவை, ராணி சீதரன் போன்றோர் பெண் விழிப்புணர்வு தொடர்பான கதைகளை எழுதினர்.
- தமிழர் உரிமைப் பிரச்சினைகள், விடுதலை உணர்வு போன்றவற்றை மையப்படுத்தி ரஞ்சகுமார், உமாவரதராஜன் போன்றோர் எழுதினர்.

**பண்புகள்**

- இன முரண்பாட்டின் உக்கிரமும் அதன் விளைவுகளும் (கோசலை வாழ்தல் என்பது)
- புலப்பெயர்வு அனுபவ வெளிப்பாடு (உதாரணம் : நாளைக்கு இன்னொருத்தன், கற்புடைய விபச்சாரி)
- பெண்ணிய நோக்கு என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு சிறுகதைகள் எழுதப்பட்டன)

### தரவிருத்தி உள்ளீடுகள்

- இலங்கை தமிழ் இலக்கியம்
- ஈழத்துசிறுகதை வரலாறு
- சுதந்திரன் சிறுகதைகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- 20ஆம் நூற்றாண்டு அரசியல் பொருளாதார பண்பாட்டு பின்னணியை விளக்கிக் கூறுவார்.
- ஆரம்பகால ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்கள் பற்றிக் கூறுவார்.
- ஈழத்து இலக்கிய வரலாற்றில் சிறுகதை வளர்ச்சிக் காலகட்டங்களை வகுத்து நோக்குவார்.
- தற்காலச் சிறுகதையும் அதன் போக்குகளையும் ஒப்பிட்டுக் கூறுவார்.
- ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த படைப்பாளிகள் பற்றிக் கருத்துரைப்பார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | 7.0 | : | மொழியமைப்பை (மரபு, தற்காலம்) அறிந்து மொழியைச் செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | 7.4 | : | வாக்கிய வகைகளையும் அவற்றின் அமைப்பையும் அறிந்து, அவற்றைப் பொருத்தமுறப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | | : | இலக்கணம் - அணிகள் |
| **பாடவேளைகள்** | | : | 09 |

**கற்றற் பேறுகள்**

- அணி என்பதற்கான வரைவிலக்கணத்தை அறிந்து கூறுவார்.
- சொல்லணி, பொருளணிகளுக்கான வேறுபாட்டை விளக்குவார்.
- சொல்லணியின் வகைகளை உதாரணத்துடன் விளக்கிக் கூறுவார்.
- இலக்கியங்களில் இடம்பெறும் சொல்லணிகள், பொருளணிகளை இனங்கண்டு விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்**

- அணிச்சிறப்புக்கள் கொண்ட உரைநடைத் துணுக்குகள் செய்யுள்கள் சிலவற்றைக் காட்சிப்படுத்தி ஓசை நயத்துடன் வாசிக்க வழிகாட்டல்.
- சொல்லணி, பொருளணி போன்றவற்றை இனங்காண வழிப்படுத்தல்.
- உவமையணி பற்றியும், உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும் என்பது பற்றியும் வினாக்கள் கேட்டல்.
- வகைப்பாட்டிற்கு உதாரணங்கள் கூறி விளக்கி எழுத வழிகாட்டல்.

**முதன்மைப் பதங்கள் (keywords) எண்ணக்கருக்கள்**

- படைப்பாளிகளின் படைப்புகளுக்கு அவன் கையாளும் அணிகள் அழகு செய்கின்றன. சொல்லும் விடயத்தைக் கவர்ச்சியான முறையில் சொல்வதற்கு அணிகள் பயன்படுகின்றன.
- அணியிலக்கணம் கூறும் நூல்களுள் காலத்தால் முந்தியது தொல்காப்பியமாகும். தண்டியலங்காரம் பிற்காலத்தில் தோன்றிய அணியிலக்கண நூலாகும்.
- அணிகளைச் சொல்லணி, பொருளணி என இரு வகைப்படுத்துவர்.

**சொல்லணி**

- சொற்களை அழகுபடுத்த ஆங்காங்கே இலக்கியங்களில் கையாளப்பட்டு வந்த அணிகள் சொல்லணிகள் எனப்படும். எதுகை, மோனை, யமகம்(மடக்கு), திரிபு, சிலேடை என்பன சொல்லணிகளாகும்.

- செய்யுட் சீர்களிலோ உரைநடைச் சொற்களிலோ இரண்டாவது எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது எதுகை எனப்படும்.
- செய்யுட் சீர்களிலோ உரைநடைச் சொற்களிலோ முதலாவது எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது மோனை எனப்படும்.
- ஒரு செய்யுளில் ஒரு தடவை வந்த சொல்லோ தொடரோ மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத்தருமாயின் அது மடக்கணி எனப்படும். இதையே யமகம் என்றும் அழைப்பர்.

  (உ-ம்) அரவம் அரவம் அறியும்

- செய்யுள் ஒன்றில் ஒருதடவை இடம்பெற்ற சொல்லோ தொடரோ மீண்டும் மீண்டும் வந்து அதே பொருளைத் தருமாயின் அதனைச் சொற் பின்வருநிலை என்பர்.

  (உ-ம்) துப்பார்க்குத் துப்பாய துப்பார்க்குத்

  துப்பாய தூஉ மழை.

- செய்யுள்களிலோ உரைநடைகளிலோ ஒரு சொல்லினை அல்லது தொடரினைப் பல பொருள் விளங்க அமைத்துக் கூறுதல் சிலேடையணியாகும்.

  (உ-ம்) செங்கரங்களால் இரவு தீர்க்கும்.

  சூரியன் தனது சிவந்த கரங்களால் இருளை இல்லாதொழித்தலும் அரசன் ஈகையால் சிவந்த தனது கரங்களால் வறுமையை ஒழித்தலும் சிலேடையாக உணர்த்தப்பட்டுள்ளது. இங்கு இரவு என்பது இராத்திரி, இரத்தல் எனும் இருபொருள்களில் இடம் பெற்றுள்ளது.

**பொருளணி**

கூறுகின்ற முறை மூலம் இலக்கியங்களின் பொருளை அழகுபடுத்தி வரும் அணிகள் பொருளணிகளாகும். உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், தன்மை நவிற்சி, உயர்வு நவிற்சி, வேற்றுப்பொருள் வைப்பு, வேற்றுமை, பிறிதுமொழிதல் எனப் பொருளணி பல வகைப்படும்.

**உவமையணி**

வினை, பயன், மெய், உரு எனும் நான்கின் காரணமாக ஒரு பொருளை அதன் தன்மை கொண்ட மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமையணியாகும். ஒரு பொருளை அதனிலும் சிறந்த ஒரு பொருளுடன் ஒப்பிடுவதன் மூலம் சிறப்பிப்பது இதன் இயல்பாகும். தெரியாத ஒன்றைத் தெரிந்த ஒன்றின் மூலம் விளக்குவதே இதன் அடிப்படைப் பண்பாகும்.

உவமை அணியொன்றின் அம்சங்களாக உவமானம், உவமேயம், பொதுத் தன்மை, உவமை உருபு என்பன அமையும். உவமையணியிலிருந்தே ஏனைய அணிகள் தோற்றம் பெற்றதால் இது அணிகளுக்கெல்லாம் தாய் அணி எனச் சிறப்பிக்கப்படுகின்றது.

(உ.ம்) அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்.

| உவமானம் | உவமேயம் | பொதுத்தன்மை | உவமை உருபு |
|---|---|---|---|
| பளிங்கு | முகம் | பிரதிபலித்தக்காட்டுதல் | போல |

- “பொன்னொத்த மேனிப் புயலொத்த தடக்கையான்”

1) பொன் போன்ற மேனி இராமனின் மேனி - பண்பு

2) புயல் ஒத்த கரங்கள் இராமனின் கரங்கள் - பயன்

“மறு விலா தெழுந்த முழுமதி போல் முகமது நபி பிறந்தனரே”

3) களங்கமற்ற சந்திரன் போன்றது முகம்மது நபியின் அழகு - மெய் (வடிவு)

4) புலி போலப் பாய்ந்தான் - தொழில்(வினை)

உவமையணியானது, எடுத்துக்காட்டுவமை, இல்பொருளுவமை, ஐயவுவமை, இன்சொல் உவமை, மாலை உவமை எனப் பல வகைப்படும்.

1) **இல்பொருளுவமையணி**

உலகில் இல்லாத ஒரு பொருளை உவமானமாக்கி கூறவந்த பொருளின் தன்மையை விளக்குதல் இல்பொருளுவமையணி ஆகும். இல்லாத பொருளை இருப்பது போல உவமையாக்கிக் கூறுவது இல்பொருளுவமையணியாகும்.

“செந்நெருப்பினைத் தகடு செய்து பார் ஒக்கும் அச் செந்தரைப்பரப்பு.....” –
கலிங்கத்துப் பரணி (காடு)

போர் நடந்த களத்தின் தன்மை பற்றிக் கூறவந்த கவிஞர், சிவந்த நெருப்பைத் தகடாகச் செய்தது போன்றது என்கிறார். நெருப்பைத் தகடு செய்வது உலகில் இல்லாத ஒன்று.

2) **ஐயவுவமை**

உவமையையும் பொருளையும் ஐயுற்று உரைப்பது ஐயவுவமையாகும். தொல்காப்பியர் இதனைத் தடுமாறுவமை என்கிறார்.

“தா(து) அளவி வண்டு தடுமாறும் தாமரைகொல்

மாதர் விழியுலவு வான்முகங்கொல்”

இதில் தலைவியின் முகத்தைப் பார்த்து அது தாமரையா? அல்லது முகமா எனத் தலைவன் தடுமாடுகின்றானாம், ஐயம் கொள்கின்றானாம். தாமரையாகிய உவமையும் முகமாகிய பொருளும், வண்டாகிய உவமையும் விழியாகிய பொருளும் உறுதியாகத் தெரியாது ஐயமுற்று உரைத்ததால் இது ஐயவுவமையாயிற்று.

**உருவகவணி**

உவமையாகிய பொருளையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறுபாடு இல்லாமல் தவிர்த்து இரண்டும் ஒன்றே எனத் தோன்றுமாறு ஒருமித்து உரைக்கும் அணி உருவக அணியாகும். அதாவது உவமையணியில் வரும் உவமானம், உவமேயம் ஆகிய இரண்டையும் வேறாகக் கூறாமல் இரண்டும் ஒன்றே என்ற வகையில் கூறுவது உருவகமாகும். இதில் உவமேயப் பொருள் முன்னும் உவமைப் பொருள் பின்னும் அமைந்து வரும்.

இனிய கானங்களைத் தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் கானத்தை கானமெனக் கூறாமல் “கானமழை” என அதாவது, கானமாகிய மழை என விரித்தக் கூறுவது இவ்வணியாகும்.

நாற்குணமும் நாற்படையா வைம்புலனும் நல்லமைச்சா
வார்க்கும் சிலம்பே யணிமுரசா – வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு. (நளவெண்பா)

தமயந்தி பெண்மைக்குரிய சகல அம்சங்களும் பொருந்தியவளாக இருக்கிறாள் என்பதை நளனுக்கு இலகுவில் புரியவைப்பதாக அமைந்த இச்செய்யுள் ஒரு நாடு நாடாக இருக்கத் தேவையான அம்சங்களைக் கொண்டு உருவகப்படுத்திக் கூறுகின்றது.

**தற்குறிப்பேற்றம்**

அசையும் பொருள், அசையாத பொருள் ஆகிய இருவகைப் பொருள்களிடத்தும் இயற்கையாக நிகழும் தன்மையை விடுத்து வேறு ஒன்றினை ஏற்றிச் சுவை படக் கற்பனையாகக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும். (தன் குறிப்பு ஏற்றம் - தற்குறிப்பேற்றமாகும்) அதாவது, இயற்கையான பொருளினிடத்து கவிஞன் தன் கற்பனையை ஏற்றிக்கூறுவது தற்குறிப்பேற்றமாகும்.

தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் - வெய்யோனை
வாவு பரித்தேரேறி வாவென்றழைப்பது போல்
கூவினவே கோழிக்குழாம். (நளவெண்பா)

நளனைப் பிரிந்து தமயந்தி தவித்த போது கோழியினம் கூவியது. தமயந்தியின் துயரைத் தாங்க முடியாமல் அவை தமது கைகளாகிய சிறகுகளால் வயிற்றில் அடித்து அடித்து விரைவாக வந்து விடியலைத்தா எனக் கூவியதாகக் காட்டுகிறார் புகழேந்தி.

**உயர்வு நவிற்சியணி**

உள்ளதை உள்ளவாறு கூறாமல் கேட்போர் மகிழும் வண்ணம் பன்மடங்கு உயர்வாகப் பெருக்கி அழகுபடக் கூறுவது உயர்வு நவிற்சியணியாகும்.

அனுமன் கண்ட இலங்கையைக் கூற வந்த கவிஞர்

‘‘................................
வன்கொண்டல் விட்டுமதி முட்டுவன மாடம்’’

என இலங்கை மாநகரின் சிறப்பு, கவிஞரால் கற்பனைத்திறனுடன் உயர்வு நவிற்சியாகப் பாடப்பட்டுள்ளமையைக் காணலாம்.

**தன்மை நவிற்சியணி**

ஒரு பொருளினையோ அல்லது இயற்கைக் காட்சியினையோ அதன் இயல்புகள் உள்ளவாறே வெளிப்பட்டு நிற்கும் வண்ணம் மனதைக் கவரும் முறையில் கூறுவது தன்மை நவிற்சி அணியாகும்.

சிட்டுக் குருவியின் வர்ணனை

‘‘சிறிய தானியம் போன்ற மூக்கு,
சின்னக் கண்கள், சின்னத்தலை,
வெள்ளைக் கழுத்து ,
அழகிய மங்கல வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு’’

## தரவிருத்தி உள்ளீடுகள்

- சொல்லணி, பொருளணி பற்றிய விளக்க அட்டவணை.
- அணிகள் இடம்பெறும் பாடல் வரிகளைக் காட்சிப்படுத்தும் டிமைன் தாள்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்

- அணி என்பதற்கான வரைவிலக்கணங்களை விளக்கிக் கூறுவார்.
- சொல்லணி, பொருளணி என்பவற்றினை வேறுபடுத்திக் காட்டுவார்.
- அணிவகைகளை உதாரணங்களுடன் எடுத்துக் காட்டுவார்.
- தற்காலச் சிறுகதையும் அதன் போக்குகளையும் ஒப்பிட்டு கூறுவார்.
- இலக்கியங்களில் அணிகளை இனங்கண்டு கூறுவார்.